# ஜோண் உவெஸ்லியின்
# பன்னிரண்டு அருளுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mrs. Pathmanathan

METHODIST CHURCH

SRILANKA.

SIS. P. PATHMANATHAN.

# ஜோன் உவெஸ்லியின் பன்னிரண்டு அருளுரைகள்

## (மெதடிஸ்த போதனையின் சாராம்சம்)

ஆக்கியோன்: அருட் திரு. எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


திருப்பேரவைத் தலைவரின் முகவுரை ................. 02

ஆசிரியர் முகவுரை ................. 03

அருளுரைகள்

1. விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு ............... 04-08
2. விசுவாசத்தினாலாகும் நீதி ............... 09-14
3. கடவுளுடைய அரசுக்குள் வரும் வழி ............... 15-18
4. ஆவியானவரின் முதற்கனிகள் ............... 19-22
5. அடிமைத்தனத்தின் ஆவியும், மைந்தர்களாக்கும் ஆவியும் ............... 23-29
6. ஆவியானவரின் சாட்சி-1 ............... 30-34
7. ஆவியானவரின் சாட்சி-2 ............... 35-39
8. விசுவாசிகளிடத்தில் உள்ள பாவம் ............... 40-46
9. விசுவாசிகள் மனமாற்றம் அடைதல் ............... 47-51
10. நமதாண்டவர் மலை மீது வழங்கிய அருளுரை -2 ....... 52-57
11. திருக்கட்டளை: அதன் துவக்கம், தன்மை, இலட்சணம், உபயோகம் ............... 58-62
12. சாத்தானின் தந்திரங்கள் ............... 63-67


*----------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

*---------*

நமது திருஅவையின் பலவருடத் தேவைகளுள் ஒன்றான 'யோன் உவெஸ்லியின் அருளுரைகள்', நமது நாட்டு மொழியில் வெளிவருவது, நமக்கு மகிழ்ச்சியையளிக்கிறது.

'மெதடிஸ்த சாராம்சம்' என்னும் மூல நூல், அருட்திரு: ஜோன் உவெஸ்லி அவர்களின் XLIV அருளுரைகளிலிருந்து எடுக்கப்பட்ட XII அருளுரைகளின் தொகுப்பு நூலாகும். -இவை மெதடிஸ்த கோட்பாடு அடித்தளத்தின் ஒரு பகுதியாகும்.

இச்சிறிய நூலில் காணப்படுபவை, மூல மொழியாகிய ஆங்கிலமொழியின் தமிழாக்கம் அல்லது ஆக்கியோனது சொந்தநடை ஆக்கம் எனலாம்.

இவ்வருளுரைகள், உள்ளூர் அருளுரைஞராக ஆக விரும்புவோருக்கும், திருப்பணிக்கெனத் தம்மை ஒப்புக்கொடுப்போருக்கும் மாத்திரமல்ல, ஏனைய சாதாரண உறுப்பினர்க்கும் பயன்தரும் வகையில் எழுதப்பட்டுள்ளன என்பது நமது நம்பிக்கை.

ஆங்கில மொழி ஆக்கத்தை ஆதாரமாகக் கொண்டு, இவற்றைத் தமிழ்மொழியில் எழுதித் தந்த இந்நூலாசிரியர் அருட்திரு. எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன் அவர்களுக்கு, எம் நன்றி உரித்தாகுக.

அருட்திரு. உறரல்ட் ஏ பெர்னாந்து
பேரவைத் தலைவர்.
இலங்கை மெதடிஸ்த திருஅவை.

மெதடிஸ்த தலைமையகம்,
கொழும்பு-03.

சித்திரை 1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் முகவுரை

இந்நூல் ஜோன் உவெஸ்லி அவர்களின் அருளுரைகளில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, 1938ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அருளுரைகளின் சுருக்க ஆக்கமாகும். சுருக்க ஆக்கத்தை, நான் ஆங்கில மொழியிலான அருளுரைகளை அடித்தளமாக வைத்தே என் சொந்த நடையில் ஆக்கினேன். ஜோன் உவெஸ்லி அவர்கள் தமது அருளுரைகளில் வெளிப்படுத்திய இறையியல் பிரதிபலிப்புகளில், ஒன்றுதானும் தவிர்க்கப்படவில்லை.

தெரிந்தெடுக்கப்பட்ட இவ்வருளுரைகள், மெதடிஸ்த போதனையின் சாரத்தை அடக்கியிருக்கின்றபடியால், "மெதடிஸ்த போதனையின் சராம்சம் (MARROW OF METHODISM), என்று அழைக்கப்பட்டது; இந்நூலுக்கு "ஜோன் உவெஸ்லியின் பன்னிரண்டு அருளுரைகள்" என்ற தலைப்பே கொடுக்கப்பட்டுள்ளது. நமது திருஅவையின் உள்ளூர் அருளுரைஞர்களும், திருப்பணிக்கென்று முன்வருவோரும் இவ்வருளுரைகளை கற்று அறிந்திருக்கவேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

இவ்வருளுரைகளில் அடங்கியிருக்கின்ற "நற்செய்திக் கிறிஸ்தவத்தின்" முக்கிய உண்மைகள், பதினெட்டாம் நூற்றாண்டு மக்களுக்கு எவ்வளவு பொருத்தமாய் இருந்தனவோ, அவ்வளவுக்கு இருபதாம் நூற்றாண்டு மக்களுக்கும் பொருத்தமாய் உள்ளன. ஜோன் உவெஸ்லி அவர்கள் அடைந்த ஆன்மீக அநுபவத்தைப் போன்ற அனுபவத்தை நாமும் அடையவேண்டும் என்பதும், அவ்வனுபவத்தைப் பெற்றபின் ஆண்டவர் இயேசுவுக்குரிய சாட்சிகளாய் நாம் விளங்கவேண்டும் என்பதுமே நமது திருஅவையின் அழைப்பாகும்.

இவ்வகையில், ஜோன் உவெஸ்லி அவர்களின் அருளுரைக் கருத்துக்களை, அருளுரைப்பீடங்களிலிருந்து ஆற்றுவதற்கு அழைப்புப் பெறும் அருளுரைஞர்கள் மாத்திரமல்ல, ஏனைய மெதடிஸ்தர்-மெதடிஸ்தர் அல்லாத கிறிஸ்தவர்களும் அறிந்து உணரவேண்டும் என்பதே என் அவாவாகும். இந்த நோக்கை, இந்நூல் அடையக் கூடுமே யாகில், இதனை நான் எழுதுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனை அடைந்தவனாவேன். இச்சிறுநூலை வெளியிடுவதற்கு முன்வந்த "உவெஸ்லி வெளியீட்டினருக்கும்", இதை எழுதுவதற்கு ஊக்கமளித்த எமது திருப்பேரவைத் தலைவர் அருட் திரு.ஹரல்ட் பெர்னாந்து அவர்களுக்கும் நண்பர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

கொழும்பு-06

ஐப்பசி 1989.

எஸ்.ஆர்.எஸ்.ஜெயச்சந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு
SALVATION BY FAITH

" கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;
இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" - எபே2:8

(குறிப்பு- ஒக்ஸ்போட் சர்வகலாசாலையினரை அவையினராய்க் கொண்டவர்களுக்கு, ஒக்ஸ்போர்ட் பரி.மரியாளின் தேவாலயத்தில்,1738 ம் ஆண்டு ஆனி மாதம் 11ம் தேதியன்று, இந்த அருளுரையை ஜோன் உவெஸ்லி ஆற்றினார். அவக்கத்தில் இது அச்சுறுவேறும் நோக்கத்தோடு ஆற்றப்படவில்லை. அச்சுருவாகிய பின்பே, இது கோட்பாட்டு அருளுரைகளில் ஒன்றாய் ஆகிற்று. அங்கிலிக்கன் திருஅவையைச் சேர்ந்த அறிஞர்களினாலேயே ஒக்ஸ்போர்ட் அருளுரைகள் ஆற்றப்பட்டன. மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஜோன் உவெஸ்லிக்குத் தருணம் கொடுக்கப்பட்டது. ----------------------------------------- இவ்வகையில் ஜோன் உவெஸ்லி; 1-ம், 2-ம், 4-ம், 13-ம் அருளுரைகளையும்; சார்ள்ஸ் உவெஸ்லி 3-ம் அருளுரையை யும் ஒக்ஸ்போர்ட்டில் ஆற்றும் தருணங்களைப் பெற்றனர்.)

அருளுரை

எல்லா நன்மைகளும் கடவுளுடையவையே , அவற்றில் எதையாகிலும் நாமாகப் பெறுவதற்கு அல்லது அடைவதற்கு நம்மில் எந்தவிதமான தகுதியுமில்லை. 'இந்த நற்செயலை நான் செய்து விட்டேன்' என்றும் நம்மில் எவரும் சொல்லவும் முடியாது:/ (ஏனெனில் ஏசாயா 49:4 இல் சொல்லப்பட்டிருக்கிறபடி.) கடவுளுடைய ஆவியானவரின் ஏவுதலினாலேயே நாம் செய்யும் நற்செயல்கள் செய்யப்படுகின்றன அல்லது செய்யும்படி நம் மனச்சாட்சி ஏண்டப்படுகின்றது. நாமாகவே நற்செயல்களைச் செய்ய இயலாததற்கான காரணம் என்னவெனில், கடவுளாய் நமக்கு அருளப்பட்ட 'கடவுள் சாயலை' நாம் இழந்துவிட்டதேயாகும். ஒரு கெட்ட மரம் நற்கனிகளைக் கொடுக்கவே முடியாது; அப்படிக் கொடுக்கக் கூடியதாய் இருந்தால் அது கடவுளுடைய செயலேன்றி வேறில்லை. அதுபோல் பாவிகளாகிய நாம் செய்யக்கூடிய நற்செயல்கள் ஒன்றாகிலும் நமக்குச் சொந்தமானவை அல்ல, அவை கடவுளுடைய கிருபையினால் வரும் ஈவுகளே. எனவே நமக்குச் சொந்தமில்லாத, நம்மால் உரிமை பாராட்ட முடியாத, கடவுள் நம்மிலும் நம்மூலமாயும் செய்யும் நற் செயல்களினால் நம்மை இரட்சிக்கவே முடியாது;- சிறிதளவு பாவமாயினும் இரட்சிக்க முடியாது. ஈற்றிலே எல்லாம் கடவுள் செயலாகவே முடிந்துவிடுகிறது. ஏனெனில் நாம் முன்பு கூறியதுபோல, நமது நற்செயல்களும் இறுதிக் கணிப்பில், கடவுள் செயல்களாகவே காணப்படும்.

எனவே மேற்கூறியவற்றை நாம் ஆராயும்போது, கடவுளுடைய கிருமையினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என் முடிவாகிறது. நம்மிடமிருந்து எதிர் பார்க்கப்படுவதெல்லாம் 'விசுவாசமே'; கடவுளுடைய கிருபைக்கு நாம் கொடுக்கும் மறு உத்தரவு பதில் நமது உறுதியான 'விசுவாசமே' (2 கொரி 12:9,எபே2:8, ரோமர் 5:8). நம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படும் இந்த விசுவாசத்தின் தன்மை எவை என்பதையும், இந்த விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சிப்பின் தன்மை எவை என்பதையும் பின்வருமாறு கண்ணோக்குவோம்:

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(அ) விசுவாசத்தின் தன்மை:

(1) இந்த கிறிஸ்தவ அறியாதோருக்கு (அவிசுவாசிகள்) இருக்குமாப் போன்ற நம்பிக்கை அல்ல. ஏனெனில், நாம் பொதுவாகப் பார்க்குமிடத்து, ஒரு அவிசுவாசியும்/புறமதஸ்தனும் 'கடவுள் இருக்கிறார்' என்பதை ஏற்றுக் கொள்ளுகிறான். கடவுள் மேல் அவனுக்குப் பயமுண்டு அன்புமுண்டு. ஆனால், தனது நற்செயல்களினால், புண்ணியங்களினால், கடவுளைத் திருப்திப்படுத்தி நற்கதி/இரட்சிப்பு அடையலாம் என அவன் நம்புகிறான். ஆனால் நாம் போதிக்கும் 'விசுவாசமோ', கடவுளுடைய கிருபையைத்தவிர வேறெதுவும் மனிதனை இரட்சிக்காது என நமக்கு அறிவுறுத்துகிறது. இவ்வுண்மையைத்தான் யோவான் நற்செய்தி 3ம் அதிகாரத்தில் காணப்படும் நிக்கோதேமுவின் கதையில் காண்கிறோம் ஏனெனில் அவன் 'கிரியை மார்க்கமாகிய' யூத மார்க்கத்தைத் தழுவியவன்; அவன் ஒரு பரிசேயன்.

(11) இந்த விசுவாசம் சாத்தானுக்கு/பசாசானவனுக்கு இருக்குமாப் போல் உள்ள விசுவாசமல்ல. ஏனெனில் பாசாசும் கடவுளை நம்புகிறான். இயேசு கடவுளுடைய மகன் என்பதையும், அவரே உலக இரட்சகர் என்பதையும் நம்புகிறான். லூக்கா 4:34 இல், இயேசுவை அவன் வெளிப்படையாக அறிக்கை செய்கிறான். அவன் கடவுள் பணியில் ஈடுபட்டுள்ளவர்களை, அறிவான். திருமறையையும் நம்புகிறான் (யாக்கோபு 2:19). ஆனால், இவனுடைய விசுவாசத்தில் காணப்படும் ஒரே அடிப்படைக்குறை என்னவெனில், அந்த விசுவாசம் அவனுடைய 'உள்ளத்தில்' இருந்து வருவதாய் இல்லை. அது அவனுடைய உள்ளத்துடையதாய் இருந்தால், அவன் சாத்தானாய் இருக்கமாட்டான்; கடவுளுடைய மகனாய் இருப்பான்.

(111) இந்த விசுவாசம் இயேசு இப்பூமியில் வாழ்ந்த காலத்தில், அவருடனிருந்த திருத்தூதரில் (அப்போஸ்தவர்) காணப்பட்ட விசுவாசத்தைப் போன்றதுமல்ல. அவர்கள் இயேசுவுக்காக எல்லாவற்றையும் துச்சமென எண்ணி, அவற்றைத் துறந்து அவர் பின் வந்தவர்கள்; இயேசுவின் திருப்பெயரில் வல்லமைச் செயல்களையும் அரிய செயல்களையும் செய்தவர்கள்; அருட் செய்திப் பணிக்கென பல தடவைகளில் இயேசுவால் அனுப்பப்பட்டவர்கள். ஆனால் நாம் இங்கே குறிப்பிடும் விசுவாசம் அவர்களுக்கு இருக்கவில்லை. இயேசு பிடிபட்டபோது, அவர்கள் சிதறுண்டு போனார்கள்; யூதருக்குப் பயத்தினால் பூட்டிய அறைக்குள் இருந்தார்கள். உயிர்த்தெழுந்த இயேசுவின் சந்திப்பிற்குப் பின்புதான் கிருபைக்குரிய விசுவாசம் அவர்களிலே காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(IV) நாம் இங்கே குறிப்பிடும் விசுவாசமோ, சிந்தையிலல்ல, இதயத்தில் தோன்றும் விசுவாசமாகும். 'இருதயம் அனலடைந்த' அநுபவத்தைப் பெற்றபின் தான், ஜோன் உவெஸ்லியும் மெய்விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டார். அது, இயேசுவின் வாழ்க்கை, திருப்பணி, பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை இருதயத்தில் அறிந்து பெறும் ஒரு நிச்சயமாய் இருக்கிறது. மனதிற்கு முற்றாய் இடமில்லை என்று சொல்லிவிடவும் முடியாது. ஒரு வாகனத்தைச் செலுத்துதல் போன்றதே 'அறிவு' ஆனால் அதன் யந்திரம் போன்றது 'இருதயம்'. எனவே, கடவுளுடைய கிருபைக்கு, ஏற்றமாறுத்தரமான 'விசுவாசம்' ஒருவனுடைய 'இருதயத்தில்' தோன்ற வேண்டும். அதுவே மெய் விசுவாசமாகும், இரட்சிப்புக்கு வழிவகுக்கும் விசுவாசம் அதுவே. இந்த விசுவாசத்தினால்தான் இரட்சிப்பு வருகிறது.

(ஆ) இப்படிப்பட்ட விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சிப்பின் தன்மை:

(I) அது; இங்கே, இப்போதே கிடைக்கும் இரட்சிப்பாகும். மனித வாழ்வின் முடிவில் அவனுடைய வாழ்வு முறையை முன்னிட்டுக் கொடுக்கப்படும் 'சம்பளம்' போன்றதல்ல அது. இரட்சிக்கப்பட்டீர்கள் என்பதுதான் சரி, இரட்சிக்கப்படுவீர்கள் என்பதல்ல. இயேசு தமது இரட்சிப்புப் பணியை முழு உலகிற்காகவும் செய்துள்ளார் என்பதை நான் ஏற்றுக் கொண்டால்; அதில் நானும் இப்போதே, இன்றே, இங்கேயே இரட்சிப்படைகிறேன் என்பவையும் அடங்கும்.

(II) இந்த 'இரட்சிப்பு' எல்லா வகையான பாவத்தையும் குற்றங்களையும் மன்னித்துவிடும் இரட்சிப்பாகும் (கொலோ 2:14). பாவம் என்று சொல்லும் போது, அச்சொல்; ஜன்ம பாவம், கர்ம பாவம், முற்காலப் பாவம், தற்காலப்பாவம் என்ற யாவையும் அடக்கி நிற்கின்றது. கடவுள் நமது பாவங்களுக்குத் தக்கதாய் தண்டிக்கப் போனால், எவனும் அத்தண்டனையில் இருந்து தப்பவே முடியாது. எனவே தான் கடவுள் நமது பாவங்களையெல்லாம் மன்னித்து, நம்மை இரட்சிப்பதற்கென்று, தமது ஒரே மகனாகிய இயேசுவை அனுப்பினார். 'இயேசு' என்றால், "மக்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவர்" என்ற பொருளாகும் (மத்1:21).

(III) இந்த இரட்சிப்பு பாவங்களை மன்னிக்கிற இரட்சிப்பாய் இருக்கிறபடியால், அது பாவ பெறுபேறாகிய 'பயத்திலிருந்தும்' நம்மை விடுவிக்கிறது. நம்மை அடிமைகளாக்கி அச்சத்தில் ஆழ்த்தும் ஆவியிலிருந்து (பயத்திலிருந்து) மீட்டு, நம்மைக் கடவுளின் மைந்தர்களாக்கும் ஆவியை இந்த இரட்சிப்பு நமக்களிக்கிறது (ரோமர் 8.15). நியாயத்தீர்ப்பின் பய ஆவியிலிருந்து இந்த இரட்சிப்பு நம்மை விடுதலையாக்கி, மகிமையின் ஆவியை நம் உள்ளத்தில் தருகிறது (ரோமர் 8:38,39).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(IV) பாவத்தின் 'வல்லமையில்' இருந்தும் இந்த இரட்சிப்பு நம்மை மீட்டு விடுகிறது. பாவத்தைச் சுமந்து நீக்கிடவே கிறிஸ்து தோன்றினார். அவருக்குள் நிலைத்திருக்கும் எவனும் பாவம் செய்யமாட்டான் (யோவான் 3:5,6). அதுபோல் கடவுளின் மைந்தரும் அவருக்குள் பிள்ளையாயிருக்கிறவனைக் காக்கிறார் (1யோவான் 5:18). பாவத்தின் வல்லமை ஒடுக்கப்படுகிறது.

(V) இவை மாத்திரமல்ல, இந்த இரட்சிப்பு ஒருக்காலும் பாவ ஆட்சிக்கு இடமளிக்காது, கடவுளுடைய சமாதானமே நம்மை ஆட்சி செய்யும்படி ஏவும் (கொலோ 3:15). மனம், வாக்கு, பாசம், காயம் இவை யாவும் பாவ ஆட்சியில் இருந்து விடுபடத்தக்கதாக, விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு இயங்கும். இந்த இரட்சிப்பை அடைந்த ஒருவன், கடவுளோடு ஒப்புரவு ஆகி, நீதிமானாக்கப்பட்டு, ஆவியினால் புதுப் பிறப்படைகிறான். இப்போதுதான் பிறந்துவிட்ட ஒரு குழந்தையைப் போல ஆகிவிடுகிறான் (யோவான் 3:5).

கடவுளுடைய 'கிருபையே' இரட்சிப்புத்தருகிறதென்றும், அதற்கு மனிதன் கொடுக்க வேண்டியது 'விசுவாசமே' என்றும், அப்படிப்பட்ட விசுவாசத்தின் தன்மை என்னவென்றும், அந்த விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பின் தன்மை எத்தகையது என்றும் இது வரை பார்த்தோம். நாம் கண்டுகொண்ட கருத்துக்கள் பற்றி எதிர்ப்புகள், ஆட்சேபனைகள் எழலாம். எனவே நாம் கடைசியாக சில எதிர்ப்புகள் பற்றியும், அவற்றிற்கு நாம் கொடுக்கக்கூடியதான பதில்கள் பற்றியும் ஆராய் வோம்.

(1) 'விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு' என்ற போதனை தூய வாழ்வை, மார்க்க அனுஷ்டிப்புகளை அகற்றிவிடாதோ என்ற கேள்வி எழலாம். இரட்சிப்புக்கு 'விசுவாசந்தானே' தேவை; எனவே ஆலய வழிபாடு, ஜெப வாழ்வு... ஆகியவையின் தேவை இல்லையே என ஒருவர் கேட்கலாம்.

அப்படியல்ல, நாம் போதிக்கும் இந்த விசுவாசம் மார்க்க வாழ்வு, அறநெறி வாழ்வு, நீதிச்சட்டங்கள் ஆகிய எல்லாவற்றையும் தன்னகத்தே அடக்கிவிடும். விசுவாசம் காப்பாற்றிவிடும் என்றெண்ணி ஒருவன் ஜெபவாழ்வு போன்றவற்றைத் தவிர்க்க முடியாது என்பதே நமது பதில்.

(11) இவ்வித விசுவாசம் ஒருவனை 'ஆன்மீக பெருமைக்குள்/மேன்மைக்குள்' தள்ளிவிடாதோ என்ற வினாவும் எழும்புகிறது. பெருமை கொள்ளுவதற்கு இடமுண்டு என்றாலும் இல்லவே இல்லை என்பதே நமது பதில். ஏனெனில், நம்முயற்சியால் நாம் சம்பாதித்த் [illegible] ஒன்றுமேயில்லை. எல்லாமே கடவுளுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈவுகள், இந்த ஈவுகள் நமது வாழ்வு, நற்செயல்கள் ஆகியவற்றிற்காகக் கொடுக்கப்படுபவை அல்ல; அவை கடவுளுடைய கிருபையினாலேயே கொடுக்கப்படுகின்றன. எனவே நாம் அடைந்துவிட்டோம் என்று மேன்மை பாராட்டுவதற்கு நம்மிடம் ஒன்றுமேயில்லை (ரோமர் 3;27, 4:5, எபே 2:4).

(111) கடவுளுடைய கிருபை 'காப்பாற்றிவிடும் என்றெண்ணி ஒருவன் பாவத்தில் நிலைத்திருக்கலாம் அல்லவா?, எனவே நற்செயல்களும் அவசியமில்லை அல்லவா?, என்ற கேள்விகள் எழக்கூடும். அப்படியும் ஒருவன் எண்ணக்கூடும். பாவத்தைப் பொறுத்தமட்டில் நாம் இறந்துவிட்டோம் என்பதை ஏற்காதவனே, பாவத்தில் மூழ்கிக் கிடப்பான் (ரோமர் 6). அப்படிப்பட்டவாழ்வு வாழும் ஒருவன் நிச்சயமாகவே விசுவாசத்தினால் வரும் 'நீதிமானாக்கப்படும்' (மன்னிப்பு அநுபவம்) அநுபவத்தைப் பெறவே மாட்டான்.

(IV) இப்போதனை ஒருவனுடைய மனதிற்கும், இதயத்திற்கும் மெய்ச்சமாதானத்தைக் கொண்டுவராது என்ற சந்தேகமும் எழலாம். உண்மைதான், "நான்" என்ற அகம்பாவம் ஒருவனில் நிலைத்திருக்குமேயாகில், அவன் உள்ளான அமைதியை அடையமாட்டான். ஆனால்; சகேயு, சமாரியப்பெண் போன்றோர் இச்சமாதானத்தைப் பெறக்கூடுமேயாகில், நானும் பெறலாம். நான் இந்த உள்ளான சமாதானத்தைப் பெற்ற பின், "நான் கடவுளுடைய பிள்ளைதான் என்று என் ஆவி உணர்த்தும் உண்மையைக் கடவுளுடைய ஆவியானவர்தாமே உறுதிப்படுத்துவார்" (ரோமர் 8:16).

(V) கடைசியாக, இந்த நம்பிக்கை, அதாவது 'விசுவாசத்தினால் வரும் இரட்சிப்பு' என்ற கோட்பாடு எல்லாருக்கும், எல்லா இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதல்ல என்ற வினாவும் எழுகிறது. அப்படிப்பட்ட கேள்விக்கு இடமே இல்லை. ஏனெனில் அடித்தளம் ஏற்கனவே இயேசுக் கிறிஸ்துவினால் போடப்பட்டாயிற்று. இது படித்தவன்-படியாதவன், செல்வந்தன்-ஏழை, வளர்ந்தோர்-சிறியவர் ஆகிய யாவருக்குமாகப் போடப்பட்ட அத்திபாரம் (1 கொரி 3:11). வார்த்தையை முழு உலகிற்கும் அறிவிக்க வேண்டும் என்பதே திருக்கட்டளை (மத்28:19-20). 'எல்லா உலகமும்' என்ற பதத்தில் நானும் அடங்குகிறேன், என் இடம்-சூழ்நிலையும் அடங்குகின்றன.

*----------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

## விசுவாசத்தினாலாகும் நீதி
## RIGHTEOUSNESS BY FAITH

"நீதிச்சட்டத்தின் மூலம் ஒருவன் கடவுளுக்கு ஏற்றவனாவதைப் பற்றி மோசே எழுதியது என்னவென்றால், அதன்படி நடக்கிற மனிதன் அதன் மூலம் மெய்வாழ்வு அடைவான் என்பதாகும். ஆனால், நம்பிக்கையின் மூலம் கடவுளால் ஏற்றுக்கொள்ளப் படுவதைக் குறித்து (கிறிஸ்துவைக் கீழே கொண்டு வரும்படி) "வானத்திற்கு ஏறினவன் யார்? ' என்றாவது, (கிறிஸ்துவை இறந்தோரிடமிருந்து மேலே கொண்டுவரும்படி) ' பாதாளக் குழியில் இறங்குபவன் யார்?' என்றாவது நீ வீணாக உனக்குள்ளே கேட்டுக்கொண்டிராதே என்று கூறப்படுகிறது. இன்னும் கூறப்படுவதென்ன? 'இந்தச் செய்தி' (அதாவது, கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்வதைப் பற்றி நாங்கள் அறிவிக்கும் செய்தி) உங்களுக்கு அருகிலேயே உள்ளது; உங்கள் வாயில் உள்ளது; உங்கள் உள்ளத்திலும் இருக்கிறது" (ரோமர் 10:5-8).

(குறிப்பு:- இந்த அருளுரை, ஏறக்குறைய 'விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படல்' என்ற ஐந்தாம் அருளுரையைப் போன்றதே; இங்கே சொல்லப்படும் கருத்துக்கள் இந்த ஐந்தாம் அருளுரைக்கும் பொருந்துபவை. இது ஒரு 'கோட்பாட்டு அருளுரை' யாயிருப்பினும், ஜோன் உவெஸ்லியால் ஆற்றப்பட்ட ஒரு அருளுரையாகும். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படல் என்ற தலைப்பில் ஆற்றப்படக்கூடிய ஒரு அருளுரையாகவும் இவ்வருளுரை அமைகிறது. ஆனால், இதில் கருத்துத் தெளிவும், ஒழுங்கும் அவ்வளவு தெளிவாய் இல்லை.)

### அருளுரை

மேற்கூறிய திருமறைப் பகுதியில், பவுல் உதாரணமாய் எடுத்துக்காட்டும் 'மோசேயின் உடன்படிக்கை' (உபா 30:11,12,14); இயேசுவின் இரத்தத்தினால் ஏற்பட்ட புது உடன்படிக்கையிலிருந்து (எபி 13:20) மாறுபட்டிருக்கிறது. அது உள்ளத்தில் எழுதப்பட்டதாய் இருப்பினும், அது 'சுய நீதியே'. ஆனால், இயேசுவின் உடன்படிக்கையோ, ' கடவுளுடைய நீதி?-தெய்வ நீதி' யாகும். ஆதாம் பரதீசில் (ஏதேனில்) வாழ்ந்த அவனது அறியாக்காலத்தில் 'கிரியை உடன்படிக்கையை' கடவுள் அவனோடு ஏற்படுத்தினார். ஆதாமிடம் எதிர் பார்க்கப்பட்டதெல்லாம் முழுமையான கீழ்ப்படிவேயாகும். "இதைச் செய், அப்போது பிழைப்பாய்" என்பதே அவ்வுடன்படிக்கை. இந்த உடன்படிக்கையை, அதாவது "இதைச் செய், அப்போது பிழைப்பாய் என்ற உடன்படிக்கையை, இயேசு தமது சிலுவையில் அறைந்து, அதைச் செயலற்றதாக்கிவிட்டார். கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையானது," நம்பிக்கை கொள், அப்போது பிழைப்பாய்" என்பதாகும். இந்தப் புது உடன்படிக்கையின்படி, நம்பிக்கை கொள்ளுமொருவன் பாவத்தின் சம்பளம், வல்லமை, குற்ற உணர்வு ஆகியவற்றிலிருந்து, இங்கே-இப்பொழுதே விடுதலையடைகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இன்றும் பலருக்குக் 'கடவுளின் நீதியை' ஏற்றுக் கொள்ளுவது கடினமாய் உள்ளது; அவர்கள் 'சுய நீதியையே' விரும்புவோராய்க் காணப்படுகின்றனர். நாம் இப்போது 'நீதிச் சட்டத்தினால் வரும் நீதி' யைப் (சுய நீதி) பற்றியும், 'விசுவாசத்தினால் உண்டாகும் நீதி' யைப் (கடவுளுடைய நீதி) பற்றியும் பின்வருமாறு ஒப்பிட்டுப் பார்ப்போம்:

| சுய நீதி அல்லது நீதிச்சட்டத்தினால் வரும் நீதி | கடவுள் நீதி அல்லது விசுவாசத்தினாலாகும் நீதி |
|---|---|
| (அ) நீர் இதைச்செய், அப்படிச் செய்யும் செயல்களினால் மெய்வாழ்வடைவாய். இது கிரியை உடன்படிக்கை (ஆதி.2:16-17) | (அ) கடவுள் உனக்காகச் செய்து விட்டார், ஏனெனில் அதை உன்னால் சரிவரச் செய்யமுடியவில்லை. இது கிறிஸ்துவின் மூலம் பாவியான மனிதனுடன் கடவுள் செய்யும் உடன்படிக்கை (ஆதி3:15, 22:16-18) |
| (ஆ) மனிதன் உள்ளும், புறம்பும் செய்ய வேண்டியவற்றையும், செய்ய இயலாதவற்றையும் நிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்கிறது. கடவுள் தூயராய் இருக்கிறபோல, தன் இதயத்திலும் நடக்கையிலும் ஒருவன் தூய வாழ்வு வாழ எத்தனிக்க வேண்டும். ஆசாரங்களில் ஒன்றையுமே தவறக்கூடாது. | (ஆ) கீழ்ப்படிவு முக்கியமல்ல, நம்பிக்கையே முக்கியம், நான் செய்ய வேண்டிய கடமைகள் யாவற்றையும் கடவுள் எனக்காகச் செய்து முடிப்பார். இங்கே கீழ்ப்படிவு என்பது நீதிச்சட்டத்திற்குக் கீழ்ப்படிவதையே எனக் காண்க. என்னால் செய்ய இயலாத எதையும் நான் செய்யும்படி கடவுள் கட்டளையிடார். |
| (இ) நீதிச்சட்டத்தைக் கைக்கொள்ளுவதில் ஒரு சிறு தவறுகூட ஏற்படலாகாது. ஏற்படின் இதுகாறும் கவனமாய்க் காத்து வந்த யாவும் பயனற்றதாய் ஆகிவிடும். | (இ) நான் செய்ய வேண்டியவற்றில் கடவுள் நீதி தங்கியிருக்கவில்லை. கடவுள் செய்வதிலேயே அது தங்கியுள்ளது. ஆபிரகாம் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப் பட்டான். -ஆதி15:6, ரோமர் 4:9 இதைப்போன்றே நாமும் நீதிமான்களாகப்படுகிறோம்-ரோமர் 4:23,24,25. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (ஈ) நம்முடைய தவறுதல்களுக்கான பிராயச்சித்த சுயநீதியில் எவ்வித இழுக்கும் ஏற்படலாகாது, ஏற்பட்டால் நமது கதி அய்யோ? | (ஈ) நம்முடைய தவறுகளுக்காக இயேசு மரணமடையும்படி ஒப்புவிக்கப்பட்டார். நாம் கடவுளுக்கு ஏற்றவர்களெனக் கொள்ளும்படி, அவர் உயிரோடெழுப்பப்பட்டார்-ரோமர் 4:25 |
| (உ) இதயத்தில் எழுதப்பட்ட எல்லா நியாயப் பிரமாணத்தையும் உயிரெனக் கைக்கொள்ளல் வேண்டும். செய்யும் செயல் யாவற்றிலும் கடவுளே நமது வாஞ்சையாய் இருத்தல் வேண்டும். நியாயப் பிரமாணக் கடும் கடைப்பிடிப்பு இறுதியில் கடவுளோடு பரத்தில் சேர்த்துவிடும். | (உ) நாம் நம்பிக்கை கொள்ளும் அதே நாளிலேயே மீட்பும் கிடைக்கிறது. கடைசிவரை நிலைத்திருந்தால், இரண்டாம் மரணத்தை ருசிபார்க்க மாட்டோம்- வெளி 2:11 கர்த்தரோடு இன்பம் அனுபவித்தால், அவரோடே என்றென்றுமாய் ஆட்சி செய்வோம்- வெளி 22:5 |
| (ஊ) சுய நீதி ஒருவனைப் பாத்திரனாகக் கருதுகிறது. அவனுக்குக் கிடைக்கும் வெகுமதியோ, 'ஆசீர்வாதங்கள்'. | (ஊ). கடவுள் நீதி ஒருவனை அபாத்திரன் எனக் கருதச் செய்கிறது. இப்படிப்பட்டவனுக்குக் கிடைக்கும் வெகுமதியோ, 'பாவ மன்னிப்பு'. |
| (எ) சுயநீதி ஒருவனுடைய சக்திக்கு எட்டாதவற்றையும் செய்யத் தூண்டுகின்றது. | (எ) தெய்வ நீதியோ ஒருவனுடைய சக்திக்குட்பட்டவைகளையே செய்யும்படி அழைக்கிறது. |

---

இரண்டு பக்கமுமாய் மேற்குறிப்பிட்ட ஒப்பீடுகளை, தகுந்த உதாரணங்களுடன் ஆராய்ந்து அறிவது நல்லது.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நியாயப்பிரமாணத்தினாலாகும்/சுய நீதியினாலாகும்/ கிரியை உடன்படிக்கையினாலாகும் நீதியில் நம்பிக்கை வைப்பது அவ்வளவு புத்தியான காரியமல்ல.. ஏனெனில்:

(அ) மனிதன் கடவுளோடு நல்லுறவு கொண்டிருந்த நாட்களில்தான் 'கிரியை உடன்படிக்கை' (ஆதாமோடு) ஏற்பட்டது. இழந்து போன 'கடவுள் சாயலை' நற்செயல்கள் மீட்டெடுக்கவேண்டும் என்பதற்கு இங்கே இடமேயில்லை. ஏனெனில் இந்தக் கிரியை உடன்படிக்கை ஏற்பட்ட நாட்களில் ஆதாம்(மனிதன்) கடவுள் சாயலை இழந்திருக்கவில்லை. இந்தக் கிரியை உடன்படிக்கை ஆதாமிடம் எதிர்பார்த்ததெல்லாம், 'அன்பின் முழுமையான கீழ்ப்படிவே'.

(ஆ) நியாயப்பிரமாணங்கள்/நீதிச்சட்டங்கள், பிழையில்லாமல் கடைப்பிடித்து வாழுவதற்கு மிகவும் கடினமானவை. நியாயப் பிரமாணங்களில்/நீதிச் சட்டங்களில், ஒன்றையாகிலும் 'ஒருக்காலும் நான் மீறவில்லை' என்று எவருமே சொல்ல முடியாது. அவற்றில் மிகவும் இலகுவானதைக் கூட ஒருவன் ஏதோவொரு தருணத்தில் மீறியவனாகவோ/மீறுபவனாகவே காணப்படுகிறான். கடவுளை ஒருவன் தன் முழு மனதோடு, முழு ஆத்மாவோடு, முழு ஆற்றலோடு, முழு சிந்தையோடு, ஒரு வேளை வழிபடலாம்- ஆனால் 'முழுப் பொருளோடு' என்ற ஒன்றைச் சேர்த்தோமானால், அங்கே மீறுதல் ஏற்படுகிறது. எல்லாருமா 'பத்திலொன்று' காணிக்கை கொடுக்கிறார்கள்?, எல்லாருமா ஒரு 'சிறு பொய்' கூடச் சொல்லாதிருக்கிறார்கள்?.

(இ) கட்டளைகள் 'நீதி' ஒன்றையே எதிர்பார்த்து நிற்கின்றன. அங்கே இரக்கத்திற்கு இடமேயில்லை. ஓய்வு நாளில், ஒரு குழிக்குள் விழுந்துவிட்ட தன் வீட்டு ஆட்டைக்கூட ஒரு யூதன் (கட்டளைப்படி வாழுபவன்) வெளியே எடுத்து விட மாட்டான். ஒழுக்கம் தவறிய ஒரு பெண் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும்- இன்னும் ஒரு தருணம் கொடுப்போம் என்ற பேச்சுக்கு இடமேயில்லை.

(ஈ) மனிதர் தம் உலகப் பொருட்களை முன்னேற்றுவதற்கே/பெருக்குவதற்கே பொதுவாக எல்லாச் செயல்களையும் செய்கிறான். மனிதர் பார்த்து மெச்சவேண்டும் என்பதற்கே சமயச் சடங்குகளையும் பல வேளைகளிலும் கடைப்பிடிக்கிறான் (மத் 6:1)/பல தடவைகளிலும் கீழ்ப்படிவு இல்லாததினால் ஒரு சிறுகட்டளை கூட உடைபட்டுப் போய்விடுகிறது. 'இந்தப் பழத்தைச் சாப்பிடாதே' (ஆதி 2:17) என்ற ஒரு இலகுவான கட்டளையைக் கூட ஆதாமினால் கடைப்பிடிக்க இயலவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் தன் பிழைகளை கணக்கிடப்போனால்,அவை அவனுடைய தலைமயிரிலும் அதிகமாம்.குற்றங்களே நிறைந்துள்ள ஒரு மனிதன், எவ்விதம் ஒரு "சுய நீதியுள்ளவனாய்' காணப்படுவான்? அப்படிப் பட்டவன் தன்னைத்தான் எப்படிக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.எனவே,நான் என் சுயநீதியினால் என்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என நினைத்தால், அது எனது அறிவீன த்தைத் தவிர வேறென்ன?

3. மூன்றாவதாக, கடவுள் நீதி/தெய்வ நீதி/ விசுவாசத்தினாலாகும் நீதியை நம்பியிருப்பதே அறிவுடையதாகும்/ஞானமாகும். என்பதை இந்த கடைசிக் குறிப்பில் பார்ப்போம்.இரண்டாம் குறிப்பில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்களே நமது சிந்தனைக்குப் போதுமானவை எனினும், பின்வரும் கோணங்களிலும் பார்ப்பது நல்லது.

(அ) 'சுய நீதி' எந்த மனிதரிடத்திலுமே இல்லை என்பதேநமது நிலை, ஒருவன் தன் உள்ளான நிலையை ஒத்துக் கொள்வது போன்ற புத்திசாலித் தனம் வேறில்லை-இதுவே மெய்யறிவு"ஐயோ அதமானேன், நான் அசுத்த உதடுள்ள மனிதன்,அசுத்த உதடுள்ள மனிதர் மத்தியில் நான் வாழுகின்றேன்".(ஏசாயா 6:5) என்பதே அந்த ஞானம்; அவன் மார்பிலே அடித்துக்கொண்டு,"கடவுளே பாவியாகிய எனக்கு இரங்கியருளும்". (லூக்கா 18:13) என்பதே அந்த மெய்யறிவு.

(ஆ) கடவுளே எல்லாவற்றையும் இயக்குபவர் என்பதையும்,அவர் எல்லா வல்லமையும் பொருந்தியவர் என்பதையும்,அவர் நல்லவர்-தமக்கு விருப்பமானவற்றைச் செய்கிறவர் என்பதையும்,அவர் செய்யும் எதுவும் நல்லவையே என்பதையும் ஏற்றுக் கொள்ளுவதே 'கடவுள் நீதியை' அறியும் அறிவாகும்.நிதான புத்தியுள்ள எவனும் மேற்படிக் கொள்கை உடையவனாகவே இருப்பான்."உமது அரசாட்சி வருவதாக ; உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,மண்ணுலகிலும் நிறைவேறு வதாக " (மத் 6:10) என்பான்.

(இ)அபாத்திரராகிய நம்மேல் கடவுள் இவ்வளவாய் அன்பு செலுத்துகிறாரே என்பதை நாம் நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்வதே அறிவுடைய செயலாகும். மனிதனுடைய இறுதி விருப்பம், தான்இழந்து விட்ட கடவுள் சாயலை திரும்பவும் அடையவேண்டும் என்பதே; கடவுளோடு முறிந்துவிட்ட நல்லுறவை திரும்பவும் ஏற்படுத்த வேண்டும் என்பதே.இவ்விலக்குகளை அடைவதற்கு மனிதன் செய்யவேண்டிய ஒரேயொரு ஞானமான செயல், 'கடவுளின் அன்புக்குக் கீழ்ப்படிதலேயாகும்';. சுய நீதியை நம்பியிருப்பது அழிவையே கொண்டு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) கடவுள் நீதியின்படி /விசுவாசத்தினாலாகும் நீதியின் படி வாழ விரும்புகிறவன்,ஆண்டவருடைய வழியையே தெரிவு செய்யும் தீர்மானத்தை எடுப்பான்.அவன் கடவுள் மேலும் மனிதர் மேலும் அன்பு செலுத்துவான்.

நான் போதுமான அளவு நல்லவனில்லையே ,எனக்குப் பாவத்தைப் பற்றி போதுமான அறிவுமில்லையே, கடவுள் என்னையும் ஏற்றுக் கொள்ளுவாரோ,என்பன போன்ற சந்தேகங்கள் 'தேவ நீதியின்' அருளைப் பெற்றவனுக்குத் தோன்றாது. விசுவாசிப்பதினால் கடவுள் உணர்வைப் பெறுகின்ற ஒருவன் 'கடவுளின் கிருபை' எனக்குப் போதும் என்ற மனநிறைவு உடையவனாய் வாழ்வான். 'இனி நான் அல்ல,அவரே எனக்கு எல்லாம்' ,என்று சொல்லி,கிறிஸ்துவின் கிருபையில் மாத்திரம் வாழ்விலும் தாழ்விலும் சார்ந்திருப்பான்.

*--------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

## கடவுளுடைய அரசுக்குள் வரும் வழி
## WAY INTO THE KINGDOM OF GOD

"காலம் நிறைவேறியிருக்கிறது, கடவுளின் அரசு நெருங்கியுள்ளது. மனமாற்றமடைந்து இந்த நற்செய்தியில் நம்பிக்கை வையுங்கள்" (மாற்கு 1:15)

(குறிப்பு- ஜோன் உவெஸ்லி கல்லறைத் தோட்டத்தில் ஆற்றிய அருளுரைகளில், இந்த அருளுரை முதல் அருளுரையாகக் காணப்படுகிறது. 1742ஆம் ஆண்டு ஆனிமாதம் 6ம் திகதி ஞாயிறன்று, ஜோன் உவெஸ்லி 'எப்வேர்த்தில்' இருந்தார். அங்குள்ள அங்கிலிக்கன் ஆலயத்தில், அவர் அருளுரை ஆற்றுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. எனவே, ஆலயத்தையொட்டியுள்ள கல்லறைத் தோட்டத்தில், அவருடைய தந்தையார் சாமுவேல் உவெஸ்லியின் கல்லறையை, அவர் அருளுரைப்பீடமாக உபயோகிக்க நேர்ந்தது. தனது நாட்குறிப்பேட்டில்; "அன்று கூடியிருந்த பெருந்திரளான மக்களை கண்டவுடன், விண்ணரசு குடிப்பும் புசிப்பும் அல்ல, ஆனால் அது நீதியும், சமாதானமும், தூய ஆவியானவரில் அடையும் மகிழ்ச்சியுமாகும் என்று பெருஞ்சத்தமாய்ச் சொன்னேன்", என்று ஜோன் உவெஸ்லி தாமே எழுதியுள்ளார். இதே, கல்லறைத் தோட்டத்தில் தொடர்ந்து எட்டு நாட்களாக அருளுரை ஆற்றினார் என்று சொல்லப்படுகிறது. "பல வருடங்களாக ஆலய அருளுரைப் பீடத்தில் இருந்து நான் செய்த அருளுரையை விட, என் தந்தையின் கல்லறையில் நின்று கொண்டு நான் செய்த அருளுரைகள் அதிக நன்மையைக் கொடுத்தன" என்று தனது நண்பனாகிய ஜோன் ஸ்மித் என்பாருக்கு ஜோன் உவெஸ்லி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.)

### அருளுரை

இந்த அருளுரையில், கடவுளுடைய அரசு என்பது, 'மெய்ப்பக்தி' (மெய்வழிபாடு) என்ற பொருள் படவே உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த மெய் வழிபாட்டில் அல்லது மெய்ப்பக்தியில் ஈடுபடும் சலாக்கியத்தைப் பெற விரும்பும் ஒருவர், மனமாற்றமடைந்து நற்செய்தியில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதே அழைப்பு. இந்த அழைப்பு, ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மாத்திரமல்ல, எல்லாருக்குமே கொடுக்கப்படுகிறது.

1, இவ்விடத்தில், இந்த மெய்ப்பக்தியின் அல்லது மெய்வழிபாட்டின் தன்மை/இயல்பு என்னவென்பதைப் பார்ப்பது நல்லது.

மெய் ப்பக்தி என்பது, தூய ஆவியானவராலும் தூய ஆவியானவருக்குள்ளும் ஒருவனுக்கு அருளப்படுகிற உள்ளான மகிழ்ச்சி, நீதி, சமாதானம் ஆகியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடவுளின் அரசு உண்பதையும் குடிப்பதையும் சார்ந்ததன்று, அது தூய ஆவியான வரால் உண்டாகும் நீதியும், சமாதானமும், மகிழ்ச்சியுமாயிருக்கிறது" (ரோமர் 14:17). யூத மார்க்கத்தவர் மாத்திரமல்ல, கிறிஸ்தவத்தைத் தழுவிய யூத இனத்தவரும், மோசேயின் நீதிச்சட்டத்தில் உறுதியாய் இருந்தனர் என்பது நமக்குத் தெரியும்; "....யூதருள் எத்தனையோ ஆயிரம் மக்கள் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் நீதிச்சட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள்" (அப் 21:20). உணவுப் பழக்க வழக்கம் பற்றி நீதிச்சட்டம் சொல்லுவதை அவர்கள் கடைப்பிடிப்பது மட்டுமின்றி, இரட்சிப்படைவதற்கு 'விருத்தசேதனமும்' அவசியமானது என இடித்துரைத்தார்கள் (அப் 15:1,24). இதற்குரிய பதிலாகத்தான் பவுல், 'கடவுள் அரசானது உண்பதையும் குடிப்பதையும் சார்ந்ததல்ல......... அது இருதயத்தோடு சம்பந்தப்பட்டது, இருதயக் கிரிகைகளினால் ஏற்படும் மகிழ்ச்சி, அமைதி, நீதி ஆகியவையோடு சம்பந்தப்பட்டது' என்று, கூறுகிறார்.

மெய்ப்பக்தியானது, மார்க்க சடங்குகளை /அநுஸ்டானங்களைக் கடைப்பிடித்து வாழுவதுமல்ல. மார்க்க சடங்குகள் நல்லவையே; ஆனால் அவை மெய்ப்பக்தியல்ல. உள்ளான சடங்குகளாகிய, 'ஜெபம் செய்தல்', 'உபவாசித்திருத்தல்' ஆகியவையும்; வெளிச் சடங்குகளாகிய 'ஏழைக்கு உணவளித்தல்', 'பிறனை நேசித்தல்' ஆகியவையும் மெய்ப்பக்தி நிலைக்கு உறுதுணை புரியுமேயாகில், அவை நல்லவையே, 'திருமறை வாசிப்பு', 'விசுவாச அறிக்கைகள்- இவையும் மெய்ப்பக்தியாகாது. ஆனால், இச்செயல்கள் யாவற்றிலும் நல்இதயத்தின் இயல்புகள் வெளிப்படுமேயாகில், அப்பொழுதுதான் மெய்ப்பக்தி தோன்றுகிறது.

எனவே, 'இருதயப் பக்தியே' மெய்ப்பக்தி யெனலாம். இந்த மெய்ப்பக்தியின் முதல் நிலை, கடவுளுடைய நீதியாகும்-அதாவது கடவுளிடத்தில் ஒருவன் தன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும், முழு ஆற்றலோடும்அன்பு கொள்ளுவதே (மாற்கு 12:30) இந்த கடவுள் நீதியாகும். "மகனே உன் நெஞ்சத்தை எனக்குத் தா" என்ற அழைப்பை ஏற்று, "கடவுளே என் இரட்சண்யக் கொம்பு, என் கேடகம், என் கோட்டை, என் உயர்ந்த அடைக்கலம்...." (சங்18:2,91:2,144:2) என்று இதயத்தில் ததும்பும் நிலையே, மெய்ப்பக்தியின் முதல் நெறியாகும். இந்த மெய்ப்பக்தியின் இரண்டாம் நிலை, "உன்னிடம் நீ அன்பு கொள்ளுவது போல், அடுத்தவனிடமும் அன்பு கொள்வாயாக" (மாற்கு12:31) என்பதாகும். இந்த இரண்டு நெறியிலும் 'அன்பே' உந்துசக்தியாய் உள்ளது, (1 கொரி 13) இப்படிப்பட்ட உள்ளான அன்புவாழ்க்கை வாழுபவனை, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ 'சமாதானம்' ஆட்கொள்ளும். எல்லா வேதனையையும், கசப்பையும் போக்கும் சமாதானம் இதுவே. இப்படிப்பட்ட சமாதானம் காணப்படும் இடத்தில் தான் தூய ஆவியானவரினால் வரும் மகிழ்ச்சியும் 'நிலவும். இந்த உள்ளான சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் பெறும் ஒருவன், 'தான் கடவுளுடைய பிள்ளைதான்' என்ற நிச்சயத்தைப் பெறுகிறான். இந்த நிச்சய நிலையே 'மெய்ப்பக்தி' நிலை. நாம் இங்கே குறிப்பிட்ட 'சமாதானம்', 'மகிழ்ச்சி' என்பவற்றையே, திருமறை 'கடவுள் அரசு' 'விண்ணரசு' என்ற பதங்களினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகிறது. மனித இருதயங்கள் கடவுளின் ஆட்சிக்கு வருமிடத்து, அவ்வாட்சி 'விண்ணரசு' வாக ஆகுகின்றது. (யோவான் 17:3, 1யோவான் 5:11-12)

கடவுளின் அரசு நெருங்கியுள்ளது (கிட்டவாயுள்ளது) எனவும் நமது அருளுரை வாக்கியத்தில் காண்கிறோம். ஆண்டவர் இம்மண்ணில் வாழ்ந்த காலத்தில் (உயிர்த்தெழுந்த பின் அல்ல) இவ்வார்த்தைகளைக் கூறினார். எனவே, அவருடைய நற்செய்தியில் நம்பிக்கை கொண்டு அவரை யார் யார் ஏற்றுக் கொண்டார்களோ, அவர்கள் அப்போதே கடவுள் அரசையும் ஏற்றுக் கொண்டனர் என்பதுதெளிவாகிறது. இன்றும் அவரையும், கடவுள் அரசையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. ஏனெனில் அவர் எப்போதும் உயிருள்ளவராய் இருப்பதோடு, அவர் யுக முடிவுவரை எல்லா நாள்களிலும் நம்மோடு இருக்கிறார் (மத் 28:20). எனவே, இன்று எங்கெங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் கடவுளின் அரசு கிட்ட உள்ளதாகவே காணப்படுகிறது.

2. இனி, இந்தக் கடவுள் அரசுக்குள் போகும் வழி என்ன, எத்தகையது என்று பார்ப்போம். 'மனம் மாற்றமடைதலே' , என்னை நான் 'அறிந்து கொள்ள வேண்டியவாறு அறிந்து கொள்ளுதலே' , அந்த வழியாகும். நான் பாவியானவனே என்ற அறிவு மாத்திரமல்ல, நான் எப்படிப்பட்ட பாவியானவன், எனது பாவங்கள் எத்தகையது என்பதையும் நான் அறிந்து, உணர்ந்து மனமாற்றம் அடைய வேண்டும். நாம் ஊன் இயல்வு உடையவர்களாய் இருப்பதால், ஊன் இயல்பின்படியான செயல்களையே செய்கின்றோம். நாம் உலகத்தை நேசிக்கிறபடியால், உலகப் போக்கையே கடைப்பிடிக்கிறோம். நம்மை நாமே அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. பாவ இயல்பின் செயல்களாவன; ஒழுக்கக்கேடு, அசுத்த செயல், காம வெறி, சிலை வணக்கம், மாந்திரீகம், பகைமை, சண்டை , பொறாமை, சீற்றம், தன்னலப் போட்டிகள், பிரிவினை, கட்சி மனப்பான்மை, எரிச்சல், குடிவெறி, களியாட்டம் (கலா 5:19-21) என்பவையே. இப்படிப்பட்டவைகளில் ஈடுபட்டு நடப்பவர்களுக்கு கடவுள் அரசில் பங்கில்லை. கெட்டுப்போன அடிமரத்திலிருந்து துளிர்த்து உருவாகும் கிளைகள் நற்கனி தருமோ?. பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது-பாவ ஆத்துமாவே மரிக்கும். மேற்கூறிய பாவங்களிலிருந்து, பாவ இயல்புகளில் இருந்து விடுபட்டு, வேறுவழி செல்லாமல் இயேசுவிடம் வருதலே உண்மையான மனமாற்றமாகும். இவ்விதம் இயேசுவிடம் வருகிறவன், இனி ஆண்டவர் காட்டிய வழி நடப்பான்.

எனவேதான், ஒருவன் மனமாற்றமடைந்து, ஆண்டவரிடம் முழு நம்பிக்கை உடையவனாக வேண்டும். இருதயம் முற்றுமாய் மாறாவிட்டால், மனமாற்றம் இல்லை-நாம் செய்யக்கூடியதும் ஒன்றுமேயில்லை. இறந்துபோன ஒரு உடலுக்கு நம்மால் உயிர் கொடுக்க இயலாது. எல்லா வல்லமையுள்ள கடவுள் ஒருவரே அப்படிச் செய்வதற்கு வல்லமையுள்ளவர். இந்த மனமாற்றம் முற்றுமுழுமையானதாய் இருத்தல் வேண்டும். திரும்பத் திரும்ப மனமாற்றம் அடைதல் என் பதற்கு இடமேயில்லை. நமது பாவங்களுக்காக நாம் மனதுருகி வெட்கம் அடைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட மனமாற்றம் என்னில் சாத்தியமில்லை என்பவனுக்கும்,கடவுள் தமது கிருபையினால் அதைச் செய்ய வல்லவராய் இருக்கிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம்'நற்செய்தியாகிய' இயேசுவில் முழு நம்பிக்கைவைத்தலேயாகும்.

ஏனெனில் ,நற்செய்தி பாவியானவனுக்கே உரியது.அது எளியவருக்கு அறிவிக்கப் படுகிறது; சிறைப்பட்டோருக்கு விடுதலையைக் கொடுக்கிறது;குருடனுக்குப் பார்வை யை அளிக்கிறது....(லூக்கா 4:18)நற்செய்தியானது செல்வன் என்றும், ஏழை என்றும்,படித்தவன் என்றும்,படியாதவன் என்றும்,உயர் குலத்தவன் என்றும், தாழ் குலத்தவன் என்றும் பாகுபாடு பார்ப்பதில்லை. பாவ உலகிற்கு,கடவுளின் அன்பின் நிமித்தம்,அவருடைய கிருபையின் நிமித்தம் கொடுக்கப்படுவதே நற்செய்தி யாகும்.சுருங்கக் கூறின் அது கடவுளுடைய மாறாத அன்பாகும்.நற்செய்தி பழைய-புதிய ஏற்பாடுகளை ஏற்றுக் கொள்ளுதல் ஆகாது; அது இயேசுக் கிறிஸ்துவில் கடவுள் நமது பாவங்களையெல்லாம் மன்னித்து விடுகிறார் என்ற அருட் செய்தி யாகும்-" கடவுள் தம்முடைய ஒரேபேறான மைந்தரிடம் நம்பிக்கை கொள்ளும் எவனும் கெட்டழிந்து போகாதிருந்து என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெறும்படி, அவரைத் தந்தருளினார்; இந்த அளவுக்கு அவர் உலகத்தின் மீது அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16)

மேற்படி உண்மையை நாம் ஏற்றுக் கொண்டு உள்ளத்தில் விசுவாசித்தால், என்றும்வாடாத் மெய் மகிழ்ச்சி நம் உள்ளத்தில் நிலைத்திருக்கும்.இப்போதே நம்பு-இப்போதே பாவமன்னிப்புப் பெறுவாய். பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்ற ஒருவன், "நான் விசுவாசித்திருப்பவரை இன்னாரென்று அறிவேன்" என்று அறிக்கை பண்ணுவதே 'மெய்ப்பக்தியின்' மெய்யறிவாகும்.

*-------------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

## ஆவியானவரின் முதற் கனிகள்
## THE FIRST FRUITS OF THE SPIRIT

"ஆகையால் கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்பட்டு ஊன் இயல்பின்படி நடவாமல், ஆவியின் படியே நடக்கிறவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பே இராது" (ரோமர் 8:1)

(உள்ளூர் அவையினர்களுக்கு ஜோண் உ-வெஸ்லி கொடுத்த ரோமருக்கு எழுதப் பட்ட கடிதத்தின் விளக்கவுரையின் ஒரு பகுதியே இவ்வருளுரையாகும். இது சுவாரசியமானது, முக்கியமானது, அறிவுரைகள் நிறைந்தது. தொகுக்கப்பட்ட ஜோண் உவெஸ்லியின் அருளுரைகளுள், இது எட்டாவது அருளுரையாகும். புதுவாழ்வு நிலைபற்றி ஒரு விதவாசி முன்னறிவு பெறுவதற்கு இவ்வருளுரை உதவிபுரிகின்றது. இது 'செயல் விசுவாசத்தின்' ஒரு பிரதிபலிப்புமாகும்.)

### அருளுரை

1. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்கள் யார் என்ற கேள்வி எழும்போது; அவர்கள் இயேசுவே தமது ஆண்டவரும் இரட்சகரும் என அவர்மேல் முற்றுமுழுதாய் விசுவாசம் வைத்து, அந்த விசுவாசத்தின் பலாபலனாய்க் கடவுளின் சமாதானத்தைத் தம் உள்ளத்தில் பெற்றுக் கொண்டவர்களே என்பதுதான் சரியான விடையாகும். இப்படிப்பட்டவர்கள் உலகப் போக்கின்படியோ அல்லது தம் ஊன் இயல்பின்படியோ நடவாமல் (வாழாமல்); தம் எண்ணம், பேச்சு, செயல் யாவும் தூய ஆவியானவரினால் வழிநடத்தப்படும் வாழ்க்கையை வாழ்வார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தண்டனைத் தீர்ப்பு இல்லை; ஏனெனில் அவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் இலவசமாகக் கொடுக்கப்பட்ட 'கடவுளின் ஈவினால்' நீதமான்களாக்கப்பட்டு விட்டார்கள். அவர்களுடைய இருதயங்களும் அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு அளிப்பதில்லை, ஏனெனில் அவர்களுக்குச் செய்யக்கூடியவை எவை செய்யக்கூடாதவை எவை என்பது நன்கு தெரியும்; தூய ஆவியானவரின் வழிநடத்துதல்படி அவர்கள் நடப்பதால், இந்த அறிவு அவர்களுக்கு அருளப்படுகிறது-"நாம் இந்த உலகத்தின் ஆவியைப் பெற்றுக் கொள்ளவில்லை. கடவுளிடம் இருந்துவரும் ஆவியையே பெற்றிருக்கிறோம். கடவுள் நமக்கு அருளோடு தந்தவற்றின் தன்மையை நாம் புரிந்து கொள்ளும்படி அந்த ஆவியைப் பெற்றிருக்கிறோம்" (1கொரி 2:12). "நாங்கள் பொதுவாக மக்களிடையே, குறிப்பாக உங்களிடையே, மனித ஞானத்தின்படி நடவாமல், கடவுளின் அருளைத் துணையாகக் கொண்டு, அவர் அளிக்கின்ற நேர்மையோடும், உள்ளத்தில் தூய்மையோடும் நடந்து வந்தோம். எங்கள் மனச்சான்றும் இவ்வாறே கூறுகிறது; இதிலே நாங்கள் பெருமை கொள்கிறோம்" (2 கொரி 1:12). கல்லாதவர்களும், நம்பிக்கையில் உறுதியற்றவர்களும் கூட, கடவுளுடைய இந்த வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

தூய ஆவியானவரின் வழிநடத்துதல் படி நடப்பவர்கள் யார் என்றும், அவர்கள் எத்தன்மை வாய்ந்தவர்கள் என்றும், அவர்களுக்கு ஏன் 'தண்டனைத் தீர்ப்பு' இல்லை என்றும் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2: நாம் அவக்கத்தில் குறிப்பிட்டது போல ஆவியானவரின் வழி நடத்துதல் படி வாழ்பவர்கள் இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ளவர்களே; அவர்கள், தம் 'சுய நீதியை' சார்ந்திராமல், விசுவாசத்தினால் வரும் 'கடவுள் நீதியில்' மாத்திரமே சார்ந்திருப்பவர்கள். அவர்கள், இயேசுக் கிறிஸ்து சிலுவை மீது சிந்திய இரத்தத்தினால் மீட்டெடுக்கப்பட்டவர்கள். அவர்கள், 'கிறிஸ்துவில்' வாழ்கின்றவர்கள்; 'கிறிஸ்துவுக்குள்' வாழுகின்றவர்கள். அவர்கள், திராட்சைச் செடியின் கொடிகள் போன்றவர்கள், தூய ஆவியானவர் எழுப்பும் உள்ளத்து உணர்வு எதற்கும் மாறுபாடற்ற கருத்துடையவர்கள். அவர்கள், பாவம் செய்யார்கள், ஏனெனில் ஊன் இயல்புப்படி வாழாமல், தெய்வ ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய் அவர்கள் வாழ்க்கை நடத்துபவர்கள் (கலா 5:16-17). ஊன் இயல்பும், ஆவி இயல்பும் ஒன்றோடொன்று முரண்பட்டவை என்பது அவர்களுக்குத் தெரியும், எனவே ஊன் உடல் விருப்புகள் அனைத்தையும் அவர்கள் சிலுவையில் அறைந்து விட்டவர்கள்— "நாம் இனிப் பாவத்திற்கு அடிமைகளாயிராதபடி, நமது பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டதால்...." (ரோமர் 6:6), "கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்களாய் இருப்பவர்கள், தங்கள் பாவ இயல்பை அதன் இழிவான உணர்ச்சிகளோடும் விருப்பங்களோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள்" (கலா 5:24). அவர்கள், தங்களுக்கு வரும் எல்லா விதச் சோதனைகளையும் தோற்கடித்து, "நம்முடைய ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் மூலம் நமக்கு வெற்றி கிடைக்கச் செய்கிற கடவுளுக்கு நன்றி" (1கொரி 15:57) என்று தம் வாழ்வு முழுவதும் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.

இவர்கள், தம் இருதயத்திலும், தம் நடத்தைகளிலும் ஆவியானவரில் வாழ்வார்கள். இவர்களுடைய கடவுளே இவர்களுக்கு 'நீதி'யாய் விளங்குவார். இவர்கள் உள்ளத்தில் இருந்து புறப்படும் 'அன்பு' உயிருள்ள 'நீரூற்றைப்' போன்றிருக்கும். அவர்களுடைய உரையாடல்களிலும் ஆவியானவரின் வழி நடத்துதலே காணப்படும். அவர்களுடைய வாயின் வார்த்தைகள் 'கிருபையும்', 'உப்பின் சாரமும்' நிறைந்து காணப்படும்— "அருவருக்கத் தக்க சொல் ஒன்றும் உங்கள் வாயினின்று பிறத்தலாகாது. கேட்போர் பயனடையும்படி, தேவைக்கு ஏற்றவாறு சபையின் பொது வாழ்க்கைக்கு வளர்ச்சி தரக்கூடிய நல்ல சொற்களைப் பேசுங்கள்" (எபே 4:29). அவர்கள் தம் நடக்கையில், ஆவியானவரின் கனி தெரியும் படி வாழ்வார்கள் (கலா 5:22,23); அத்தோடு அவர்கள் உண்மையானவை எவையோ, நன்மதிப்புள்ளவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூயவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, இனியவை எவையோ, நற்பண்பு, புகழ்ச்சி உள்ளவை எவையோ (பிலி 4:8); அவற்றிலேயே அவர்களுடைய சிந்தனையைச் செலுத்துவார்கள்.

3. மேற் குறிப்பிட்ட ஆவியானவரின் வழிநடத்துதல்படி வாழும் தகைமையுடையவர்களுக்கு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) கடந்துபோன காலத்திற்கான பாவங்களுக்குத் தண்டனை இருக்காது, அவர்களுடைய கடந்த காலப் பாவங்கள் யாவும் ஆழ்கடலில் போடப்பட்ட கற்களைப் போலாகிவிடும். அவர்களுடைய பாவப் பொறுப்பை கடவுள் தாமே ஏற்றுக் கொண்டு, தமது ஒரே மைந்தராகிய இயேசுவை 'கிருபாதாரப் பலி'யாக ஒப்புக் கொடுத்தார்-" . . நம்முள் ஒருவன் பாவம் செய்வானானால், நமக்காகக் தம் தந்தையாரிடம் பரிந்து பேசுகிறவர் ஒருவர்இருக்கிறார், அவர் நீதியுள்ள ராகிய இயேசுக் கிறிஸ்துவே. அவரே நம்முடைய பாவங்களைப் போக்கும் 'பரிகாரப்பலி'. . . ." (1 யோவான் 2:12)

(ஆ) அவர்களுடைய சொந்த இருதயங்கள் அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்காது, ஏனெனில் அவர்களுடைய மனச்சான்று தெளிவுள்ள தாய்இருக்கும். அவர்கள் கடவுளுடைய கோபத்திற்கு அஞ்சமாட்டார்கள். இயேசு அவர்களுக்காகவே இரத்தம் சிந்தினார் என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் உள்ளத்தில் 'மகனுக்குரிய ஆவியே' இருக்கும், 'அடிமைக்குரிய ஆவி' இராது '-" மீண்டும் உங்களை அடிமைகளாக்கி அச்சத்தில் ஆழ்த்தும் ஆவியை நீங்கள்பெறவில்லை; உங்களைக் கடவுளின் மைந்தர்களாக்கும் ஆவியையே பெற்றிருக்கிறீர்கள்" (ரோமர் 8:15).

அவர்கள் திரும்பவும் விழார்களா? இல்லவே இல்லை. விழுவார்களேயாகில் அவர்களிடத்தில் மெய் விசுவாசம் இல்லை என்பது தெளிவு-அப்படிப்பட்டவர்களுடைய இருதயத்தில் தெய்வீக ஒளி இல்லை. அவர்கள் விசுவாச வாழ்வு வாழ்ந்து, ஆவியானவரின் வழி நடத்துதல்படி நடந்தால், வீழ்ச்சி அடைய மாட்டார்கள்.

(இ) அவர்களுக்கு, தற்காலப் பாவத்திற்கான தண்டனைத் தீர்ப்பும் இராது, ஏனெனில் கடவுளால் பிறந்தவர்கள் பாவம் செய்வதில்லை-" கடவுளால் பெற்றெடுக்கப்பட்டவன் எவனும் பாவம் செய்கிறவனாய் இருக்க மாட்டான். . ." (1யோவான் 3:9-10). அவன் நீதிச்சட்டத்திலிருந்து விடுதலை அடைந்தவனாய்க் காணப்படுவான்-"நீங்கள் தெய்வ ஆவியினால் நடத்தப்படுகிறீர்கள் என்பது உண்மையானால், நீங்கள் நீதிச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல என்பதும் உண்மை" (கலா 5:18) நீதிச் சட்டத்தை மீறுபவனுக்கே தண்டனை-' களவு செய்யாதிருப்பாயாக' என்பது நீதிச்சட்டம். எனவே களவு செய்பவனுக்கே தண்டனை. ஆவியின் கனிக்கு (கலா 5:22-23), தடை செய்யும் சட்டம் ஏதேனும் உண்டோ? நீதிச்சட்டம் நேர்மை அற்றவர்களுக்கென்றே அமைக்கப்பட்டது (1தீமோ 1:9-11).

(ஈ) அவர்களுடைய 'உள்ளான' பாவத்திற்கும் தண்டனைத் தீர்ப்பு இல்லை. பெலவீனமான விசுவாசிகளும், விசுவாசிகளே (1கொரி 3:1). கோபம், பெருமை, ஆகிய உள்ளான பாவங்கள் அவர்களில் தோன்றினாலும்; அவர்கள் இயேசுவுக்குச் சொந்தமானவர்கள் என்பதையும்; தேவ ஆவியானவர் அவர்களில் குடியிருக்கிறார் என்பதையும் நாம் மறுத்தலாகாது (1யோவான் 3:24).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) வேறு எந்தப் பாவத்தின் நிமித்தமும் ஆவியானவரின். வழி நடப்பவர்கள் தண்டனைத் தீர்ப்பு அடைவதில்லை. தமது செயல்களில் பாவக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள். கடவுளைத் தம் முழு இதயத்தோடும் நேசிக்கவில்லை. என்பது அவர்களுக்குத் தெரியும்; தமது மார்க்க கடமைகளிலும் தற்பெருமை காணப் படுகிறது என்பதையுணர்வார்கள்; தம் இதய சிந்தனைகள் கட்டுக்கடங்காமல் செயல் படுவதை அறிவார்கள் – இப்படிப்பட்ட மெய்யுணர்வுகளினால், "கடவுளே எம்மைக் கைவிடவேண்டாம்" என்று தொடர்ந்து வேண்டுதல் செய்வதினாலும், அவர்களுக்கு வேறு எந்தப்பாவத்திற்குமான தண்டனைத் தீர்ப்பு இல்லை. திருஅவையின் பொதுவான பாவ அறிக்கையில், இவ்வுண்மை விளக்கப்பட்டிருக்கிறது.

(ஊ) பெலவீன பாவங்கள், அதாவது வேண்டுமென்றல்ல, அறியாமையினாலே செய்கிற பாவத்தண்டனைத் தீர்ப்பும் அவர்களுக்கில்லை. உதாரணமாக, மிகவும் நெருக்கடி யான அல்லது அபாயமான இக்கட்டிலிருந்து தப்புவதற்காகச் செய்யப்படும் பாவமே வேண்டுமென்று செய்யப்படும் பாவம். எல்லாத் தீச்செயல்களும் பாவச்செயல் களென்றும், இப்படிப்பட்ட அறியாமையினால் செய்யும் அல்லது வேண்டுமென்று செய்யப்படாத பாவங்கள் நம்மைக் கடவுளின் அன்பிலிருந்து பிரித்துவிடாது– அப்படிப்பட்டவைகள் தூய வாழ்விற்கு உகந்தவை அல்ல என்பது உண்மைதான்.

(எ) கடைசியாக, ஆவியானவருடைய வழியின்படி நடப்பவர்களுக்கு, இவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டுச் செய்யப்படும் பாவத்திலிருந்தும் தண்டனைத் தீர்ப்பு இல்லை. உதாரணமாக; நாமெல்லாரும் ஆலய வணக்கத்தில் சிரமமாக ஈடுபடவே விரும்பு வோம், கர்த்தருடைய திருவிருந்தை ஓயாது கடைப்பிடிக்க விரும்புவோம். ஆனால், சடுதியாக ஏற்படும் உடல் நலக்குறைவினால், அல்லது கர்த்தருடைய நாளில் நடைபெற இருக்கும் ஒரு முக்கியமான நேர்முகத்தேர்வினால், நம்மால் ஒரு ஒரு வேளை ஒரு குறிப்பிட்ட ஞாயிறன்றோ அல்லது ஒரு திருநாளன்றோ கோவிலுக் குப் போகமுடியவில்லை. இதை நமது சக்திக்கு மீறின பாவம் எனக் கொள்ளலாம்.

பொதுவாகப் பார்க்குமிடத்து, எவ்வகையான பாவமாயினும், எக்காலத்தில் செய்யப்பட்டவையாயினும், என்ன சந்தர்ப்ப சூழ்நிலையில் செய்யப்பட்டவையாயினும்; அவற்றின் பலனான தண்டனைத் தீர்ப்பு, "கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டு, இயேசுவே தமது ஆண்டவரும் இரட்சகருமென அவர் மேல் முற்று முழுதான விசுவாசம் வைத்து ..." ஆவியானவரின் வழி நடத்துதல்படி நடப்பவர்களுக்கு இல்லை என்பதே புதிய ஏற்பாட்டுப் போதனையாகும்.

(எனினும், நாம் நம்மைக் காத்துக் கொள்ளுவது அவசியம்; துன்பத்திற்குள், தீமைப்படுகுழிக்குள் விழப்போகின்றோம் என்று நாம் உணர்ந்திருந்தால், அவ்வகை வழிகளைத் தவிர்த்து விடுவதே நல்லது.)

---------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

அடிமைத்தனத்தின் ஆவியும் மைந்தர்களாக்கும் ஆவியும்
THE SPIRIT OF BONDAGE AND ADOPTION

"மீண்டும் உங்களை அடிமைகளாக்கி அச்சத்தில் ஆழ்த்தும் ஆவியை நீங்கள் பெறவில்லை, உங்களைக் கடவுளின் மைந்தர்களாக்கும் ஆவியைப் பெற்றிருக்கிறீர்கள்; அந்த ஆவியின் அருளால் நாம் கடவுளை 'அப்பா' என்று கூப்பிடுகிறோம்" (ரோமர் 8:15).

(குறிப்பு- இது இவரது அருளுரையின் மறு பிரதிபலிப்பாகும். மனமாற்றம் அடைந்தவர்கள் சந்திக்கக்கூடிய தடைகள் பற்றி இதில் ஆராயப்பட்டிருக்கின்றன. விசுவாசி ஒருவன் சந்திக்கும் பெரும் தடைகள் பற்றியும், அழிவுக்குரியவைகள் பற்றியும் ஆராயப்பட்டிருப்பினும்; அவன் அடையும் மகிழ்ச்சி, சமாதானம், வல்லமை பற்றியும் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, 'மெதடிஸ்தவர்கள்' பெருமை கொண்டாடும் 'ஆவியானவரின் சாட்சி' என்ற அருளுரையின் ஒரு அறிமுக அருளுரையாகவும் இது அமைகிறது.)

அருளுரை

விசுவாசத்தின் மூலம் கடவுளுடைய பிள்ளைகளாகிவிட்டவர்களிடத்தில், இவ்வருளுரை வசனத்தின் மூலம் பவுல் பேசுகிறார். அவர்கள் கடவுளின் ஆவியானவரைத் தம் உள்ளத்தில் பெற்றுக் கொண்டவர்கள்-"நீங்கள் கடவுளின் ஆலயம்என்பதும், கடவுளின் ஆவி உங்களிடையே குடிகொண்டிருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியாதா? (கொரி 3:16)அடிமைத்தனத்திற்குள்ளாக்கும் எந்த ஆவியாலும் அவர்கள் தள்ளப்படார்கள். எசமானுக்குப் பயப்படும் ஆவி எவனிடத்தில் உள்ளதோ, அப்படிப்பட்டவன் ஒருவேலைக்காரன். இந்தவிதமான 'பய ஆவி' அந்த எசமானின் பிள்ளைகளிடத்தில் இராது. இப்படிப்பட்டவர்கள் 'அடிமைகளாய்' இராமல் வேலைக்காரராய்' இருப்பதால், அவர்கள் கடவுளின் அரசுக்குத் தூரமாயில்லை என்பது உண்மைதான். ஆனால், நாம்இங்கே குறிப்பிடுவது அடிமைகளுமல்ல, வேலைக்காரருமல்ல, ஆனால் 'பிள்ளைகள்'. கெட்ட குமாரன் தன் தவறுதல்களை உணர்ந்து, தன் தந்தையிடம் திரும்பி வந்தபோது, அவன் ஒரு வேலைக்காரனாகவே இருக்க விரும்பினான் (லூக்கா 15:19,21). ஆனால், அவனுடைய தகப்பனோ அவனைத் திரும்பவும் 'மகனாகவே' ஏற்க விரும்பினார் (லூக்கா 15:24).

இன்று, கிறிஸ்தவர்களிலும் கூட, பலர் 'அடிமையாக' அல்லது 'கூலிக்காரனாக' இருக்கவே விரும்புகின்றனர். அனலற்ற வாழ்வு சபையில் காணப்படுவதற்கு இது முக்கிய காரணம். அப்படி அடிமைகளாக அல்லது வேலைக்காரராக வாழ விரும்புவோரின் வாழ்வில் கடவுளைப்பற்றிய எண்ணம் இல்லவே இல்லை- இது ஒரு துக்ககரமான நிலை. கடவுள் பயமுடையோர் அதிகமாய் இருக்கலாம் ஆனால் கடவுள் மேல் அன்புடையோர் சிலரே உள்ளனர். பலர் எசமானாகிய கடவுளைக் கண்டவிடத்து அவருக்குப் பயப்படுகின்றனர் (வெளியரங்கம்), ஆனால் அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் பயமேயில்லை. இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டு, அவருக்கும் அவருடைய தந்தையாகிய கடவுளுக்கும் பயப்படுகின்றவர்கள் பலர் இருக்கின்றனர்; அவர்களில் அநேகர் 'அன்பின் ஆவியைப்' பெற்றோராய்க் காணப்படவில்லை.

பயமும், அன்பும் இல்லாதவர்கள் இன்னமும் 'ஜென்ம பாவ' நிலையிலேயே உள்ளனர். பயப்படுகின்றவர்கள் நீதிச்சட்டத்தின்படி வாழுபவர்கள் (குறிப்பாக யூதர்) உள்ளத்தில் அன்பின் ஆவியைப் பெற்றிருப்பவர்கள், கடவுளின் கிருபைக்குள் வாழுகின்றனர். இப்போது நாம் கண்ட இந்த மூன்றுவித மனித நிலைகளை சற்று விரிவாக ஆராய்வோம்.

" நீதிச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகி விடப் பார்ப்பதால், நீங்கள் உங்களைக் கிறிஸ்துவிடமிருந்து விலக்கிக் கொண்டீர்கள்" (கலா 5:4).

1. ஜென்ம பாவ ஆவியின்படி வாழுபவர்கள்:

இவனுடைய நிலை ஆழ்ந்த நித்திரைக்குச் சமமானது. அவனுடைய புலன்களுக்கு நன்மை எது என்றும், தீமை எது என்றும் புரிந்து கொள்ளும் உணர்வு இல்லை- "நம் தவறுகள் காரணமாக நாம் இறந்தவர்களாகவே இருக்கிறோம்." (எபே 2:5). அவனுடைய இருதயக் கண்களும், அவனுடைய அறிவுக் கண்களும் மூடிக்கிடக்கின்றன; அவனால் பார்க்க முடியாது, ஏனெனில் அக்கண்ணிமைகள் இறுக்கமாய் மூடிக்கிடக்கின்றன. அவன் 'மரண இருள் பள்ளத்தாக்கில்' வாழ்கிறான். அவனுக்கு கடவுளைப் பற்றிய அறிவோ உணர்வோ இல்லை. இயேசுக் கிறிஸ்துவின் மூலம் கடவுளிடத்தில் வாழுகின்றவர்களின் வாழ்க்கை இரகசியம் அவனுக்குத் தெரியாது; தூய வாழ்வு என்றால் அவனுக்கு என்னவென்றே தெரியாது. அவன் நித்திரையாய் இருப்பதால், எது நடந்தாலும் அவனுக்கு அக்கறை இல்லை; அவனுக்கு மனக்கலக்கம் ஏற்படுவதேயில்லை, அவனால் பார்க்க முடியாதாகையால், 'எனக்கு எத்தீங்கும்' நேரிடாது என்று தனக்குள்ளே சொல்லிக் கொள்ளுகிறான். அவனை இருள் மூடியிருப்பதால், 'சாத்தானின்சமாதானமே' அவனுக்குள் இருக்கிறது.

அவனிடத்தில் பயமே இல்லை, ஏனெனில் அவன் 'தன்னம்பிக்கை' உள்ளவனாய் இருக்கிறான். தன் வாழ்வில் மனமாற்றம் எப்போது ஏற்படும் என்று அவனுக்குத் தெரியாது. அவசியமேற்பட்டால், மரணத்திற்குமுன் மனமாற்றம் அடையலாம் என சிலவேளைகளில் நினைக்கிறான். தான் மனமாற்றமடைய தீர்மானிக்கின்றபோது, அந்தத் தீர்மானத்தை எவராலுமே தடைசெய்ய இயலாது என்றும் எண்ணுகிறான். இப்படிப்பட்டவர்கள், குறிப்பாக கற்றவர்கள் மத்தியில் அநேகர் இருக்கின்றனர். சிலவேளைகளில் அவன் மகிழ்ச்சியாய்க் காணப்படுகிறான். -இயலுமான அளவுக்கு தன்விருப்புகள் அனைத்தையும் அனுபவிக்கிறான்- மக்கள் கூட அப்படிப்பட்ட ஒருவனைப் பார்த்து 'நற்பேறு பெற்றவன்' என்று சொல்லக்கூடும். இப்படிப்பட்டவன் தான் 'சுயாதீனன்' என்றும், 'நிறைவுள்ளவன்' என்றும் நினைக்கிறான். உண்மையான 'சுயாதீனத்திற்கு' கடவுளின் கிருபை அவசியமானது என்பது அவனுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட ஒருவனை, பலர் அவனைத் 'இப்பிரபஞ்சத்தின் மகன்' என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கிறார். இப்படிப்பட்ட ஒருவன், அதாவது ஜென்ம பாவ ஆவியுடைய ஒருவன், முகப்புகழ்ச்சியை விரும்புகிறவனாகவும் காணப்படுகிறான்; முகப்புகழ்ச்சி பெறுவதற்காகப் பாவச் செயல்களில் அறிந்து ஈடுபடவும் தயங்கான். மற்றையோர் யாவரும் மார்க்க மூட நம்பிக்கைகளுக்கு அடிமைகள் என எண்ணுகிறான். தன்மேல் கடவுளுடைய தண்டனைத் தீர்ப்பு விழாது என நம்புகிறான். "நீதிமான் ஏழு தடவை விழுந்தாலும் எழுந்திருப்பான்" (நீதி 24:16) என்று சாலமோன் சொன்னது தன்னைப் போன்றவர்களைப் பற்றித்தான் என நினைத்து ஏமாந்து போகிறான். அவன் பாவத்தை வெற்றி கொள்ளுவதும் இல்லை, வெற்றி கொள்ள நினைப்பதுமில்லை.

2. நீதிச்சட்ட ஆவியின்படி வாழுவர்கள்:

இப்படிப்பட்ட ஒருவனுடைய இருதயத்தைக் கடவுள் தொடுகிறார் என்பது உண்மையே. அப்படிப்பட்டவனுடைய கண்கள் காலங்களுக்கூடாக அல்லது சடுதியாக திறக்கப்படுகின்றன. இருட்டுத் திரையை நீதிச் சட்டம் நீக்கிவிடுவதால், உண்மை நிலையை அவன் உணருகிறான். 'அன்பின் கடவுள்', 'கோபத்தின் கடவுளுமல்ல' இருக்கிறார், என்பதை உணர்ந்து கொள்ளுகிறான். உண்மையின் கடவுள் அநீதர்களை, அவர்களுடைய செயல்கள், வாக்குகளுக்காக மாத்திரமல்ல, அவர்களுடைய கெட்ட இருதயத்தின் நிமித்தமும் தண்டிக்கிறார், என உணர்கிறான். -"நான் அறிவிக்கிற அருட்செய்தியின் படி, கடவுள் இயேசுக் கிறிஸ்துவைக் கொண்டு, மனிதரின் உள்ளத்தில் மறைந்திருக்கிறவைகளைக் குறித்துத் தீர்ப்பளிக்கும் நாளில், அவர்களுடைய சிந்தனைகள் அவர்களைக் குற்றவாளிகள் என்றோ, குற்றமற்றவர்கள் என்றே தீர்ப்பளிக்கும் "(ரோமர் 2:16). உயிருள்ள கடவுளின் கைக்குள் விழுவது 'அவர்களுக்கு ஐயோ' என்பதையறிவார்கள்.

கடவுளுடைய நீதி விசாலமானது, அதில் எவருக்கும் எந்தச் சலுகையும், தவிர்ப்பும் இல்லை என்பதை அவன் காண்கிறான். கடவுளுடைய திருவாக்கும் உயிருள்ளது, என்பதை அறிந்து கொள்ளுகிறான். "கடவுளின் திருமொழி உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் கூர்மையான எந்த வாளையும் விடக் கூர்மையாய் இருக்கிறது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்குமளவுக்குக் குத்தி ஊருருவுகிறது; கணுக்களையும் உளனையும் அவ்வாறே செய்கிறது; உள்ளத்தின் நோக்கங்களையும் எண்ணங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. படைக்கப்பட்டவற்றுள் எதுவும் அவருடைய பார்வைக்கு மறைவாய் இல்லை. யாருக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமோ, அவருடைய கண்களுக்கு முன்னால் எல்லாம் மறைப்பு எதுவுமின்றி வெளிப்படையா இருக்கின்றன" (எபி 4:12,13). 'கொலை செய்யாதிருப்பாயாக' என்ற சத்தம், நீதிச்சட்டப்படி வாழுவவன் காதில் விழுந்தவுடனேயே, அது, தன் அயலவனை 'வெறுப்பதும்' கொலை செய்வதற்குச் சமமானது என்று அவனை உணரச் செய்கிறது. ஒருவனைப் பார்த்து, 'நீ ஒரு மடையன்' என்பதும் கொலை செய்வதைப் போன்றதே என்பதை அறிந்துகொள்ளுகிறான் (மத் 5:21,22). 'கற்புநெறி தவறாதே' என்பது நீதிச் சட்டம், ஆனால், ஒரு பெண்ணைக் கெட்ட எண்ணத்தோடு பார்க்கிற எவனும் தன் உள்ளத்தில் 'கற்பு நெறி தவறிவிட்டான்' என்பதை அவன் உணர்ந்து கொள்ளுகிறான். (மத் 5:27,28).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளிடம் எவற்றையும் மறைத்து வைக்க முடியாதென்றும் (சங் 139:7), அவருக்கு எல்லாருமே கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும் அவன் அறிந்து கொள்ளுவான்.அவனுடைய இருதயம் கடவுளோடு சரியான உறவு கொண்டிருக்க வில்லை என்பது அவனுக்குத் தெரியும்.எனவே,அவனுள் ஒரு புது ஆத்ம உணர்வு தோன்றி; அவனது உடலையும் உயிரையும் இரண்டாம் மரணம் அழித்துவிடும் என அவன் நம்பிக்கை கொள்ளச் செய்கிறது.எல்லா விதப் பொய் வேடத்தையும் அவன், களைந்துவிட விருப்புடையவனாய் இருப்பான்.கடந்துபோன உலக ஆசைகள் யாவும் இப்போது அவனுக்கு சுவை அற்றுக் காணப்படுகின்றன.

அவன் இதயத்தில் ஆவி வேதனையடைகிறது.பெருமை,கோபம்,பொறாமை,ஆகிய தற்குணங்களுக்காகத் துன்பமடைகிறான். தான் இழந்துவிட்ட திருவருள் நிமித்தமும், வர இருக்கும் தண்டனைத் தீர்ப்பு நிமித்தமும் அவனுடைய இருதயம் கலங்குகிறது. எல்லாவற்றையும் கண்டு பயப்படுகிறான். பாவத்திற்காக துன்பமடைவதைப் பார்க்கிலும் இறந்து விடுவதே மேலானது என எண்ணுகிறான். இன்னதுதான் திருக்கட்டளை என்று அவனுக்குத் தெரியவந்தபோதே,பாவம்'உயர்பெற்றதை' (ரோமர் 7:9) அவன் அறிந்து கொண்டபடியினால்; "அந்தோ', என நிலை மிகமிக இக்கட்டான நிலை,சாவின் ஆட்சிக்கு உட்பட்ட இந்த உடலினின்று என்னைக் காப்பாற்றக்கூடியவர் யார்?" (ரோமர் 7:24) என்று மனம் விட்டுக் கதறி; "நம்முடைய ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து மூலமாகக் கடவுள் செய்கிறார், அவரைப் புகழ்ந்து போற்றுகிறேன்" (ரோமர் 7:25) என்று சொல்லி ஆறுதலடைகிறான்.திருக்கட்டளைகளினால் தரமுடியாத மன அமைதி,இயேசுவால் கிடைக்கிறது (ரோமர் 7ம் அதிகாரம் முழுவதையும் வாசித்தல் பயனுள்ளது ).

3. கடவுளுடைய கிருபை ஆவியின்படி வாழுபவர்கள்:

இது,கடவுளுடைய கண்களில் தயவு கிடைக்கப்பெற்று,அவருடைய இரக்கத்தினால் தூய ஆவியானவரின் அருள் கிடைக்கப்பெற்று, வாழும் ஒருவனுடைய வாழ்வுநிலையாகும்.இந்த நிலை, கடவுளுடைய கிருபையினால் மாத்திரமே அருளப்படுகிறது.கடவுளுடைய கிருபைக்கு உரித்தாகி விட்ட ஒருவன், அவருடைய தூய ஆவியானவரையும் பெறுகிறதோடு,அவன் இருதயத்தில் கடவுளுடைய வல்லமையினாலும் நிரப்பப்படுகிறான். இப்படிப்பட்டவனே கடவுளை 'அப்பா,பிதாவே' என்று அழைக்கும் சிலாக்கியத்தைப் பெறுகிறான்.தனது இக்கட்டுக் காலத்தில்,அவன் ஆண்டவரை நோக்கி மன்றாடினபோது,கடவுள் அவனை அவனுடைய இக்கட்டிலிருந்து மீட்டுவிட்டார்(சங் 107:6,13,19,28). அவன் கடவுளுடைய மகிமைக்காக அவரை வேண்டி நின்ற பொழுது,அவனுக்கு அவர்தம் கிருபையை வாக்குப்பண்ணினார் (யாத் 33:18,19).

கடவுளின் ஒளி எப்போதும் அவனிடத்தில் வீசும்.அவனுடைய வாழ்வில் எல்லாரும் கடவுளின் ஒளியைக் காண்பார்கள், கடவுளும் எல்லாருக்கும் வெளிப்படையாகுவர் (வெளி 1:7). அவன் தன் அறிவினால் அறிந்துகொள்ள இயலாதிருந்தவற்றைக்

8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளுடைய ஆவியானவர் அவனை உள்ளத்தில் வெளிப்படுத்துவார். அவ்வித வெளிப்பாடு கிடைக்கும் போது ,அவன்,'என் ஆண்டவரே, என் கடவுளே' (யோவான் 20:28) என்று சொல்லிக் கதறுவான். இப்போது அவனுக்கு மீட்பின் நிச்சயம் இருக்கிறது" "நாம் கடவுளை எதிர்ப்பவர்களாய் இருந்தபோது,அவருடைய மைந்தரின் மரணத்தின் மூலம் அவரோடு நமக்கு நல்லுறவு உண்டாயிற்றென்றால் ,அப்படி நல்லுறவு உண்டானபின்,என்றும் உயிரோடுள்ள அந்தத் திருமைந்தரால் நாம் மீட்புப்பெறுவோம் என்பதும் திண்ணமன்றோ?" (ரோமர் 5:10).இப்பொழுது அவனிலும் அவனுக்குள்ளும் கிறிஸ்துவே வாழுகிறார்.-" எனவே,இப்போது உயிர் வாழ்வது நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்..." (கலா 2:20). ;"நாம் வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்,செத்தாலும் ஆண்டவருக்கென்றே சாகிறோம். ஆகவே,நாம் வாழ்ந்தாலும் செத்தாலும், ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம்" (ரோமர் 14:8). கிருபை வாழ்வு வாழ்பவனுடைய வாழ்க்கையில் "'பாவமும்' அதன் 'வல்லமையும்' இல்லை. அவனுடைய இதய ஆவியின் வியாகுலம் முடிந்து விடுகிறது.அடிமைத்தனத்தின் பயம் அவனிடத்தில் காணப்படுவதே இல்லை. அவன் தசாத்தானுக்கும் பயப்படுவதில்லை. எனவே அவனிடத்தில் மரணபயம் இருக்காது.மனித கைகளினால் கட்டப்படாத,கடவுளால் மாத்திரமே கட்டப்பட்ட 'வீடு' ஒன்று, தனக்காக விண்ணகத்தில் ஆயத்தமாயுள்ளது என்பதை அவன் அறிவான்.

அவன் இனி ஒருக்காலும் பாவத்துக்குப் பணி செய்யான். (ரோமர் 6).அவன் முற்றுமுழுதாய் விடுதலை அடைந்தவன். அவனுக்கு இப்போது இருப்பதெல்லாம், கடவுள் பிள்ளைகளுக்குரிய விடுதலை ஆவியே. இவனிடத்தில் கடவுள் அன்பும்,மனித அன்பும் நிறைந்திருக்கும்.

ஒப்புவமைகாட்டி சுருக்கமாகக் கூறின், கீழ்க்கண்டவாறு பார்க்கலாம்.

(அ) ஜென்ம பாவ ஆவியுடையவன்:

1. கடவுளைப் பற்றிய எந்த அறிவும்அவனுக்கில்லை.
11.அவன் வாழ்வை பொய்ச்சமாதானம் ஆளுகை செய்யும்.
111.தனக்கு முழுச் சுயாதீனம் உண்டென்று நம்புகிறான்.
1V.மனதாரப் பாவம் செய்கிறான்.
V .பாவத்திற்கு எதிராய்ப் போர்புரிவதும் இல்லை,வெற்றியடைவதுமில்லை.

(ஆ) நீதிச்சட்ட ஆவியுடையவன்

1 .கடவுளை அறிவான்., நரகுலகைக் கண்டு அஞ்சுகிறான்..
11.அவன் வாழ்வில் சமாதானம்இல்லை.
111.சட்டத்திற்கு அடிமையாய் வாழ்கிறான்.
1V .மனக்குருதாமல் பாவம் செய்கிறான்.
V .பாவத்திற்கெதிராய்ப்போர் புரிகிறான்.ஆனால் வெற்றிகொள்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கிருபை ஆவியுடையவன்.

1. கடவுளை அறிவான், விண்ணுலக ஒளியின் மகிழ்ச்சி அவன் உள்ளத்திலிருக்கும்.

11. அவன் வாழ்வை மெய்ச்சமாதானம் ஆளுகை செய்யும்.

111. அவன் பாவம் செய்யான்.

1V. அவன் மேல் அன்பு செலுத்தசிறவர் மூலம், அவன் பாவத்தை எதிர்த்துப் போர் செய்து, வெற்றியடைகிறான்.

குறிப்பு:- மேற்சொன்ன மூன்று வகையான வாழ்வு நிலைகளையும், நாம் ஆராய்வுக் கண்கொண்டு பார்க்கும்பிடத்து, மனிதனை உண்மையுள்ளவன் என்றும், உண்மையில்லாதவன் என்றும் நம்மால் தீர்மானிக்க முடியவில்லை.

மூன்று நிலைகளிலும் ஒருவன் உண்மையுள்ளவனாய் இருக்கலாம். ஒருவன் 'உண்மையாய்' இருக்கிறான் என்பதை வைத்து, அவன் கடவுளோடு ஒப்புரவாகி விட்டான் என்று சொல்ல முடியாது. எனவே, ஒருவனை நாம் எடைபோடக்கூடிய கருவி 'அவன் விசுவாசியா( அல்லது அவிசுவாசியா' என்பதே, எவன் மெய்யான 'விசுவாசி' என்பதையறிவதிலும் இரண்டு நிலை உண்டு.

(அ) அந்த விசுவாசம் கடவுளின் அன்புடையதா?, அது கடவுருக்குப் பயப்படுதலா?, அது உலக விருப்புகளை விட்டு விடுவதா?, அது உலக களியாட்டங்களில் நாட்டங் கொள்ளாமல் வாழுதலா?....- இவை விசுவாச தன்மைகளே எனினும், இத்தன்மைகள் கொண்ட ஒருவன், நீதிச்சட்டத்தைக் கடைப்பிடித்து, அவற்றுக்கு அமைந்து வாழும் யூத சன்மார்க்கனுக்கு மிகக் கிட்ட உள்ளவன்.

(ஆ) அந்த விசுவாசம் விண்ணகத்தின் மகிழ்ச்சி அறிவை உள்ளத்தில் ஏற்படுத்துகிறதா? கடவுளை நீ அப்பா பிதாவே என்று அழைக்கும் ஆவியை அது உன்னுள்ளத்தில் தருகிறதா?, நீர் மரணப் பள்ளத்தில் இருக்கும் ஒருவனைப் போன்று, கடவுளே என்னைக் காப்பாற்றும் என்றழைக்கும் நிலையை அது உனக்குத் தருகிறதா?, அனுதினமும் நீ பாவத்தோடு போர் செய்து அதை வெற்றி கொள்ளுகிறாயா?, நான் விடுதலை அடைந்துவிட்டேன் என்ற உணர்வு உனக்கு உண்டா?- அப்படியானால், நீ 1கிறிஸ்துவை அறிவாய். இந்த அறிவே மெய்விசுவாசமாகும்.

தம்மைப் பற்றி எண்ணவேண்டியதற்கும் அதிகமாய் எண்ணுபவர்கள் பலர் இருககிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நாம் நமது அருளுரையில் பார்த்த மூன்று நிலைகளினதும் கலப்பு மனிதர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிலர் மார்க்கசாலிகளாய் இருப்பர். அவர்களிடத்தில் பெரிய விசாலமான உள்ளமும் இரக்க சிந்தையும் காணப்படும். அவர்கள்; சாந்தம், பொறுமை, இச்சையடக்கம் ஆகிய சற்குணங்கள் பொருந்தியவர்களாய் இருப்பார்கள். அவர்களிடத்தில் துன்மார்க்கமே இல்லை; நீதி, இரக்கம், உண்மை ஆகியவற்றின் ஆளுகைக்குள் அவர்கள் வாழுவர்கள். ஏழைகளுக்கு உணவும் உடையும் அளிப்பார்கள். ஆலய வணக்கத்தில் ஒழுங்காக ஈடுபடுவார்கள். மார்க்க சடங்குகளை உள்ளான இதயசுத்தத்தோடு ஆதரிப்பார்கள்...., எனினும் இவர்கள் நிச்சயமாகவே கடவுளுடைய கிருபை ஆவியின்படி வாழுபவர்கள் என்று சொல்ல முடியவில்லை. ஏனெனில், கடவுளை 'அப்பா பிதாவே' என்றழைக்கும் ஆவியைப் பெற்றவன் மாத்திரமே கிருபை ஆவியின்படி வாழுவன்-இதுதான் கிறிஸ்தவம் காட்டும் 'விசுவாச நிலை', 'கடவுளுடைய மைந்தர்' என்னும் நிலை.

*----------*

6

## ஆவியானவரின் சாட்சி - 1
## THE WITNESS OF THE SPIRIT - 1

"நாம் கடவுளுடைய பிள்ளைகளென்று நம் ஆவி உணர்த்தும் உண்மையை, அந்த ஆவியானவர் தாமே உறுதிப்படுத்துகிறார்" (ரோமர் 8:16).

(குறிப்பு- இது ஒரு கோட்பாட்டு அருளுரை. வேறு திருஅவைப் பிரிவுகளும், தூய ஆவியானவருடைய சாட்சியின் நிச்சயம் பற்றி போதித்துள்ளன. ஆனால், உவெஸ்லி... போதனைக்கு அவை ஈடாகாது. எனவே, இவ்வருளுரை மெதடிஸ்த திருஅவையின் 'நமது கொள்கைகளுள்' பிரதானமாய் இருப்பதோடு, இறையியலுக்கு மெதடிஸ்தவம் வழங்கும் ஒரு பெறுபேறாகவும் காணப்படுகிறது.

ஒரு விசுவாசியானவன் தனது இரட்சிப்பு பற்றிய முழுநிச்சயம் அடையவேண்டும் என்பதை ஜோன் உவெஸ்லி 'மொறேவியரிடமிருந்து' முதன் முதலாக அறிந்து கொண்டார். இந்த அறிவை நான் ஒரு 'புது நற்செய்தியாகப்' பெற்றேன் என்று உவெஸ்லி தன் நாட்குறிப்பேட்டில் எழுதியுள்ளார் (1738 வைகாசி-24). தூய ஆவியானவர் தரும் சாட்சியின் நிச்சயத்தை அடையாத ஒருவன், விசுவாசத்திலும் முழுமை அடையவில்லை என்பதே உவெஸ்லியின் நிலைப்பாடாகும். இவ்வருளுரையை நாம் இரண்டு பகுதிகளாக இங்கு காண்கிறோம்.)

### அருளுரை

இவ்வருளுரையில் நாம் தியானிக்க விரும்புவது மத வைராக்கியம் அல்லது குருட்டு விசுவாசம் பற்றியல்ல. அப்படிப்பட்டவர்களோடு நிதானமான காரியங்களையிட்டு பேசமுடியாது. அப்படிப் பேச முயலுபவர்களை அவர்கள் 'கடவுளுடைய விரோதிகள்' என்றும் கடவுளுக்கெதிராகப் போர் தொடுப்பவர்கள் என்றும் அழைப்பார்கள். மார்க்க தெளிவுகளையிட்டு அவர்களுக்கு உணர்த்துவது மனிதரால் இயலாத காரியம். 'ஆவியானவரின் சாட்சி' என்றுள் இருக்கிறது என்று ஒருவன் சொன்னால், அவர்கள் அதை நம்பவே மாட்டார்கள். அந்த அநுபவம் 'அப்போஸ்தல காலத்து' அனுபவம் என்றும், அது கிறிஸ்தவர்களாய் இருப்போர் எல்லாருக்கும் அருளப்படுவதில்லை என்றும் அவர்கள் அடித்துச் சொல்லுகிறார்கள்.

'நமது ஆவி' கொடுக்கும் சாட்சி என்னவென்றும், 'தூய ஆவியானவர்' கொடு... சாட்சி என்னவென்றும், 'நாம் கடவுளுடைய பிள்ளைகள் தான்' என்று தூய ஆவியா... வர் நம்மோடு எப்படிச் சொல்லுகிறார் என்றும் நாம் பகுத்தறிவது நல்லது. மேலோட்டமாய்ப் பார்க்கும்போது 'நமது ஆவியின்' சாட்சிக்கும், 'கடவுளுடைய ஆவியானவரின்' சாட்சிக்கும் அவ்வளவு வேற்றுமை காணப்படமாட்டாது என்றறிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று ஆழமாகப் பார்க்கும் போதுதான், இந்த இரண்டு விதமான சாட்சிகளுக்கு மிடையேயுள்ள வேற்றுமை நமக்குத் தெளிவாய்ப் புரியும். நமது ஆவியும், தூயஆவி யானவரும் சேர்ந்து கொடுக்கும் சாட்சியானது, மனித முயற்சியினாலோ அல்லது மனித துணிவினாலோ ஏற்படும் ஓர் அனுபவமல்ல. அவ்வனுபவம் சாத்தானுடைய ஒரு ஏமாற்று வேலையுமல்ல. இந்நிலைகளை, அதாவது 'நமது ஆவியின் சாட்சி'; 'தூய ஆவியானவரின் சாட்சி'; அச்சாட்சி 'மனித துணிவினால்' அல்ல என்ற அனுபவ உணர்வுகளை நாம் தனித்தனியாய் ஆராய்வது நல்லது.

1. நமது ஆவியின் சாட்சி:

நாம் கடவுளுடைய பிள்ளைகள்தான் என்பதை நாமும் மற்றையோரும் அறிந்து கொள்ளுவதற்கு, கிறிஸ்தவ இலட்சணங்களைச் சுட்டிக் காட்டிடும் நமது உணர்வே 'நமது ஆவியின் சாட்சி' எனக் கூறலாம். அவரை (கடவுளை) நாம் அறிந்திருக் கிறோம் என்பது அவருடைய கட்டளைகளை நாம் கடைப்பிடிப்பதால்தான் நமக்குத் தெரியவரும் (1 யோவான் 2:3). ஏனெனில், கடவுளுடைய வார்த்தை இன்னதுதான் என அறிந்து, அதைக் கடைப்பிடித்து நடக்கிறவன் எவனோ அவனிடம் கடவுளுடைய அன்பின் நோக்கம் முற்றும் நிறைவேறிவிட்டது என்பது உறுதி. "அவர் நீதியுள்ளவர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?. எனவே, நீதியை நிறைவேற்றிவரும் எவனும் அவரால் பெற்றெடுக்கப்பட்டவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்" (1யோவான்2:29 நாம் மரணத்திலிருந்து மெய்வாழ்வுக்குள் வந்திருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். எப்படியெனில், நாம் சகோதரரிடம் அன்பு கொள்கிறோம். அன்பு காட்டாதவன் எவனோ, அவன் இன்னும் மரண நிலையிலேயே உள்ளான். அவர் தந்த கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறவன் அவருக்குள் நிலைத்திருக்கிறான்; கடவுளும் அவனுக்குள் நிலைத்திருக்கிறார்.

ஒருவன் என்னிடம், "நீர் கடவுளுடைய பிள்ளைதான் என்பதை எப்படி அறிவீர்?" எனக் கேட்கலாம். அப்படிப்பட்டவனிடம் நான் திருப்பிக் கேட்கக்கூடிய கேள்வி, "நீர் உயிரோடு இருக்கிறாய் என்பதை எப்படி அறிவீர்?" என்பது தான். நான் உயிரோடு இருக்கிறேன், நான் சாகவில்லை என்பது எனது மனத்திற்கு நன்கு தெரியும் என்று அவன் சொல்வானேயாகில்; எனது பதிலும் அப்படித்தான் இருக்கும்-" நான் கடவுளுடைய பிள்ளைதான் " என்பது என் 'மன உணர்வுக்கு' தெளிவாய்த் தெரியும், கடவுள் என்னுள் உயிருள்ளவராய் இருக்கிறார் என்பது என் மன உணர்வுக்கு நன்கு தெரியும்-அதனால்தான் நான் அவர்மேல் அன்பு செலுத்துகிறேன். கடவுளுடைய பிள்ளைக்குரிய இலட்சணங்கள் என்னில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்-அதனால்தான் நான் என் சகோதரன்மேல் அன்பு செலுத்துகிறேன். நான் செய்யும் யாவற்றையும் கடவுளுடைய மாட்சிமைக்காகவே நான் செய்யவேண்டும் என்பது என் மனத்திற்கே தெரியும். எனது அந்தரங்கமும், எனது வெளியரங்கமும் கடவுளுக்கு உண்மையானவற்றையே செய்ய வேண்டும் என என் மனமே என்னைத் தூண்டுகிறது. வெளிப்படையான சில அடையாளங்கள்; கடவுள் மேலும் மனிதர் மேலும் அன்பு செலுத்துதல், ஒரு சிறுபிள்ளை தன் தந்தைமேல் வைத்திருக்கும் நம்பிக்கை போன்ற விசுவாசம் வைத்திருத்தல், கடவுள்மேல் எல்லாக் கவலைகளையும் போட்டுவிடல், என்பனவாம். கடவுளுடைய உதவியோடு, விண்ணகத் தந்தைக்கு ஏற்ற வாழ்வு வாழும் படி என்னைத் தூண்டுவது 'என் மனமே', சுருங்கக் கூறின் என்னுடைய 'மன உணர்வே' 'என் ஆவியின்' சாட்சி எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.. முதலாம் குறிப்பில் நாம் பார்த்தவைதான் 'நமது ஆவியின்' சாட்சி என்றால், கடவுளுடைய ஆவியானவரின் சாட்சிதான் என்ன? கடவுளுடைய ஆவியானவர், நமது ஆவியோடு சாட்சி கொடுக்கிறார் என்பதன் பொருள் என்ன?

கடவுளுடைய ஆழத்தை விளக்குவதற்கு மனித வார்த்தைகள் போதாது. ஆனால் சுருங்கக் கூறின், ஆவியானவரின் சாட்சியானது மன உணர்வுமல்ல, சிந்தை உணர்வுமல்ல; அது 'இருதய உணர்வாகும்'. 'நான் கடவுளுடைய பிள்ளை', 'இயேசு எனக்காகவே தம்மைச் சிலுவைமீது ஒப்புக் கொடுத்தார்', 'என்னுடைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டுவிட்டன', 'நான் இப்பொழுது கடவுளோடு ஒப்புரவாகிவிட்டேன்' - என்று நான் என் இருதயத்தில் உணரும் உணர்வே கடவுளுடைய ஆவியானவரின் சாட்சியாகும். இந்த இருதய உணர்வை என் மனமும் ஒப்புக்கொள்ளுதலே, "கடவுளுடைய ஆவியானவர் என் ஆவியானவரோடு" பகரும் சாட்சியாகும்.

இவ்விடத்தில், ஒரு விசுவாசியினிடத்தில், 'கடவுளுடைய ஆவியானவர்' முந்திக் கொள்ளுகிறார். அப்படி இருதய உணர்வு முந்திக் கொள்ளுவதாற்தான், என் மன உணர்வு (என் ஆவி), என் இருதய உணர்வை (கடவுளுடைய ஆவியானவரின் சாட்சி) ஒப்புக் கொள்ளுகிறது, நான் கடவுளுடைய பிள்ளைதான் என்பதை என் இருதயத்தோடு சேர்ந்து உறுதிப்படுத்துகிறது. கடவுள்மேல் நாம் அன்பு செலுத்துவதினாற்தான், நம்மில் தூய வாழ்வு உண்டாகிறது; நாம் அவர்மேல் அன்பு கொள்ள முதல் அவர் நம்மேல் ------------------------------ அன்பு கொள்ளுவதினாற்தான், நம்மால் அவர் மேல் அன்புகொள்ள முடிகிறது. நாம் கடவுளை நேசிக்கிறோம், ஏனெனில் அவர் நம்மேல் ஏற்கனவே அன்பு கொண்டுள்ளார். ஆகவேதான் நமது உள்ளானமன உணர்வுக்கு (நமது ஆவியின் சாட்சி), நமது இருதய உணர்வு (தூய ஆவியானவரின் சாட்சி) முந்தியது எனக்கூறினோம். "கடவுள் என்னை நேசிக்கிறார், அவர் தமது மைந்தரின் வாழ்வை எனக்காகவே ஒப்புக்கொடுத்து கிருபாதாரபலியானார்" என்பதன் நிச்சயம் ஒ என் இதயத்தில் தோன்றுவதாற்தான், என்னால் கடவுள்மேல் அன்பு கொள்ள முடிகிறது. கடவுள்மேல் நாம் அன்பு கொள்ளுதல் மாத்திரமல்ல, அவர் நிமித்தம் நம் சகோதரர் மேலும் நம்மால் அன்பு செலுத்த முடிகிறது. நமது இருதய உணர்வினால்தான் (கடவுளுடைய ஆவியானவரின் செயல்கள்) நமது மன உணர்வு (நம் ஆவியின் செயல்கள்) பலமடைகின்றன. கடவுளுடைய ஆவியானவரின் அநுக்கிரகம் பெற்ற ஒருவன், 'தான் கடவுளுடைய பிள்ளைதான்' என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை.

கடவுளுடைய ஆவியானவரின் செயல்கள் எப்படி நம் இருதயத்தை ஆக்கிரமிக்கின்றன என்பதை விளக்குவது மிகவும் கஸ்டமானது. அது அவனவன் இருதயத்திற்கும் கடவுளுக்கும் மாத்திரமே தெரிந்த உண்மை. அவ்வறிவு வியப்பானது, மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. "காற்று தனக்கு விருப்பமான இடத்தில் வீசுகிறது; அதன் ஓசையை நீ கேட்கிறாய்; ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்பதும், எங்கே செல்லுகிறது என்பதும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனும் அப்படியேதான் இருப்பான்" (யோவான் 3:8). நடு மதியத்தின் சூரிய ஒளியை எவன் சந்தேகிக்கானோ, அவன் தன் இருதயத்தில் உண்டாகும் ஆவியானவருடைய சாட்சியையும் சந்தேகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிருப்பான்,கடவுள் சூரிய ஒளி அவனிடத்தில் ஒளிரும் போது,அவனது இருதயம் 'அனலடையாதிருப்பது' எப்படி?

3. மூன்றாவதாக;நமது ஆவியும், தூய ஆவியானவரும் சேர்ந்து கொடுக்கும் சாட்சியின் தன்மை என்ன என்று பார்ப்போம்.நாம்,இதுபற்றி முதல் இரண்டு குறிப்புகளிலும் பார்த்தாலும்,அந்த இரட்டைச் சாட்சி எத்தகையது என்பதையே இங்கு ஆராய்வோம்.

(அ) இது ஒருவனுடைய மனத்துணிவும் அல்ல,அவனுடைய இருதயத் துணிவுமல்ல. அப்படியேயாகில்,அது பாவ மன்னிப்படையாத ஒருவனிடமிருந்து வரும் 'சாட்சி' ஆகிவிடும்.அப்படிப்பட்டவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு கபடன் அவனுக்கு 'இருட்டு' 'ஒளியாகத்'தோன்றும்.அவன் திருமறையைத் திருப்பிப் பார்ப் பானேயாகில்; 'மனமாற்றமடையுங்கள்' என்பதன் கருத்தைத் தான் அறியவில்லை. (மத் 3:2 ,மாற்கு 1:5,அப் 2:38,அப் 3:19) என்பதை உணர்ந்து கொள் ருவான். தன் பாவங்களுக்காக மனம்/இருதயம் உருகாதவனிடம் ஆவியானவரின் சாட்சி இல்லவே இல்லை; அவனிடத்தில் நொருங்குண்டதும் நருங்குண்டதுமான இதயம் இல்லை; பாவங்கள் தன் வாழ்க்கையில் 'பாரங்கள்' என்பதை உணருவதேயில்லை. "ஒரு காலத்தில் நீங்கள் உங்கள் தவறுகளையும் பாவங்களையும் முன்னிட்டு இறந்தவ ர்களாயிருந்தீர்கள்","நாம் தவறுகள் காரணமாக நாம் இறந்தவர்களாயிருந்த போதிலும்,நம்மைக் கிறிஸ்துவோடே உயிருள்ளவர்களாக்கினார்-அருளாலேயே நீங்கள் மீட்கப்பட்டீர்கள்"; "அவர் கிறிஸ்து இயேசுவின் மூலம் நமக்குக் காட்டிய பரிவும் அவரது அளவற்ற அருட்செல்வமும் இனிவரும் எல்லாக் காலங்களிலும் தெளி வாக விளங்குவதற்காகவே இவ்வாறு செய்தார்" என்று அபேசியர் 2: 1ம், 5ம்,7ம் வசனங்களில் சொல்லியுள்ளவற்றின் உண்மைப்பொருளை அறியாதவர்களே மனத் துணிவு பெற்றுப் பொய் வேடம் போடுவர்.அப்படிப்பட்டவர்களிடத்தில் "உள்ளான மகிழ்ச்சி", 'உள்ளான தாழ்மை' ,'உள்ளான கீழ்ப்படிவு' இருப்பதேயில்லை (யோவான் 14:21).

இங்கே ஒரு கேள்வி எழுகிறது- பகல் நேர சூரிய வெளிச்சத்தைப் போன்றதா நீங்கள் சொல்லும் இந்த 'இரட்டைச் சாட்சி' அல்லது ஒரு சிறு விளக்கின் ஒளி போன்றதா அது?. என்றும் மங்காத ஆதவனாகிய கடவுள் நம் இதயத்தில் உதயமாகும்போது அது எப்படிப்பட்ட ஒளி என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.ஆனால் இந்த 'கடவுள் ஆவியானவரும்' 'நமது ஆவியும்' சேர்ந்து அளிக்கும் சாட்சி பற்றி முழுமையாக விளங்கப் பண்ண மனிதராலும் முடியாது, தேவதூதராலும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) இப்போது நமது சிந்தையிலுள்ள இந்த 'இரட்டைச் சாட்சி', சாத்தானின் வஞ்சனையுமல்ல. அது சாத்தானின் வஞ்சனையாயிருந்தால், இருதயத்திலிருந்து எதுவுமே எழாது. சாத்தானின் வஞ்சனையாய் இருந்தால்; "அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், இரக்கம், தாழ்மை..." போன்ற ஆவியின் கனி ஒருவனிடத்தில் காணப்படமாட்டாது. அப்படிப்பட்ட ஒருவன் ஒளியில் நடக்க விரும்பான். அப்படிப்பட்டவன் கடவுளுக்குக் கீழ்ப்படியும்படி ஒருக்காலும் சாத்தான் விடான். பாவங்களை மன்னிக்கும் வல்லமை சாத்தானுக்கு இல்லை. அவற்றை அதிகரிக்கவே செய்வான். "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" என்று சொல்லுவதற்குச் சாத்தான் தடைபோடுவான்.

*-----------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

## ஆவியானவரின் சாட்சி- 11
## THE WITNESS OF THE SPIRIT - 11

"நாம் கடவுளுடைய பிள்ளைகளென்று நம் ஆவி யுடனிருந்து உண்மையை, அந்த ஆவியானவர், தாமே உறுதிப்படுத்துகிறார்" (ரோமர் 8:16).

(குறிப்பு- இவ்வருளுரை 1769 ஆம் ஆண்டு சித்திரை 4ம் திகதியன்று ஜோன் உவெஸ்லி அவர்களால் நியூரி என்ற இடத்தில் ஆற்றப்பட்ட தொன்றாகும். இது, இச்சிறுநூலில் காணப்படும் 6ம் அருளுரையின் ஒரு தொடர்ச்சி என்று சொல்லலாம். ஆனால், தொடர்ச்சியை விட ஒரு விளக்கவுரை என்பதே பொருத்தமானது. 6ம் அருளுரையில் சொல்லப்பட்ட பல கருத்துக்கள், இதில் திரும்பவும் சொல்லப்படுகின்றன.)

அருளுரை:

பரிசுத்த திருமறை கடவுளுடைய வாக்குதான் என்று நம்புகிற ஒருவன், தூய ஆவியானவருடைய சாட்சி உண்டென்றும், அது விசுவாசியொருவன் அடையும் சலாக்கியம் அல்லது நற்பேறு என்றும் நம்புகிறான். இந்தச் சலாக்கிய அநுபவம், புதிய ஏற்பாட்டில் பல இடங்களிலும் பல தடவைகளிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன- தற்செயலாக அல்ல, கடவுளுடைய சித்தத்தின்படியே அவ்விதம் நடந்தேறின. இலவசமாய் அருளப்படும் 'ஆவியானவரின் சாட்சி' நற்பேறை நாம் ஒதுக்கி விடுவோமேயாகில், நமது பக்தி வாழ்வு 'பொய்ப் பக்தி' என்ற நிலை ஏற்பட்டுவிடும்; நமது விசுவாசமும் 'குருட்டு விசுவாசம்' ஆகிவிடும். மெதடிஸ்தவர்கள் நன்றாய் அறிந்து விளங்கிக்கொண்டபின், ஏனையோருடனும் தம் அநுபவத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும், என்பதற்கான ஒரு 'கோட்பாடாகவே' இது இருக்கிறது. ஏனெனில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் 'கடவுளுடைய பிள்ளைதான்' என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே ஒவ்வொரு மெதடிஸ்தனுடைய அவாவாயிருத்தல் வேண்டும்.

1. 'சாட்சி' என்ற கிரேக்க சொல், சாட்சியிடுபவனையல்ல, சொல்லப்படும் சாட்சியையே கருதுவதாய் உள்ளது. சொல்லப்படும் சாட்சிச் செய்திக்குப் பின்னணியில், அதைச் சொல்லுபவர் ஒருவர் இருக்கிறார் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை." அந்தச் சாட்சியமாவது, கடவுள் நமக்கு என்றுமுள்ள மெய்வாழ்வைத் தந்தருளினார்; அந்த வாழ்வு அவருடைய மைந்தருக்குள் இருக்கிறது" (1யோவான் 5:11) -இது சாட்சியம்; இதைச் சொல்லும் சாட்சியானவர் யோவான். எனவே சாட்சிச் செய்தியும், சாட்சியிடுபவரும் பிரிக்க முடியாத நிலையில் உள்ளது. இத்தகைய சாட்சியத்தைச் சொல்லத்தூண்டுகிறவர் தூய ஆவியானவரே, "நாம் கடவுளுடைய பிள்ளைகளே" என்று சொல்லப்படாத எந்தச்சாட்சியமும் தூய ஆவியானவருடைய சாட்சியமல்ல. அதுவும், தூய ஆவியானவர் நம் ஆவியோடு பகரும் சாட்சியமே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

மெய்ச்சாட்சியமாகும். இவ்வித சாட்சிய அநுபவம் பெறுபவன், தன் வாழ்விலே; அன்பு, மகிழ்ச்சி, மன அமைதி, பொறுமை, பரிவு, நற்பண்பு, நாணயம், சாந்தம், தன்னடக்கம் ஆகிய தெய்வ ஆவி விளைவிக்கும்கனியை (கலா 5:22,23) பெற்றவனாய் இருப்பான். ஒருவனிடத்தில் தெய்வ ஆவி விளைவிக்கும் கனி காணப்படா விட்டால், அப்படிப்பட்டவனிடத்தில் ஆவியானவரின் சாட்சி இல்லவே இல்லை என்று துணிந்து சொல்லலாம்.

. கடவுளுடைய ஆழங்களை எவராலும் முற்றுமுழுதாய் அறியவும் முடியாது, விளங்கப் பண்ணவும் முடியாது என்பது திண்ணம். ஆனால், 'நாம் கடவுளுடைய பிள்ளைகள்' என்றும், 'கிறிஸ்து நமக்காகவே இரத்தம் சிந்தி மரித்தார்' என்றும், 'நமது பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டன' என்றும் கிறிஸ்தவ விசுவாசிகள் யாவரும் சொல்லக்கூடிய தான நிச்சயத்தை நாம் பெறலாம். இந்த 'விளக்கத்திற்கு' இன்னும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ எம்மால் சொல்ல முடியவில்லை. இப்படிப்பட்ட ஆவியானவரின் சாட்சியத்தை நம் காதுகளினாலோ அல்லது இருதயங்களினலோ நாம் கேட்க வேண்டும் என்பது கட்டாயமில்லை; கடவுளுடைய வார்த்தைகளையும் நமது சிந்தையால் எப்போதுமே புரிந்துகொள்ள இயலாது. ஆனால், நாம் குறிப்பிடும் 'சாட்சி' என்பது நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய கடவுளுடையஈவு என்பது உண்மை; அநேக விசுவாசிகளுடைய வாழ்வில் கடவுள் இவ்வித 'சாட்சியைக்' கொடுத்திருக்கிறார் என்பதும் உண்மை. ஆவியானவரின் 'கனி' வெளிப்படையாக ஒருவனுடைய வாழ்வில் தோன்றாவிட்டாலும், அப்படிப்பட்டு ஒருவன் 'எனது வாழ்வுப் புயல் நின்று விட்டது, நான் என் இதயத்தில் அமைதி அடைந்துள்ளேன், என் பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டு விட்டன என்பது எனக்கு நன்கு தெரியும்" என்று இதய சுத்தியோடு நிச்சயமாகச் சொல்லக்கூடுமேயாகில், அவனும் 'ஆவியானவருடைய சாட்சி' உடையவனே. இதையிட்டு எவ்வித தர்க்கத்திற்கும் அவசியமில்லை. இப்படிப்பட்டவனிடத்திலும் காலக்கிரமத்தில் 'ஆவியானவரின் கனி' வெளிப்பட்டே தீரும். 'கனி' காலத்திற்குக் காலம் வேறுபட்டுக் காணப்படுவது போல, 'ஆவியானவரின் சாட்சியும்' ஒருவனிடத்தில் வேறுபட்டுக் காணப்படும். நாம் இதுகாறும், 6ம் அருளுரையிலும், இவ்வருளுரையில் சொன்னதை விட 'சாட்சி' பற்றி வேறு ஏதாவது சொல்லக்கூடுமோ?

2. 'ஆவியானவரின் கனி' கொண்டுமாத்திரமே 'ஆவியானவரின் சாட்சி' அநுபவம் என்பது தவிர்க்கமுடியாததொன்றா? அந்த அநுபவம் வேறு ஏதாவது முறைகளிலும் முடியாததொன்றா? அந்த அநுபவம் வேறு ஏதாவது முறைகளிலும் வரவே வராதா? என்ற வினா நம்மில் பலருக்கு எழலாம். உண்டு என்பதே நமது விடை. அந்த முறையை 'நேரடிச் சாட்சி' என்று சொல்லுகிறோம்; இந்த 'நேரடிச் சாட்சி' மூலம் நாம் பெறும் விசுவாசத்தினால், நம் இருதயங்கள் "நாம் கடவுளுடைய பிள்ளைகளே" என்று சொல்லக்கூடுமேயாகில், அதுவும் தூய ஆவியானவரின் சாட்சி தான் என்று நாம் சொல்லத் துணியலாம். நமது அருளுரை வாக்கியமான றோமர் 8:16இல் இரண்டு சாட்சிகள் ஒரே காரியத்தையிட்டு சாட்சியம் அளிக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறப்படுகிறது, ஒன்று 'நமது ஆவி', மற்றது (தூய ஆவியானவர்( இரண்டும் வெவ்வேறானவை. என்னிடத்தில் 'ஆவியானவரின் கனி' உண்டு என்று என் மனம் நிச்சயித்திருக்குமேயாகில், அதுதான் 'என் ஆவியின் சாட்சி',; என்னிடத்தில் நற்செயல்கள் உள்ளன என்பதை என் மனம் சர்ட்சியாய் ஒத்துக் கொள்ளுவதே 'என் ஆவியின் சாட்சி' என்பதன் கருத்தாகும். இந்த மன உணர்வு என் இருதயத்திலும் பதிந்து, என் இருதய அங்கீகாரம் பெறும்போது, அதை நான் 'ஆவியானவரின் சாட்சி' எனலாம். எந்த ஒரு பகுத்தறிவாளனாலும், ஆய்வு மனம் கொண்டவனாலும், நாம் சொல்லும்இந்த இருவித சாட்சிகளை இலகுவில் அறிந்து விடலாம். ஆவியானவரின் சாட்சி பற்றி, ".... அந்த ஆவியின் அருளால், நாம் கடவுளை 'அப்பா' என்று கூப்பிடுகிறோம்" (ரோமர் 8:15) என பவுல் அடிகளார் சொல்லுகிறார். இதே கருத்தை அவர் கலாத்தியா திருஅவையினருக்கும், "நீங்கள் மைந்தர்களாய் இருக்கிறீர்கள்" என்பதை உறுதிப்படுத்த, 'அப்பா' என்று கூப்பிடும் ஆவியை, தம்முடைய மைந்தரின் ஆவியை, கடவுள் நம் உள்ளங்களில், தந்தருளினார்." (கலா 4:6), என்று தெளிவுபடுத்துகிறார். இந்த 'நேரடிச் சாட்சி' அதைப் பெற்றுக் கொள்ளுகிறவனுக்கு மாத்திரமே தெரியும். இதைத் தொடர்ந்துதான் 'ஆவியானவரின் கனி' விளைகிறது.

தூய ஆவியானவரின் சாட்சியே, நமது ஆவியின் சாட்சிக்கு முந்தியது என ஏற்கனவே கூறியுள்ளோம். ஏனெனில் நாம் நமது இருதயங்களிலும், வாழ்விலும் தூயராய் ஏற்கனவே (தூய ஆவியானவரின் அருளால்) இருந்தால்தான், நமது தூயநிலை நமது மன உணர்வுக்குத் தெரியும். நாம் கடவுள்மேல் அன்பு செலுத்தாவிட்டால், ---------------------------- தூயராய் நாம் ஒருக்காலும் ஆகப்போவதில்லை; கடவுள் மேல் அன்பு செலுத்துதலே, நமது வாழ்வில் தோன்றக்கூடிய எல்லாத் தூய்மைக்கும், எல்லா நன்மைக்கும் அடித்தளமாய் அமைகிறது. நாம் கடவுளை நேசிக்கு முன்பே, அவர் நம்மேல் அன்பு செலுத்துகிறார் என்பது நமக்குத் தெரியும்; ஆனால் இவ்வறிவு நம் இருதயத்திலேயே தோன்றவேண்டும். இப்படிப்பட்ட இருதய அநுபவம் ஒன்றோ, இரண்டோ, சிலரோ அல்ல, பலர் அடைந்திருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் 'திரண்டு வரும்மேகம் போல' நம்மைச் சூழ்ந்திருக்கிறார்கள் (எபி. 12:1); அவர்கள் 'எவராலும் எண்ண இயலாத மக்கள் கூட்டத்தினர்' (வெளி 7:9). கடவுள் தங்களை நீதிமான்களாக ஆக்கிவிட்டார் என்ற உள்ளான அநுபவத்தைப் பெற்றவர்களே இவர்களனைவரும்–அந்த நிச்சயம் அவர்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. இதை எதிர்ப்பவர்கள், பயாவரும், விசுவாசத்தினால் இரட்சிப்பு இல்லை என்பவர்கள், அப்படிப்பட்டவர்களுக்கு 'ஆவியானவரின் சாட்சி' அநுபவமும் இல்லை. அவர்கள், " "பாவத்தைப் பொறுத்தமட்டில் நாம் செத்து, நேர்மையானதைச் செய்வதற்கென்றே உயிர்வாழும்படி, அவர் சிலுவை மீது தாமே தம் உடலில் நம்முடைய பாவங்களைச் சுமந்து போக்கினார்; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (1பேது. 2:24) என்று பேதுரு சொல்லுவதை நம்பாதவர்கள். நாம் சொல்லும் கருத்தை, சாதாரண உலக மக்களினது வாழ்க்கைச் சாட்சியும் ஆதரித்து நிற்கிறது. இப்படிப்பட்ட சாதாரண மக்கள் நல்லவர்கள், நற்செயல்களையே செய்கிறவர்கள், எல்லாக் காரியங்களிலும் கடவுளைத் திருப்திப்படுத்த முயலுபவர்கள், அவர்கள் செய்வதெல்லாம் 'நற்செயல்களே' என்பதும் அவர்கள் மனதுக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இப்படிப்பட்ட நல்லவர்களில் எவராவது 'என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று சொல்லத் துணியார்கள். அவர்கள் அப்படிச் சொல்லமுடியாமைக்குக் காரணம் ஒன்றே ஒன்று உண்டு- அது என்னவெனில், அவர்களிடத்தில் 'ஆவியானவரின் சாட்சி' இல்லை.

3. நாம், 'ஆவியானவரில் சாட்சி' என்ற நமது இரு அருளுரைகளிலும் சொல்லப்பட்டவைகளுக்கு பல எதிர்ப்புகள் தோன்றலாம். அவற்றில் சிலவற்றை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்:

(1) எதிர்ப்பு - திருமறை இல்லாத 'அநுபவம்' இப்போதனைக்கு எவ்விதத்திலும் உதவி புரிவதாய்த் தோன்றவில்லை.

மறுப்பு - ஆம், அது உண்மைதான், ஆனால், நமது போதனை முற்றிலுமாய் திருமறை சார்ந்ததுதான் என்பதை பல திருமறை வாக்கியங்களினால் எடுத்துக்காட்டியுள்ளேன்.

(11) எதிர்ப்பு- மனநோயாளர், கள்ளத் தீர்க்கர், மார்க்க/சமய வெறியர்கள் ஆகியோரும் 'ஆவியானவரின் சாட்சி' தங்களுக்குமுண்டு என்று சொல்லலாம் அல்லவா?

மறுப்பு - ஆம், அப்படிப்பட்டவர்களில் பலர் அப்படித்தான் சொல்லுகிறார்கள்; சிலருக்கு இவ்வநுபவம் ஒ உண்மையாகவே இருக்கலாம். அதேவேளையில், ஒரு மனநோயாளி, தான் ஒரு 'அரசன்' என்று தன்னைப் பற்றிச் சொல்லலாம். அவன் ஒரு அரசன் இல்லை என்பது நமக்குத் தெரியும். அவன் ஒரு அரசன் இல்லாதபடியினால் வேறு அரசர்களே இல்லை என்று நாம் எண்ணிவிடலாகாது. அதுபோல், ஒருவனிடத்தில் 'ஆவியானவரின் சாட்சி' இல்லாதபடியினால், 'ஆவியானவரின் சாட்சியே' இல்லை என்று முடிவுகட்டுவது மதியீனமாகும்.

(111) எதிர்ப்பு- இந்த அநுபவத்தைப் பெற்ற சிலர், 'ஆவியானவரின் அநுபவம்' தமக்கிருப்பதால், அது ஒன்றே போதும், திருமறை வாக்குகள் அவசியமில்லை என்று சொல்லுகிறார்களே'.

மறுப்பு - ஆம், அப்படிச் சிலர் சொல்லுவதால் திருமறையின் மதிப்பு குறைந்து விட்டது. திருமறை கடவுளின் வாக்குகளே என்று சொல்லி மதித்துப் போற்றுகிறவர்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர் என்பதையும் நாம் மறத்தலாகாது.

(1V) எதிர்ப்பு- 'ஆவியானவரின் கனி' ஒருவனிடத்தில் காணப்பட்டால், அதுவே போதிய சாட்சியாயிருக்கிறது. அப்படி இருக்க 'இருதயத்தில் உண்டாகும் ஆவியானவரின் நேரடிச் சாட்சி' யின் அவசியம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுப்பு - இந்த 'நேரடிச் சாட்சி' எல்லாருக்கும், குறிப்பாகப் புது விசுவாசிகளுக்கு அவசியமானதே. இச்சாட்சியில், தந்தையாகிய கடவுளின் சாட்சியும், ஆவியானவரின் சாட்சியும் அடக்கம் பெறுகிறது. பொதுவாகச் சொல்லின், 'நேரடிச் சாட்சி' பெறாத எவனும் தான் தனக்குச் சொந்தமானவனல்ல' என்ற உணர்வடையமாட்டான்.

(1/ )எதிர்ப்பு-இந்த நேரடிச் சாட்சி பற்றி, திருமறையில் தெளிவாகச் சொல்லப் படவில்லையே!

மறுப்பு -நாம் எதிர்பார்க்கும் வார்த்தைகள் உபயோகிக்கப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் ,"உங்கள் வாழ்க்கை கிறிஸ்து வினிடம் கொள்ளும் நம்பிக்கையில் வேரூன்றியிருக்கின்றதாவென்று உங்களை நீங்களே சீர்து க்கிப் பாருங்கள்; உங்கள் தகுதியைச் சோதித்துப் பாருங்கள், கிறிஸ்து இயேசு உங்களுக்குள் இருக்கிறார் என்பதை நீங்கள் உணராமலா இருக்கிறீர்கள்? நீங்கள் தகுதியுடையவர்களாய் இருந்தாற் றான் அவர் உங்களுக்குள் இருப்பார்" (2 கொரி 13:5) என்பன போன்ற வாக்கியங்கள் நாம் சொல்லும் கருத்தைத் தெளிவுபடுத்து கின்றன.

(1/ 1)

(1/ 1)எதிர்ப்பு-இயேசுவுக்கு ஏற்பட்ட 'கொடியதுன்பங்கள்' போன்று நமக்கும் ஏற்பட்டாலன்றி, இந்த (நேரடிச் சாட்சி( யின் அவசியம் என்ன?; இரட்சிப்பின் அநுபவ அறிவு மாத்திரம் போதுமானதுதானே!

மறுப்பு- 'நேரடிச் சாட்சி' யினாற்தான் 'இரட்சிப்பின் அறிவு' கிடைக்கிறது; மேலும், இயேசுவுக்கு ஏற்பட்ட துன்பங்கள் போன்றவை நமக்கும் ஏற்படக்கூடும். அவ்வித தருணங்களில், 'நாம் கடவுளுடைய பிள்ளைகள் தான்' என்ற 'நேரடிச் சாட்சியே' நம்மைத் தாங்கி நிற்கும் அடைக்கலமாயுள்ளது.

(1/ 11)

எதிர்ப்பு-'நேரடிச் சாட்சி' இபோதனையை ஏற்றுக் கொண்டவர்களில் சிலர்; பெருமையும், அகந்தையும் உடையவர்களாய்க் காணப்படு கின்றார்களே!

மறுப்பு- ஆம்ஷினாவிலேயே பதிலும் அடங்கியுள்ளது. 'இப்போதனையை ஏற்றுக் கொண்டவர்கள்' எனக் கூறுகிறீர்கள் .ஏற்றுக் கொண்டவர்கள் வேறு, பெற்றுக் கொண்டவர்கள் வேறு: ஆனால், 'நேரடிச் சாட்சி' அநுபவத்தைப் பெற்றவர்கள் யாவருமே. 'தாழ்மையுள்ளவர்கள்; அவர்கள் 'ஆட்டுக்குட்டி' போன்ற நம் ஆண்டவரின் 'தொண்டர்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*--- --- *

8

## விசுவாசிகளிடத்தில் உள்ள பாவம்
## On Sin in Believers

" ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் ஒரு புதிய படைப்பு ஆகிவிட்டான்; பழைய வாழ்க்கை முடிந்து விட்டது, புதிய வாழ்க்கை தொடங்கிவிட்டது" (2 கொரி 5:17).

(குறிப்பு—இவ்வருளுரையின் பின்னணி தெளிவாய்க் காணப்படவில்லை. ஜோண் உவெஸ்லியின் அருளுரைகளில், 'பொதுவான அருளுரை' என்ற பகுதியில் இது அடங்கும். இதன் தலைப்பு, சிந்தனைக்குரிய தொன்றாகும். இது தற்கால தர்க்க மேடைக்குப் பொருத்தமானதொன்றே.)

அருளுரை

1. நமது அருளுரைத் திருமறை வசனம் தெளிவாயுள்ளது. அப்படியிருக்க சந்தேகமேன்? ஏன் நமது தலைப்பும், அருளுரை வசனமும் பொருத்தமாய்க் காணப்படவில்லை? விசுவாசியினிடத்திலும் பாவம் உள்ளதா அல்லது கிறிஸ்துவினால் புதுப்பிறப்படைந்த யாவரும் பாவத்தில் இருந்து முற்றுமாய் விடுதலை பெற்று வாழ்கின்றார்களா? இக்கேள்விகளை நாம் அசட்டை பண்ணாமலும், ஒதுக்கித் தள்ளிவிடாமலும், அவற்றை நெருக்கமாகவும் ஆழமாகவும் ஆராயவேண்டியது அவசியம். இவ்வினாக்கள் நமது இம்மையையும்மறுமையையும் அடக்கி நிற்கின்றன.

முதற் கிறிஸ்தவர்களுக்கு இப்படிப்பட்ட வினாக்களை ஆராயவேண்டிய அவசியமிருக்கவில்லை. புதிய ஏற்பாட்டைப் பற்றி எழுதிய அக்காலத்து அறிஞர்களும் இதைப்பற்றி அவ்வளவு அக்கறை காட்டவில்லை. ஏனெனில் அவர்கள் யாவரும் ஒரு சிந்தையும் ஒரே நம்பிக்கையும் கொண்டவர்களாய்க் காணப்பட்டனர். —"கிறிஸ்தவர்கள் பாவத்தையும், உளனையும், பாவ சுபாவத்தையும், அதிகாரங்களையும், துரைத்தனங்களையும் எதிர்த்துப் போராட வேண்டும்; கடவுளின் வல்லமை கிறிஸ்துவில் முற்றுமாய் வெளிப்படும் வரை அவ்விதம் போராடவேண்டும்" என்ற சிந்தையும் நம்பிக்கையுமுடையவர்களாய்க் காணப்பட்டனர்.

வளர்ந்து கொண்டு வந்த திருஅவையும் மேற்கூறிய நம்பிக்கை உடையதாகவே காணப்பட்டது. மனித இயல்பு 'பாமுள்ளது' என்றும், உளன் விருப்புகள் யாவும் ஆவிக்கு எதிரானவை என்றும், இந்தச்சாப நிலை மறுபிறப்பு அடைந்துவிட்டவர்களிடமும் காணப்படுகிறது என்றும், ஆகவே, மனித உளன் இயல்பு கடவுளுடைய சித்தத்திற்கு அவனைக் கீழ்படிய விடுவதில்லையென்றும் திருஅவை போதித்து வந்தது, வருகிறது. விசுவாசித்துத் திருமுழுக்குப் பெறுகிற யாவரும், நியாயத் தீர்ப்பில் இருந்து விடுதலை அடைந்திருப்பினும், அவர்களுடைய உள்விருப்புகள் பலவும் பாவசுபாவமுடையவையாய்க் காணப்படுகின்றன. இப்போதனைகளை; ரோமன்திருஅவை, கிரேக்க திருஅவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவின் சீர்திருத்த திருஅவைகள் யாவும் ஏற்றுள்ளன. வேறு கிறிஸ்தவ திருஅவைகளும் இதில் உடன்பாடாய் உள்ளன. ஆனால், சில திருஅவைகள் சற்று அதிகமாய் விசுவாசியொருவனை, 'பாவத்தின் மேல் அதிகாரமுள்ளவனாய்' காட்டாமல், 'பாவத்தின் அடிமையாய்' காட்டுகின்றன. இப்படி அவர்கள் காட்ட முனைவதால் ஒரு 'விசுவாசிக்கும்' ஒரு 'அவிசுவாசிக்கும்' இடையேயுள்ள வேற்றுமை முற்றுமாய் மறைக்கடிக்கப்படுகிறது.

சின்செண்டோர்ப் என்ற கிறிஸ்தவ பெரியாரை போன்றவர்களால் கவரப்பட்டவர்கள், 'மெய் விசுவாசியொருவரின் பாவ ஆட்சிக்கு உட்பட்டவன் வெளியான பாவங்களிலிருந்தும் விடுதலை பெற்றவன்' என வாதாடுவார்கள். 18ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் இப்போதனையை ஏற்றுக் கொண்டவர்கள் பலர் இங்கிலாந்தில் இருந்தனர், இன்றும் சிலர் உலகெங்கிலும் உள்ளனர். இப்படிப்பட்டவர்கள், விசுவாசியொருவனிடத்தில், 'ஜென்ம பாவம்', 'அதன் சுபாவம்' இல்லவே இல்லை எனவாதாடுவார்கள்.

ஜெர்மனி நாட்டுத் திருஅவை, விசுவாசியொருவனின் 'உளவில் பாவமும் பாவசுபாவமும் உள்ளது' என்றும் ஆனால், 'அவனது இருதயத்தில் அவை இல்லை' என்றும் போதித்தது. பின்பொருபொழுது, தன்னைத் திருத்தி, 'கடவுளால் பிறந்தவனிடத்தில் பாவம் உள்ளது' என்றும் ஆனால், 'அது அவனை ஆளுகை செய்வதில்லை' என்றும் போதித்தது.

மேற்குறிப்பிட்ட போதனைகளை நம்புவோர் பலர் இன்றும் உள்ளனர். அவர்களுடைய நம்பிக்கை அறிவுசார் சிந்தனைகளை எதிர்கொள்ளமுடியாது என அறிந்திருந்தும், தமது நம்பிக்கையில் உறுதியாயுள்ளனர்.

2. 'புதுப் பிறப்பு', 'நீதிமானாதல்', 'விசுவாசியாகுதல்' ஆகிய சொற்பதங்கள் ஒரே கருத்துடையவை போன்று தோன்றினாலும் உண்மையில் அவை யாவும் வெவ்வேறு கருத்துடையவை. 'புதுப் பிறப்பு'-ஒருவனுடைய இருதயத்தில் ஏற்படும் மாறுதலைக் குறிப்பிடுகிறது; 'நீதிமானாகுதல்'-ஒருவன் கடவுளோடு ஒப்புரவாகுதலை குறிப்பிடுகிறது; 'விசுவாசியாகுதல்'- மேற் சொல்லப்பட்ட இரண்டு நிலைகளுக்கும் அடித்தளமாய் இருக்கிறது. எனினும், மூன்று பதங்களும் ஒன்றாய் வருகிறபொழுது, "விசுவாசியானவன் நீதிமானாக்கப்பட்டு, அதன் பலனாய் மறுபிறப்பு அடைகிறான்" என்ற பொருள் ஏற்படுகிறது.

நாம், இங்கே குறிப்பிட விரும்பும் பாவங்கள், 'உள்ளான பாவங்களாகிய' பெருமை, சுயஅகங்காரம், உலக விருப்புகள், கோபம், வெடுவெடுப்பு ஆகியவையாகும்.

எனவே, 'வெளியான பாவங்களை' யிட்டு நாம் சிந்திக்கப் போவதில்லை; கடவுளுடைய பிள்ளைகள் பாவம் செய்பவர்களா இல்லையா என்பதும் நமது நோக்கல்ல- ஏனெனில் பாவம் செய்கிறவன் பசாசினால் பிறந்தவனாய் இருக்கிறான், கடவுளால் பிறந்தவனோ பாவம் செய்யான். "உள்ளான பாவங்கள்' ஒரு விசுவாசியிடம் நிலைகொண்டிருக்குமா அல்லது நாம் உளன் உடலில் இருக்கும் வரை தான் அவையும் நிலைத்திருக்குமா என்பதையும் நாம் இங்கே சிந்திக்கப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமானாக்கப்பட்ட ஒருவன் 'உள்ளான', 'வெளியான' பாவங்களுக்குள் விழுந்து விடுகிறானா?; ஒருவன் நீதிமானாக்கப்பட்ட உடனேயே அவனில் எல்லாப்பாவங்களும் இல்லாமல் போய்விடுகிறதா?; அவன்கிருபையில் இருந்து விழுந்தால் தவிர, அவன் இருதயத்தில் பாவம் உட்புகுவதே இல்லை என்பது சரியா?, என்பவைதான் இவ்வுரையில் நாம் சுட்டிக்காட்ட விரும்பும் பிரச்சனைகள் ஆகும்.

நீதிமானாக்கப்பட்ட ஒருவனுடைய நிலை மேன்மையும் மகிமையும் நிறைந்த ஒரு நிலை என்பது உண்மைதான். அவன் மறுபடியுமாய்ப் பிறந்தவன். அவன் ஊன் இச்சையினாலோ, மனிதனாலோ பிறந்தவனல்ல-கடவுளால் பிறந்தவன் (யோவான் 3:6). அவன் கடவுளுடைய பிள்ளை; கிறிஸ்துவின் உடல் (அவை) உறுப்பினன், விண்ணகத்தைச் சுதந்திரித்துக் கொண்டவன். அவனுடைய உள்ளத்தையும், மனதையும் எல்லா அறிவாற்றலுக்கும் அப்பாலுள்ள தெய்வ சமாதானம் ஆளுகை செய்கிறது (பிலி 4:7) அவன் கடவுளுடைய வீட்டான் (எபே2:29).; ஆண்டவருக்குரிய ஒரு தூய ஆலயம் (எபே2:21) அவன் கழுவப்பட்டுத் தூய்மையாக்கப்பட்டவன். அவனுடைய உள்ளத்திலிருந்து கடவுளுடைய அன்பு ஊற்றெடுக்கிறது. அவன் அன்பில் வாழ்ந்து, கடவுளை உண்மையோடும் ஆவியோடும் வழிபடுகிறவன். அவன் கடவுளுடைய திருக்கட்டளைகளைப் பின்பற்றி, கடவுளுக்கு மகிழ்ச்சி தரும் செயல்களைச் செய்கின்றவன். கடவுளுக்கு முன்பாகவும் மனிதருக்கு முன்பாகவும் குற்றமற வாழ்வதற்கு முயற்சிப்பவன். அவன் தன் உள்ளானதும் வெளியானதுமான பாவங்களை மேற்கொள்ளுவதற்கான 'வல்லமையை' கடவுளிடம் பெறுகின்றவன். இவையெல்லாம் மறுக்கமுடியா உண்மைகள் தான். இப்படிப்பட்டவனிடத்திலும் பாவம் இருக்கக்கூடுமோ,என்பது தான் நமது வினா. இதற்குரிய விடையை நமது 3ம் குறிப்பில் பார்ப்போம்.

3. 'நீதிமானாக்கப்பட்ட' அன்றே, ஒருவன் பாவத்திலிருந்து முற்றிலுமாய் விடுதலை அடைவதும் இல்லை, உள்ளத்தின் பாவ சிந்தனைகளில் இருந்தும் முற்றுமுழுதாய் விடுதலை அடைவதில்லை என்பதே நமது நிலையும் போதனையுமாகும். அவ்வித முற்று முழுதான விடுதலை சாத்தியமில்லை. நமது பாவ இயல்பும், தெய்வ ஆவியின் இயல்பும் முரண்படுகின்றன. இவை ஒன்றையொன்று எதிர்த்துப் போராடிக்கொண்டிருப்பதால், நாம் செய்ய விரும்புகிறவற்றைச் செய்ய இயலாத நிலைக்குள் தள்ளப்படுகிறோம் (காலா5:17) -இவை நமது உண்மை நிலையைத் தெளிவாய்க் காட்டுகிறது. இங்கே, அவிசுவாசிகளிடமல்ல, விசுவாசிகளுடன் பவுல் இவ்விதம் பேசுகிறார். மறுபிறப்படைந்தவனிடமும் 'இரண்டு சட்டங்கள்' செயல்படுகின்றன- ஒன்று நன்மை செய்ய விரும்பும் சட்டம், மற்றது அதைச் செய்வதற்கு வகைதெரியாது திகைத்து நிற்கும் சட்டம்.
"சகோதரர்களே, தெய்வ ஆவியை உடையவர்களிடம் பேசுவதுபோல உங்களிடம் பேச என்னால் இயலவில்லை. உங்களை ஊன் இயல்புக்கே உட்பட்டவர்களாகவும், கிறிஸ்துவிடம் கொண்டுள்ள நம்பிக்கையில் குழந்தைகளாகவும் பாவித்து உங்களிடம் பேசவேண்டியுள்ளது. உங்களுக்கு நான் ஊட்டினது பால் உணவேயன்றிக் கெட்டிப் பொருள் உணவன்று. ஏனெனில், அந்த உட்கொள்ள இயலாத நிலையில் நீங்கள் அப்போது இருந்தீர்கள்; இப்போதும் அதே நிலையில்தான் இருக்கிறீர்கள். உங்களிடம் பொறாமையும் சச்சரவும் காணப்படுகின்றன. ஆகையால், நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளன் இயல்பின்படி வாழ்ந்த உலகப் போக்கின்படி நடக்கிறவர்கள் என்பது தெளிவாகிறதல்லவா" (1கொரி 3:11-3). நாம் 1 கொரிந்தியர் முழுவதையுமே வாசித்தறியலாம். இவ்வசனங்களை பவுல் விசுவாசத்தில் நிலைத்திருக்கும் கிறிஸ்தவர்களுக்கே எழுதுகிறார். ஒரு விசுவாசி, நீதிமானாக்கப்பட்டவன், மறுபிறப்படைந்தவன், கிறிஸ்துவுக்குள் 'குழந்தையாய்' இருக்கும் வரை, உளன் இயல்புக்கும் உட்பட்டவனாகவே இருக்கிறான் என்பதுதான் பவுலின் வாதம் ஆகும்-தன்னுடைய இக்கருத்தை தமது ஏனைய கடிதங்களிலும் அவர் சொல்லியிருப்பதை நாம் காணலாம். பாவம் இல்லாமல் சீவிக்க முயல வேண்டும் என்பதே பவுல் விசுவாசியொருவனுக்குக் கொடுக்கும் அழைப்பாகும். நாம் ஆவியின் இயல்புப்படி நடப்பவர்களல்ல; நடக்க வேண்டியவர்கள். இதுவே கிறிஸ்தவ அழைப்பு. எபேசு அவையினருடைய நிலை மேற் சொன்ன நிலைதான் (வெளி 2:2-4)-'தொடக்கத்தில் இருந்த அன்பு' இப்போது இல்லை; பெர்கமு நகரத் திருஅவையின் நிலையும் இதுதான் (வெளி 2:13,16), அவர்கள் இன்னும் மனமாற்றமடைய வேண்டும்; சர்தை நகரத் திருஅவையின் நிலையும் இதேதான் (வெளி 3:3).-அவர்கள் விழித்தெழ வேண்டும். நாம் உடலையும் ஆவியையும் கறை ப்படுத்தும் அனைத்தையும் அகற்றவேண்டும் (2 கொரி 7:1). நாம் இதுவரை பார்த்த குறைகளெல்லாம், கிறிஸ்தவர்களிடமே -விசுவாசிகளிடமே- மறுபிறப்படைந்தவர்களிடமே என்பது நமக்கு வியப்பாயில்லையா?. ஒவ்வொரு கிறிஸ்தவ வழிபாட்டிலும் நாம் 'பாவ அறிக்கை' செய்வதன் காரணம் இப்போது விளங்குகிறதல்லவா?.

நாம் இந்த 3ம் குறிப்பில் பர்ர்த்தவைகளைக் கொண்டு என்னமுடிவு கட்டுகிறோம். பாவம், பாவ இயல்பு, உளன் இயல்பு, பின் வாங்குதல் ஆகியவை விசுவாசியொருவனிடத்தில் இல்லையென்று சொல்வது திருமறைக்கு முரணானது என்பதே நமது முடிவாகும்; அது கடவுள் மக்களுடைய வாழ்க்கை அநுபவத்திற்கும் முரணாய்க் காணப்படுகிறது. கிறிஸ்துவை அறிந்து அவரை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்ட யாவரும் தாம் கடவுளுடைய பிள்ளைகள் தான் என அறிவார்கள், இவ்வுண்மையை ஆவியானவரும் அவர்களுடைய ஆவியுடன் சாட்சியிட்டு உணர்த்துகிறார். ஆனால்; தம்மில் பாவம் உண்டென்றும், தங்கள் நம்பிக்கை மாட்சிமையின் கிறிஸ்துவிலேயே தங்கியுள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்கிறார்கள். இதுவே ஒரு மெய் விசுவாசியின் இலட்சணமாம்.

பாவமும், கிறிஸ்துவும் ஒரு இதயத்தில் ஒரே நேரத்தில் இருக்கக் கூடுமோ? இருக்கக்கூடும் என்பதே நமது பதில். "என்னிடத்தில் கிறிஸ்து மாத்திரமே இருக்கிறார், பாவமோ, பாவ சிந்தையோ என்னிடத்தில் இல்லை" என்று சொல்லக் கூடியவன் பொய்யன். "நம்மிடத்தில் பாவம்இல்லை என்போமானால், நம்மிடத்தில் உண்மையும் இல்லை; நாம் கடவுளைப் பொய்யராக்குகிறோம், உள்ளத்தில் அவருடைய வார்த்தை இல்லை" (1யோவான் 1:8,10). ஆனால், பாவம் எங்கே ஆளுகை செய்கிறதோ, அங்கே கிறிஸ்து இல்லை; இருதயம் எங்கே பாவத்தைத் தேடுவதற்கு விருப்படைகிறதோ, அங்கே கிறிஸ்து இல்லவே இல்லை. பாவத்தையும், உடல் ஆசையையும் எதிர்த்துப் போராட எவன் முயற்சியெடுக்கின்றானோ, அங்கே, இவனில் கிறிஸ்துவும் இருந்து அவனுக்கு உதவுணை புரிகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இறுதியாக ,நாம்சில எதிர்ப்புகளையும்,மறுப்புகளையும் இங்கு பார்ப்போம்.

(1) எதிர்ப்பு – இரட்சிக்கப்பட்ட ஒருவன் ஒரு புதுப்படைப்பு,அவன்
பாவத்திற்கும் ஊனுக்கும் மரித்து,கடவுளுக்கென்றும் ஆவி
யானவருக்கென்றும் வாழுகிறவன். இப்படிப்பட்டவனிடத்தில்
'நன்மையும்','தீமையும்' ஒன்றாய் இருக்க முடியாது;
கிறிஸ்துவும் பாவமும் ஒருமித்திருப்பது எப்படி?.அவன்
புதுப்பிறப்படைந்து விட்டதால்,அவனில் புது இருதயமும்
இருக்கிறது;புது இருதயமும்,பழைய இருதயமும் ஒன்றாய்
இருப்பது எப்படி?

மறுப்பு – ஆவியினால் பிறந்தவன் ஆவியாயிருக்கிறான் என்றல்ல
ஆவிக்குரியவனாய் இருக்கிறான் என்பதே திருமறை.
ஆவிக்குரியவனாய் இல்லாவிட்டால்,எப்படி ஒருவன்
கிறிஸ்தவனாய் ஆவான். ஆவிக்குரியவன் எவனும் பாவம்
இல்லாது இருத்தலே நலம்; ஆனால் அப்படி இருக்க
முடிகிறதா? ஆவிக்குரிய சகோதரனே நீ ஒருக்காலும்
ஒரு பொய்தானும் சொல்லவில்லையா? ,உன்னில்
ஒருக்காலும் வெறுப்புத் தோன்றவில்லையா?,நீ
கோபமே அடைவதில்லையா?–அப்படியானால் நீ
நற்பேறு பெற்றவன்.

ஆவிக்குரியவனிலும் பாவம் இருக்கிறது. அவன் சிறுமை
யில் இருந்தும் பலவேளைகளிலும் விழுந்து விடுகிறான்.
அப்படிப்பட்டவனை 'கிறிஸ்துவுக்குள்' குழந்தை'
(1கொரி3:1)என பவுல் அழைக்கிறார்.அவனில் பாவமும்
கிறிஸ்துவும் ஒன்றாய் இருக்கக்கூடாது (1கொரி 6:9
–11,19).ஆனால் அவனில் பாவம் காணப்படுகிறது
என்பதே உண்மை நிலை.

(11) எதிர்ப்பு– நம்முடைய இந்த அருளுரை வாக்குப்படி (2கொரி5...
பழையதும் புதியதுமான வாழ்க்கை ஒன்றாய் இருக்க
முடியாதே.

மறுப்பு – உண்மைதான்,அப்படி இருத்தலே நலம்.ஆனால்,உன்னில்
பொறாமை (பொறாமை உணர்ச்சி)காணப்படுகிறதே.
நீ புதுப்பிறப்பாயினும்,முற்று முழுதான புதுப்பிறப்பல்ல.
நீ மிகவும் அவதானமாய் இருந்து, பாவம் உன்னை
ஆளுகை செய்வதற்கு விடாமல் உன்னைத்தற்காத்து,
கிறிஸ்துவைப்போன்று வளர்ச்சியடைய வேண்டும் என்பதே
பவுல் உனக்குத்தரும் போதனை(எபே 4:13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(111) எதிர்ப்பு - ஒருவன் தூயவன் என்றால் அவன், தூயனே, ஒருவன் கழுவப்பட்டவனென்றால், கழுவப்பட்டவனே.

மறுப்பு - இது ஒரு 'வார்த்தை விளையாட்டே' தவிர வேறில்லை. 1கொரி 13 இல் காணப்படும் அன்பின் சட்டங்களுக்கெதிராக ஒரு விசுவாசி ஒருக்காலும் இருந்ததில்லை என்று உண்மையாகவே கூறமுடியுமா? ஒரே ஒரு ஒருதடவைதான் நான் மீறினேன் என்று சொல்வானேயாகில், விசுவாசியே உன்னில் பாவம் உள்ளது என்பது தான் உண்மைநிலை.

(11/) எதிர்ப்பு- ஒரு விசுவாசி "கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்பட்டவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பே இராது" (ரோமர் 8:1) என்று நம்பி வாழுவன். எனவே அவன் பாவத்திலிருந்தும், பாவத்தின் வல்லமையில் இருந்தும், பாவ இயல்பில் இருந்தும் விடுதலை அடைந்தவன்.

மறுப்பு- எல்லாவற்றையும் இணைத்துப் பார்த்தால், 'ஆம்' என்பதே விடை. ஆனால் பாவம் என்பது ஒன்று, பாவ வல்லமை என்பது வேறொன்று, பாவ இயல்பு என்பது இன்னொன்று. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்கள் பாவத்தில் இருந்தும், பாவ வல்லமையில் இருந்தும் விடுதலை பெற்றவர்களாய் இருக்கலாம். ஆனால், அவர்கள் பாவ இயல்பில் இருந்து விடுதலை பெற்றவர்களல்ல. ஆவியின் இயல்புக்கு, ஊன் இயல்பு விரோதமாயிருக்கிறது என்பதே பொதுவான கிறிஸ்தவ அநுபவமாகும்.

(1/). எதிர்ப்பு- திருஅவை (திருஅவையினர்) கிறிஸ்துவின் உடலாயிருக்கிறது (கொலோ 1:24) எனவே அதன் உறுப்பினர்களும் கிறிஸ்து தூயராய் இருப்பது போன்று, தூயராய் உள்ளனர். தூய உடலில், எப்படி ஒரு 'கெட்டது' உறுப்பாய் இருக்கமுடியும்.

மறுப்பு - அவர்கள் 'ஆவியின்தான்' உறுப்பினர்களேயன்றி வேறு அல்ல; வேறு விதத்தில் அர்த்தம் கொள்ளவும் முடியாது. நாம் இப்படிச் சொல்வதால், பாவத்திற்கும் சாத்தானுக்கும் கிறிஸ்துவின் உடலில் பங்குண்டு என நாம் கருதவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1/ 1) எதிர்ப்பு - கிறிஸ்தவர்கள் தம் பாவ இயல்பையும் (உளள் இயல்பையும்), அதன் உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் சிலுவையில் அறைந்து விட்டார்களே (காலா 5:24).

மறுப்பு - ஆம், இங்கே பவுல் குறிப்பிடுவது முடிவு நிலையே தவிர, துவக்க நிலையல்ல. முடிவில் அப்படித்தான் இருக்கவேண்டும். "அவர் திருச்சபையைத் தண்ணீரில் கழுவுவதாலும், திருவார்த்தையாலும் புனிதமாக்கிக் கடவுளுக்கு உரியதாக்குவதற்கென, தம்மையே அத்திருச்சபைக்காக ஒப்புக் கொடுத்தார். ஏனெனில், அதைக் கறைதிரை முதலானவையின்றித் தூய்மையும் மாசற்றதுமான மாட்சிமை பொருந்திய திருச்சபையாகத் தம் முன்னிலையில் நிறுத்திக் கொள்ளவேண்டுமென்பது அவரது திருவுளம் (எபே 5:26,27).

*------------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

## விசுவாசிகள் மனமாற்றம் அடைதல்
## THE REPENTANCE OF BELIEVERS

"மனமாற்றமடைந்து நற்செய்தியில் நம்பிக்கை வையுங்கள்" (மாற்கு 1:15)

(குறிப்பு- இந்த அருளுரையின் பின்னணியும் தெளிவாய்க் காணப்படவில்லை. இதை ஒரு அறிவுரை அருளுரையாகவும் கொள்ளலாம்; 3ம் அருளுரையின் தொடர்ச்சியோ என்று எண்ணவேண்டியுள்ளது. ஜோண் உவெஸ்லி, எப்வேர்த் கல்லறைத் தோட்டத்தில் ஆற்றிய அருளுரைகளில் இதுவும் ஒன்று எனவும் சொல்லப்படுகிறது. அருளுரை வசனம் விசுவாசிகளுக்கும் உரியதொன்றா அல்லது அவிசுவாசிகளுக்கு மாத்திரம் உரியதா என்ற வினாவினால் எழுந்த மாறுத்தரமே இவ்வருளுரையாகும்.)

அருளுரை

மனமாற்றமடைந்து, நம்பிக்கை கொள்ளுவதுதான் மெய்ப்பக்திக்கான (கடவுளுடைய அரசுக்கான) வழி என்பதும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய ஆட்சிக்குள் வருவதற்கான முதற்தேவை என்பதும் நாம் ஏற்கனவே அறிந்ததே. இந்தப் பொது உண்மையை எபிரேயருக்கு எழுதியவரும் உறுதிப்படுத்துகிறார். பாவ இயல்பையும், அதன் சாபத்தையும், இவற்றை வெல்லமுடியாத நமது இயலாமையையும் நன்குணர்ந்து மன மாற்றம் அடைவதே, 'நம் உள்ளத்திலுள்ள' கடவுளின் அரசுக்குள் வரும் வழி என்பதும் உண்மையே- இவ்விதமே ஒருவன் கிறிஸ்தவ வாழ்வைத் துவங்கவேண்டும். நீதி, சமாதானம், தூய ஆவியானவரின் மகிழ்ச்சி ஆசியனை கொண்ட கடவுளின் அரசை ஏற்றுக் கொள்ளுவதற்கு, விசுவாச முயற்சி வேண்டும் என்பதும் மறுக்கமுடியாத உண்மையே.

நாம் பொதுவாகப் புரிந்து வைத்துள்ள 'மனமாற்றம்', 'நம்பிக்கை' என்ற சொற்களுக்கு சற்று வித்தியாசமான பொருள் கொண்டு பார்க்க விளைவதே இவ்வருளுரையின் நோக்கமாகும். விசுவாசத்தின் மூலமாய் கிறிஸ்தவனாகிவிட்ட ஒருவனுக்கு இருக்கவேண்டிய மனமாற்றம், 'நம்பிக்கை' பற்றியே நாம் இங்கு சிந்திக்கப் போகிறோம். இது பற்றி அறிந்துகொள்ளுவது நல்லது. ஏனெனில் போதிய அறிவின்றி, நாம் நமக்குக் குறிப்பிட்டுள்ள ஓட்டப் பந்தயத்தில், இலக்கை நோக்கி ஓடமுடியாது. நாம் கிருபையில் வளரவும், அதில் நிலைத்திருக்கவும், இயேசுவின் அழைப்புப் பெற்றுள்ளோம் என்பதை உணர்வோமாக.

கடவுளால் 'நீதிமானாக்கப்பட்ட' ஒருவன் மனமாற்றம் அடைய வேண்டும் என அழைப்பது சரியா? ; அது நீதிமானாக்கப்படுவதற்கு முன்பு இருக்க வேண்டிய நிலை அல்லவா?; இந்த அழைப்பில் நாம் என்ன கருத்துடையவர்களாய் இருக்கிறோம்?- இவையெல்லாம் மிகவும் முக்கியமான வினாக்கள், நல்ல கேள்விகள். எனவே, நாம் மிகவும் எச்சரிக்கையோடும், நுட்பத்தோடும் மேற்கொண்டு தியானிக்க வேண்டியது அவசியமாகுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாவத்தில் இருந்தும், பாவ வழிகளில் இருந்தும் திரும்பி; தூய்மைக்குள், கடவுளுடைய வழிக்குள் உட்புகுவதே 'மனமாற்றம்' என்பதன் பொதுக்கருத்தாகும். ஆனால், இங்கே அவ்வார்த்தைக்கு ஒரு புதுக்கருத்தும், ஒரு புது நோக்கும் கொடுத்து ஆராய்வதே நமது இலக்காகும். நாம் கடவுளுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், பாவம் நம்மை ஆளுகை செய்வதற்கு ஆண்டவராகிய இயேசு விடுவதில்லை; ஆனால் நம்மில் பாவமோ, பாவ இயல்போ இல்லவேயில்லை என்று எவராகிலும் சொல்லமுடியுமா?, முதன் முதலாக இயேசுவைச் சந்தித்து நம்பிக்கை கொள்ளும் ஒருவன், "என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இயேசு தம் இரத்தத்தினால் கழுவிவிட்டார், கடவுளின் அன்பு என்னில் ஊற்றப்பட்டுவிட்டது, கடவுளின் அரசு என்னில் நிலைநிறுத்தப்பட்டுவிட்டது, என்னில் உள்ள பாவம் யாவும் ஒழிக்கப்பட்டுள்ளன" என்று சொல்ல வேண்டியது இயல்பே. நமது இருதயத்தில் தீமை இல்லாதபடியினால், நம்மில் தீமையே இல்லை என்று உணர்வதும் இயல்பானதே. நாம் முற்றுமுழுதுமாய்த் தூயர் ஆகிவிட்டோம், இனி நம்மில் பாவம் இருக்கவே இருக்காது எனத் தப்பபிப்பிராயம் கொண்டுள்ளோம். "கடவுளால் பெற்றெடுக்கப்பட்டவன் எவனும் பாவம் செய்கிறவனாய் இருக்கமாட்டான்.... அவன் கடவுளால் பெற்றெடுக்கப்பட்டவனாதலால் அவனால் பாவ வாழ்க்கை நடத்த இயலாது" (1 யோவான் 3:9) -இதை ஒரு அழைப்பாகவும் சவாலாகவும் ஏற்காமல், ஒரு உண்மை நிலையாக ஏற்றுப்பரிதவிக்கிறோம்.

அன்பான விசுவாசியே, இரட்சிப்பு அடைந்தவனே, நீதிமானாக்கப்பட்டவனே, "நீ உன்னில் பாவம் இல்லை என்பாயேயாகில், உன்னையே நீ வஞ்சிக்கிறாய், உன்னில் உண்மை இல்லை" (1யோவான் 1:8). நாம் பாவம் செய்யாமல் இருக்கவேண்டும் (1யோவான் 2:1) என்பதே அழைப்பு. நீதிமானாக்கப்பட்டவனிடத்தில் பாவம் உண்டு, ஆனால் பாவம் அவனை ஆளுகை செய்வதில்லை என்பதே நமது நிலை. பின்வரும் குறிப்புகளை நாம் ஆழமாகப் பார்த்தால் விசுவாசியிடத்தில் பாவம் உண்டு ஆனால் [illegible] - என்பதே நமது நிலை. பின்வரும் குறிப்புகளை நாம் ஆழமாகப் பார்த்தால் விசுவாசி

(1) பெருமை- இது பல விசுவாசிகளிடத்தில் காணப்படுகிறது. "அவனைப் பார்க்கிலும் நான் பாக்கியசாலி" என நினைப்பதும் பெருமையே. தன்னைப் பற்றி எண்ண வேண்டியதிலும் அதிகமாய் எண்ணும்படி பெருமை ஒருவனைத் தூண்டுகிறது. கடவுள் தன்மேல் அன்புள்ளவராய் இருப்பதால்தான் தான் இவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறேன் என்பதை, பெருமையுள்ளவன் உணருவதில்லை. இந்தக் 'குறை' உள்ள ஒருவனும் கடவுள் மேல் நம்பிக்கைப் பலமுடையவனாகவும், ஆவியானவருடைய சாட்சியைப்பெற்றவனாகவும் இருக்கலாம் (ரோமர் 8:16, எரேமியா 9:24, 1கொரி1:31).

(11) சுயசித்தம்-மனிதன் பகுத்தறிவுள்ளவனாய் இருப்பதால், அவன் ஓரளவு சுயசித்தம் உள்ளவனாகவும் இருப்பது இயற்கையே. நமது ஆண்டவராகிய இயேசுவிடமும் இந்தச் சுயசித்தம் இருந்தது. ஆனால், அவர் கடவுளுடைய சித்தமே தன் சுயவிருப்பையும் ஆளவேண்டும் என விரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் கட்டுப்பட்டார். எனவேதான் அவர், "என் சித்தமல்ல, உமது சித்தமே நிறைவேறட்டும்" (மத் 26:39) எனக் கடவுள் சித்தத்திற்கு கட்டுப்பட்டார். பலவேளைகளிலும், விசுவாசியொருவன் 'தன்விருப்பமே', 'கடவுளுடைய விருப்பம்' என நினைக்கிறான். தான் விரும்புகிறபடியினால், அவன் சில செயல்களைச் செய்கிறான். அவையெல்லாம் 'கடவுள் சித்தமே' எனத் தப்புக்கணக்குப் போடுகிறான்.

(III) உலக விருப்புகள்- எந்த ஒரு விசுவாசி உலக விருப்புகள் இல்லாதவனாயிருக்கிறான். தான் கிறிஸ்துவின் பிள்ளை யாயிருப்பினும், தன்னுள் உளன் உடல் ஆசைகளும், மனஆசைகளும், புலன் ஆசைகளும் இருப்பதை உணருகிறான். (2 தீமோ 3:4). குறிப்பாக, பண விருப்பு இல்லாதவன் யார்? ஆடம்பர உடை அலங்காரத்தை விரும்பாதவன் யார்? "நான் விசுவாசித்திருப்பவரை இன்னார் என அறிவேன்" (2தீமோ 1:12), என்று சொல்லுகிறவன் தானும் உலகவிருப்புகளுக்கு விலக்கானவனல்ல. தனது விருப்புகளும், தனது பாவங்களும் சிலுவையில் அறையப்பட்டுவிட்டன (கலா 5:24) எனச் சாட்சி சொல்லுகிறவனும், பலவேளைகளிலும் உலக விருப்புகள் உடையவனாகவே காணப்படுகிறான்.

(IV) பொறாமை, சந்தேகம், வஞ்சம் ஆகியவை-

நான் கிறிஸ்துவின் பிள்ளை என்று சொல்லுகிற கிறிஸ்தவ சகோதரனே, நீ ஒருக்காலும் பொறாமைப்பட்டதில்லையா?; உமது பக்கத்து வீட்டான் நன்றாய் வாழ்வதையிட்டு உன் இருதயத்தில் பொறாமைப் பொறிதானும் தோன்றவில்லையா?; எந்தக் காரணமும் இல்லாமல் நீ ஒருவனையும் சந்தேகிக்கவில்லையா?; 'நீதியான கோபம்' என்பது கூட உன்னில் காணப்படவில்லைய?; பழிவாங்கும் குணமே அல்லது இயல்பே உன்னிடம் இல்லையா?-உன்னையே சோதித்து உணர்வாயாக.

(V) கெட்ட வார்த்தைகள், உள்ளான செயல்கள்-

இவையாவும் பாவங்கள்தான். கெட்ட வார்த்தை என்று சொல்லுகிறபொழுது, அது அசிங்க வார்த்தை மாத்திரமல்ல; "உனக்கு மூளை இல்லை" என்பனவும் கெட்ட வார்த்தைகள் தான். ஒரு பெண்ணை தாகாதவாறு நோக்குவது, ஒரு உள்ளான பாவ செயல் தான்.

(VI) செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் விடல்-

"நல்லதைச் செய்ய ஒருவனுக்குத் தெரிந்திருந்தும், அவன் அதைச் செய்யாவிடில் அது பாவமாகும்" (யாக் 4:17). ஆம், ஆலயம் போவது நல்லது, போகாமல் விடுவது பாவம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆமென்' என்று சொல்லுவது நல்லது, சொல்லவேண்டும் என்று தெரிந்திருந்தும், சொல்லாமல் விடுவது பாவம்; ஏழைக்கு உணவு கொடுப்பது நல்லது, கொடாமல் விடுவது பாவம்....இப்படிப் பட்டவைகளைச் சிலர் 'சிறிய பாவம்' என்று சொல்லுவார்கள். பாவத்தில் சிறிய பாவம், பெரிய பாவம் என்றில்லை-பாவம் சிறிதோ, பெரிதோ -பாவம் பாவந்தான்.

மேலே சொல்லப்பட்டவற்றையும், அவற்றைப் போன்றவற்றை யும் நாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது; விசுவாசியொருவன் தன்னிலும் பாவம் உண்டு, தான் இன்னமும் கழுவப்படவேண்டியவன், தான் முயற்சி செய்து தோல்வி காண்பவன்.... என்பதை உணருகிறான். அவன் இப்படிப்பட்டவைகளை எதிர்த்துப் போர் செய்வது உண்மைதான்; அவற்றை பலசிவளைகளிலும் வெற்றி கொள்ளுவதும் உண்மைதான். ஆனால், அவற்றைத் தரத்திவிட இயலாத நிலையிலேயே ஒரு விசுவாசியும் இருக்கிறான். இது மறக்க முடியா உண்மை. எனவேதான் ஒரு விசுவாசியும், ஒரு இரட்சிப்பு அடைந்தவனும் 'மனம் திரும்புதல்' வேண்டும் எனச் சொல்கிறோம். எனவேதான், நமது 'மீட்பு' முற்று முழுவதுமாய்க் 'கடவுளுடைய கிருபையின் செயல்' எனக் கூறுகிறோம்.

2. விசுவாசியொருவன், இரட்சிக்கப்பட்ட ஒருவன், தன் உள்ளத்திலுள்ள பாவங்களை உணர்ந்தபின் அவன் நற்செய்தியில் நம்பிக்கை வைக்கவேண்டும். இங்கே, 'நம்பிக்கை/விசுவாசம்' என்ற வார்த்தையையும் வேறு கண்கொண்டுதான் பார்க்கிறோம். இரட்சிக்கப்படுவதற்கு, நீதிமானாக்கப்படுவதற்கு முன் இருக்கவேண்டிய 'விசுவாசம்' வேறு, இரட்சிக்கப்பட்டபின் இருக்கவேண்டிய 'விசுவாசம்' வேறு. இது கிறிஸ்தவ வளர்ச்சிக்கு வேண்டிய விசுவாசம், ஆண்டவர் என்னை முற்றுமுழுதுமாய் இரட்சிப்பார் என்ற விசுவாசம்; ஆண்டவர் முற்றுமுழுவதுமாய் என்னை நிறைவுபடுத்துவார் என்ற விசுவாசம். இது, எனது இருதய பாவங்களை ஆண்டவர் கழுவிடுவார் என்ற நம்பிக்கை; இவ்விதம் செய்வதற்கு ஆண்டவர் வல்லமையுடையவர் என்ற நம்பிக்கை (யோவான் 17:2, ரோமர் 16:25). ஆண்டவர் வல்லமை உடையவர் மாத்திரமல்ல, அவர் வாக்கு மாறாதவர் (உபா 30:6, எசே 36:25,27,29; லூக்கா 1:68-75).

இந்த 'நிறைவு படுத்தலை' அவன் இன்றைக்கே செய்வாரோ அல்லது நாளைக்குச் செய்வாரோ?, என்பது நமது கேள்வியாயின்; 'இன்றைக்கே' என்பதுதான் பதில். இன்றைக்கே உமது சத்தத்தை அவர் கேட்பார் என்பதை நம்பு, நாளைக்கென்று பின்போடாதே. "இன்றே நீ என்னுடன் விண்ணகத்தில் இருப்பாய்" (லூக்கா23:43).

சகோதரனே, உனக்காகவே தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தவர் மேல் நம்பிக்கை வை, அவர் உமது பாவங்களையெல்லாம் தன் உளல் உடலில் சுமந்தவர். அவர் உன்மேல் தமது இரத்தத்தைத் தெளித்து, உன்னை முற்றுமுழுதாய்க் கழுவி விடுவார். இந்நிலையைத்தான் அப்போஸ்தலராகிய பவுல், 'விசுவாசத்தின் மேல் விசுவாசம்' என்றும், 'கிருபையின் மேல் கிருபை' என்றும் தமது கடிதங்களில் எடுத்துக் கூறுகிறார். நாம் இன்றே, ஒவ்வொரு நிமிடமும் புதுப்பிக்கப்படுகிறோம். அவர் நமது வாழ்வையும், நமது இருதயங்களையும் தூய்மைப்படுத்துகிறார். இனி, நாம் தண்டனைத்தீர்ப்புக்கு உட்பட்டவர்களல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை மேல் நம்பிக்கை வைப்பதால், கிறிஸ்துவின் வல்லமை நம்மில் நிலைத்திருப்பதை நாம் உணருகிறோம். அவர் (கிறிஸ்து) நமக்காகப் பரிந்து பேசுகிறார் என்பதையும் அறிந்து கொள்ளுகிறோம். நாம் இதுகாறும் சொன்னவற்றைச் சிந்திக்கிப் பார்க்கும் போது, 'கடவுளுடைய பிள்ளைகள்' வாழ்விலும், மனமாற்றமும் நம்பிக்கையும் இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொள்ளுகிறோம்.

3.. இன்னும் ஒரு சிறுகுறிப்பைப் பார்த்தபின் இவ்வருளுரையை முடிப்போம். திருமறையின் புதிய ஏற்பாட்டுப் போதனையும், நமது கொள்கையும் என்னவெனில், 'நாம் நீதிமான்களாக்கப்பட்ட அன்றைய தினமே இரட்சிப்பில் முழு நிறைவு அடையவில்லை' என்பதாகும். இரட்சிப்பு அடைந்த அன்று, ஒருவன் மறுபிறப்பு அடைகிறான் என்பது உண்மையே; அன்றைய தினமே அவன் கடவுளுடைய மாறாத அன்புக்கும், நிலையான உறவுக்கும், அவருடைய கிருபைக்கும் உரித்துடையவனாகிறான் என்பதும் உண்மையே; இழந்து போன படைப்புச் சாயலை (கடவுள் சாயலை) அவன் திரும்பவும் பெறுகிறான் என்பது மறுக்கமுடியா உண்மைதான். ஆனால், அவன் தூய முழுநிலை அடைவதில்லை; அவன் அன்றையத் தினமே மறுரூபமடைவதில்லை; கிறிஸ்துவைப் போன்ற திருஉருவம் பெறுவதில்லை. இந்நிலைகளை நாம் அடையவேண்டும் என்பதே நமது மார்க்க நெறி. இப்படி அடைவதற்கு கடவுளுடைய இடைவிடா அன்பும், அருளும், கிருபையும், அவருடைய பிரசன்னமும், அவருடைய வர்சமும் நமக்கு உறுதுணை புரிகின்றன. சுருங்கக் கூறின், நாம் இரட்சிப்பில் வளர்ச்சியடைந்து முழுநிறைவு காணவேண்டும். இதற்காகவே ஒரு விசுவாசிக்கும், 'விசுவாசத்தின் மேல் விசுவாசமும்' 'கிருபையின் மேல் கிருபையும்' தேவை. அவன் மனந்திரும்பி நற்செய்தியில் நம்பிக்கை வைக்கவேண்டும் (மாற்கு 1:15). அவன் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பும் தனது அபாத்திர நிலையை நன்குணரவேண்டும். அப்பொழுதான் அவன்; கிறிஸ்துவினதும், அவர் சிலுவைமீது சிந்திய இரத்தத்தினதும் 'பெறுமதியை' உணர்ந்து அறிந்து கொள்ளுவான்.

*-----------*

10

நமதாண்டவர் மலைமீது வழங்கிய அருளுரை -11

UPON OUR LORD'S SERMON ON THE MOUNT-11

"பணிவுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள், அவர்கள் உலகத்தையே உடமையாகப் பெறுவார்கள். நீதி நிலை வேண்டும் என்பதில் மிகுந்த வேட்கை கொண்டவர்கள் நற்பேறு பெற்றவர்கள், கடவுள் அவர்கள் வேட்கை நிறைவேறும்படி செய்வார். இரக்கம் காட்டுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள், கடவுள் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்" (மத்தேயு 5:5-7).

(குறிப்பு- 'மலை மீது வழங்கிய அருளுரை' என்ற தலைப்பில் ஜோன் உவெஸ்லி அவர்கள் 13 அருளுரைகள் ஆற்றியுள்ளார். இவற்றில் திருஅவையின் பெரும் கோட்பாடுகள் அவ்வளவு தெளிவாய்க் காணப்படவில்லை எனினும், இவ்வருளுரையில் கோட்பாடுகளுக்கு எதிரான போதனை இல்லை. காணப்படும் கோட்பாட்டுப் பிரதிபலிப்புகளும், ஏனைய அருளுரைகளில் ஏற்கனவே ஆராயப்பட்டவைதான். இவ்வருளுரையில் 'கிறிஸ்தவ அறம்' சம்பந்தமான கருத்துக்களே மலிந்து கிடக்கின்றன. இதை 'சமுதாய நற்செய்தி' அருளுரை என்று சொன்னால், அது மிகையாகாது.)

அருளுரை

பணிவுடையவர்கள்/சாந்த குணமுள்ளவர்கள் யார்? இவ்வினாவுக்கு உரிய விடையை அல்லதுவிடைகளை ஒரு கோணத்தில் பார்ப்போம். சாந்த குணமுள்ளவர்கள் சிறுகாரியங்களுக்காகக் கலங்கி நிற்பவர்கள் அல்லது. அவர்களுடைய அறியாமையினாலும் அவர்களுக்குத் துன்பதுயரங்கள் வந்தாலும், அவர்கள் அவைபற்றித் துயருகிறார்கள். அவர்கள் உலகத்தின் தீமைகளுக்கெதிராகத் தமது உணர்வுகளை முடினவர்கள் அல்ல- அனுதாபமின்மை சாந்தகுணமல்ல; அனுதாபமின்மையும் சாந்த குணமும் ஒன்றோடொன்று பொருந்தி நிற்பவை அல்ல. கடவுள் மேல் விசுவாசபலமற்று இருப்பதும் பணிவுடமை அல்ல. அது தேவைக்கு அதிகமானதும், தேவைக்குக் குறைவானதுமான எல்லா விருப்புகளையும் தடைசெய்து நிற்கும் ஒரு வாழ்வு நிலை- சாந்தகுணம் எல்லாவற்றையும் நடுநிலையில் நிற்கச் செய்யும். நமது இயற்கை விருப்புகள் யாவும், நாம் பெற்றுக் கொண்ட கடவுளுடைய கிருபையினால் அழிந்துவிடக்கூடாது என்பதே கடவுளின் விருப்பாகும். ஆனால் நமது இயற்கை விருப்புகள் கட்டுக்கடங்காதவாறு இருத்தல் ஆகாது; அவை சம அளவில் இருக்க வேண்டும். அவற்றை நமது மனமும் கட்டுப்படுத்தி வைக்கு வேண்டும். கோபம், துக்கம், பயம் ஆகிய மனித உணர்வுகளையும் சாந்தகுணம் மட்டுப்படுத்தி வைக்கவேண்டும். எனவே, சாந்தகுணம்/ பணிவுடமை என்பது அவரவர் சம்பந்தமான விடயங்களில் காணப்படவேண்டிய அருங்குணம். இவ்வருங்குணம் 'கடவுள்' சம்பந்தமான காரியங்களில் மாத்திரமல்ல, 'நமது' சம்பந்தமானதும், 'நமது சூழல்' சம்பந்தமானதுமாய் இருக்கவேண்டும். அது, "அவரே ஆண்டவர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்று ஒருவன் மனம்விட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் ஒரு நிலை. நம்மைப் பொறுத்தமட்டில் 'பொறுமையையும், 'மனமரம்மியத்தையும்'; நம் அயலவரைப் பொறுத்த மட்டில் 'அமைதியையும்', 'தயவையும்' கடைப்பிடிக்கும் ஒரு நிலை.

உண்மையில் பணிவுடைய ஒருவன், தீமை இன்னதுதான் என்பதை நன்கு அறிந்தபின், அதைத்தாங்கும் வல்லமை பெற்றிருக்கிறான். தீமையை அடக்க முயலுகிறான். அவன் தீமையினால் ஆளப்படுபவனுமல்ல, ஆள்வதற்கு விடுபவனுமல்ல. அவனுடைய நோக்குகள் கடவுள் கண்டுகொண்டு பார்க்கும் நோக்குகள் மாத்திரமாயிராமல், அறிவுக் கண் கொண்டு பார்க்கும் நோக்குகளாகவும் இருக்கும். சாந்த குணமுள்ள ஒருவன், உலககாரியங்கள் தன்னை ஆளுகை செய்வதற்கு விடமாட்டான்; ஆனால், உலக காரியங்கள் கடவுளால் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நன்கு அறிந்துணர்ந்து, அவற்றை உபயோகம் செய்வான். "கொலை செய்யாதே, கொலை செய்கிறவன் வழக்குமன்றம் தீர்ப்புக்கு ஆளாவான்" (மத் 5:21) என்பதை சாந்த குணமுள்ள ஒருவன் நன்கறிவான். அதே நேரத்தில், "தன் சகோதரன் மீது காரணமின்றிச் சினங்கொள்ளுகிற எவனும் வழக்கு மன்றத் தீர்ப்புக்கு ஆளாவான்; தன் சகோதரனைப் பார்த்து 'ஒன்றுக்கும் உதவவாதவனே' என்று சொல்லுகிறவன் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவான்; 'மதிகேடனே' என்று சொல்லுகிறவன் எரி நரகத்துள்ளாவான்" (மத் 5:22) என்பதையும் நன்குணர்ந்திருப்பான்.

சாந்தகுணமுள்ள ஒருவன் எல்லோரையும் தன் 'சகோதரனாகவே' எண்ணுவான். ஆனால், ஒருக்காலும் கோபப்படமாட்டான் என்று எண்ணலாகாது. நமது ஆண்டவர் இயேசு கூட கோபப்பட்டதுண்டு- "அவர் தம்மைச் சுற்றிலுமிருந்தவர்களைச் சினத்தோடு பார்த்து, அவர்களுடைய உள்ளத்தின் பிடிவாதத்தைக் கண்டு வருந்தினார்" (மாற்கு 3:5) ; ஆனால் அவருடைய கோபத்தில் நியாயம் இருந்தது. அந்த நியாயம் என்னவெனில், 'அவர்களுடைய பாவங்களுக்காகத் துக்கப்பட்டதே' 'உதவாதவனே' என்பதிலும் ஒருவன் கோபத்திற்கு இடங்கொடுத்து, அவனு நான வார்த்தைகளை உபயோகிப்பான் என்ற பொருள் காணப்படுகிறது-இங்கே அன்பில்லை; எனவே, இது நியாயப்படுத்தமுடியாத கோபம். 'மதிகேடனே' என்று சொல்லுவதும் இதைப் போன்றதே.

நாம் நமது கடமைகளைச் சரிவரச் செய்தால், நாம் விடும் சிறு பிழைகளை அவ்வளவாய்ப் பாராட்டவேண்டியதில்லை என்று நினைப்பது, தப்பானதாகும். நமது கடமைகள் மேல் நாம் கொண்டுள்ள வாஞ்சை, நமது சிறுபிழைகளை முடிமறைத்துவிடும் என்று நினைப்பது, தப்பான நினைவாகும். பிழைக்கு ஈடாகக் கடவுள் நமது நற்கடமையொன்றை ஏற்றுக் கொள்ளமாட்டார். நாம் கோபப்பட்டாலும், அக் கோபத்தின் காரணமாய் ஒருவனை 'அடிக்காமல்' விட்டால், அச்செய்கை கோபத்தை மறைத்துவிடாது; அடிக்காமல் விட்டுவிட்டதால், கோபப்பட்டது பரவாயில்லை என்றும் கடவுள் சொல்லமாட்டார். கடவுளுக்குரிய கடமைகளை நாம் செய்வதால், மனிதனுக்குரிய கடமைகளைச் செய்யவேண்டியதில்லை, என்று நினைப்பதும் தவறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் மேல் நம்மால் அன்பு செலுத்த முடியாவிட்டால், நமது சமைய அனுஸ்டிப்புகளில் எவ்வித பிரயோசனமும் இல்லை. எனவே தான், நாம் நமது காணிக்கையைப் படைக்கப் பீடத்தை நோக்கி வருமுன், நமது சகோதரனோடு நட்புறவு செய்து கொள்ள வேண்டும் (மத் 5:23-24) என்று நமதாண்டவர் சொன்னார். நமது விரோதியோடும் நட்புறவு செய்து கொள்ள வேண்டும்.

சாந்தகுணமுடையோர் உலகத்தையே உடமையாகப் பெறுவார்கள் என்று நமது தியான வசனம் சொல்லுகிறது. எவ்வளவு காலம் பொறுத்துப் பொறுத்து வாழ்வது? - எப்போது உலகத்தையே உடமையாக்கிக் கொள்வது? எவ்வளவு காலம் கோபப் படாமல் இருப்பது? இவ்வெயெல்லாம் நியாயமான வினாக்களே. ஆனால், கடவுள் சாந்தகுணமுள்ளவர்களுக்கு அதைக் கட்டாயம் செய்வார். அவர்கள் தம் கண்களினால் காணும் இவ்வுலகத்தை தமது உடைமையாகப் பெறாவிட்டாலும்; கடவுளுடைய நீதியாட்சி மட்டுமே நடைபெறுகிற 'புதிய உலகத்தை' அவர்கள் நிச்சயமாகத் தமது உடமையாக்கிக் கொள்வர் (வெளி:20); அங்கே அவர்கள் கிறிஸ்துவோடு 'ஆட்சி' செலுத்துவார்கள்.

2. இவ்வருளுரையின் இரண்டாம் குறிப்பு 'நீதி' சம்பந்தப்பட்டதாகும்- "... நீதி நிலவவேண்டும் என் பதில் மிகுந்த வேட்கை கொண்டவர்கள் நற்பேறு பெற்றவர்கள், கடவுள் அவர்கள் வேட்கை நிறைவேறும்படி செய்வார்", மெய்ப்பக்திக்குத் தடையாய் இருப்பவைபற்றி அறிந்துகொண்டோம்; அத்தடைகளில் ஒன்று 'பெருமை' ஆவியில் எளிமையுள்ளவர்களிடத்தில் 'பெருமை' இல்லை; 'கவனமின்மை', 'நிர்விசாரம்' ஆகியவையும் ஆவியில் எளிமையுள்ளவர்களிடத்தில் இல்லை. ஒருவனில் காணப்படும், 'கோபம்', 'பொறுமையின்மை', 'திருப்தியின்மை' ஆகிய இயல்புகள் 'சாந்த குணத்தினால்' அழித்துவிடுகின்றன. இவ்விதமான தடைகள் யாவும் அகன்றபின், நமது ஆவியின் 'பசி' இயற்கையாகவே உண்டாகிறது. இந்த ஆவியின் வாஞ்சைகளில் 'நீதி'க்கான பசியும், தாகமும் அடங்கும். ஒருவனில் 'நீதி' தோன்றிவிடுமேயாகில், அது 'கடவுள் சாயலை' திரும்பவும் பெற்றுவிடுவதற்குச் சமமாகி விடுகிறது. 'கிறிஸ்துஇயேசுவில் உள்ள சிந்தை' நம்மில் தோன்றவேண்டும் என்று சொல்லுவதும் இதே கருத்துடையது. ஒருவனில் காணப்படும் எல்லாவிதமான 'தீய' குணங்களும், கடவுளுடைய நீதியே, நம்மைப் படைத்த கடவுளுடைய சாயலுக்கொப்பாக நாம் புதுப்பிக்கப்பட வேண்டுமேயாகில், நமது இதய தாகத்தையும் பசியையும், நமது 'கடவுள் நீதி' யின் வேட்கை போக்கிவிடவேண்டும். உடல் பசிக்கும் தாகத்திற்கு, உணவும் தண்ணீரும் எப்போதும் தேவைப்படுவது போல், ஆத்தும பசிக்கு எப்போதும் 'நீதி' உணவு வேண்டும். பணமும் தங்கமும் சோறுவாங்க உதவி செய்யும், ஆனால் சோற்றுக்குப் பதிலாக அவற்றை உண்ண முடியாது. அதுபோல், ஆத்துமபசியையும் 'கடவுள் நீதி' யைத் தவிர வேறு எதுவும் போக்கிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு செய்யாமை, நன்மையே எப்போது செய்திருத்தல், மார்க்க சடங்குகளைச் சரிவரக் கடைப்பிடித்தல் ஆகியவையும் நீதிப்பசியைப் போக்காது; இவையெல்லாம் ஆத்தும் உணவாகவும் ஆகமுடியாது. இயேசுக்கிறிஸ்துவில் கடவுளை அறியும் அறிவு, கர்த்தருடனே ஒரே ஆவியாய் இசைந்திருத்தல், தந்தையாரோடும் அவருடைய புதல்வனாரோடும் ஐக்கியமாயிருத்தல், அவர் ஒளியில் இருப்பதுபோல் நாமும் ஒளியில் நடத்தல், ஆகியவையே இதயப்பசியைப் போக்கும் உணவுகளாகும். இவையே ஒருவனிடத்தில் காணப்படவேண்டிய பக்தி நிலை; இவையே ஒருவன் தேடவேண்டிய நீதி நெறி. இந்த இலக்கை நாம் அடையுமட்டும், நாம் திருப்தியடையவே கூடாது.

மேற்குறிப்பிட்ட நீதி இயல்புடையவர்களை நற்பேறு பெற்றவர்களென்று திருமறை கூறுகிறது. இந்த நற்பேறு பெற்றவர்கள் தமது இருதய வேட்கையாகிய 'நீதியைப்' பெறுவார்கள், அதன் நிமித்தம் புனிதர்கள் ஆவார்கள்- அவர்கள் உள்ளத்தில் நிறைவு தோன்றும். கடவுள் தாமே தம்முடைய நிறைவினால் அவர்களைத் திருப்தியடையச் செய்வார், அவர் அவர்களுடைய ஆத்தும பசி போகத்தக்க விதமாய், தமது அன்பின் மன்னாவால் அவர்களுக்கு உணவூட்டுவார். அவர் தம்முடைய நித்திய மகிழ்ச்சியின் ஊற்றில் இருந்து, அவர் தாகம் தீர்த்தக்க அளவுக்கு அருந்தச் செய்வார். இனி அவர்கள் ஒருக்காலும் பசித்திருப்பதுமில்லை, தாகித்திருப்பதுமில்லை. மெய்யாகவே அவர்கள் நற்பேறு பெற்றவர்களே.

'நீதிப்' பசி தாகம் தீராதிருக்கிறவர்களே, உங்கள் ஆத்தும பசியும் தாகமும் தீரும்படி ஆண்டவரிடம் வாஞ்சையுடன், ஊக்கத்துடனும் விண்ணப்பம் செய்யுங்கள். இவ்வித பரிசுத்த நிலையை அடையாவிடில், நீங்கள் வாழ்ந்திருந்து பயனென்ன? உலக காரியங்கள் உங்களுக்குத் தேவைதான். ஆனால், அவற்றிலிருந்தும், அவற்றினாலும் நீங்கள் நற்பேறு அடையவே மாட்டீர்கள். எனவே, எல்லாக் காரியங்களிலும் ஆண்டவராகிய இயேசுவே உங்கள் 'மகிழ்ச்சியாய்' இருப்பாராக.

3. நமது தியானத்தின் மூன்றாவது பொருள் 'இரக்கம்' ஆகும். "... இரக்கம் காட்டுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள், கடவுள் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்." நாம் எவ்வளவுக்கெவ்வளவாய் கடவுளுடைய வாழ்வைப் பெற்று வாழுகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவாய் 'இரக்க' சிந்தையுடையவர்களாகவும் இருப்போம். நாம் ஒருக்காலத்தில் எவ்வித இரக்கத்தையும் பெறாதவர்களாய் இறந்தவர்கள் போன்றிருந்தோம் என்பதை மறத்தலாகாது. நமது முந்திய நிலை- அதாவது நாம் கிறிஸ்துவின் இரக்கத்தைப் பெறாதிருந்த காலத்து நிலை, நம் நினைவில் இருக்குமேயாகில், இன்று அவ்வித நிலையில் உள்ளோர் மீது நாம் இரக்கம் காட்டுவோம் என்பது திண்ணம். நாம் இரக்கசிந்தையுடையவர்களாய் வாழ்ந்தால், நமது இரக்கத்தின் பலனாகிய 'கடவுள் இரக்கம்' நம்மேல் வரும். இரக்கம் என்ற சொல்லுக்கு, நமதாண்டவர் உபயோகம் செய்த பதம், 'பரிதாபம் உள்ளவர்கள்', 'நெஞ்சில் உருக்கமுள்ளவர்கள்' என்ற கருத்துக்களையே தாங்கி நிற்கின்றன. இரக்கமுள்ளவர்கள், 'கடவுளற்று' இருப்போரை அவமதியாது, அவர்களுக்காகவும், அவர்களுடைய நிலைக்காகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கப்படுவார்கள். இரக்கம் என்பதன் இன்றுமொரு பொருள் 'அன்பு' என்பதாகும். வேறுவிதத்தில் சொல்லப்போனால், அன்பு இல்லாமல் இரக்கம் சாத்தியமில்லை. இந்த அன்பு/இரக்கம் ஆழமானது. கடவுள் தமது அடியானாகிய பவுலைக் கொண்டு இந்த அன்பு/இரக்கம் என்பது எப்படிப்பட்டது என்பதை விளக்கிக் காட்டுகிறார்-(1கொரி:13).

இனிவரும் இரண்டு பந்திகளிலும் 'இரக்கத்தை', 'அன்பு' என்னும் பொருள் கொண்டு சுருக்கமாகப் பார்ப்போம். கிறிஸ்து நம்மேல் காட்டிய அன்பைப்போன்று, நாமும் அன்புசெலுத்தி வந்தால்தான், இந்த இரக்கம் நீடிய சாந்தமுடையதாய் இருக்கிறது. பெலவீனம், அறிவீனம், தகாத விசுவாசம், அற்ப விசுவாசம் ஆகியவற்றையும் அன்பு பொறுத்துக்கொள்ளும்; பகை, பொல்லாப்பு ஆகிய துர்க்குணங்களை அது சகித்துக் கொள்ளும். இந்த அன்புடையவன்தான் பசித்திருக்கும் ஒருவனுக்கு உணவளிப்பவன்; தாகமாய் இருக்கும் ஒருவனை தாகம் போக்குகின்றவன். அன்புத் தன்மையுள்ள ஒருவன், தன் அன்பினால் ஏவப்படும் நற்செயல்களை சிலகாலம் மட்டும் செய்திருக்காமல், தான் வாழ்நாள் முழுவதும் செய்கிறவனாக இருப்பான். கடவுளுடைய அன்பும், இரக்கமும் அவனை ஆளுகை செய்வதுமாத்திரமல்ல, அவனை முற்றுமுழுதான அன்புத்தன்மையுடையவனாய் மாற்றிவிடுகின்றன.

அன்பு ஒருவனில் இல்லையென்றால், அவன் வெற்றொலி செய்யும் வெண்கலத்தைப் போன்றும், கலகலவென்று ஒலி தருகின்ற தாளம் போன்றும் ஆகிவிடுவான். அன்பு தீங்கிற்குப் பதில்தீங்கு செய்யாமல் நன்மையானவற்றையே செய்யும்; அது பொறாமை கொள்ளாது, தனக்கு நன்மைகள் கிட்டாவிட்டாலும் அன்புடைய ஒருவன் தன் அயலவனுக்குக் கிடைக்கும் நன்மைகளைக் கண்டு பொறாமை கொள்ளமாட்டான்; பதிலாக, அவனோடு சேர்ந்து மகிழ்ச்சியடைவான். அன்பு தற்புகழ்ச்சி செய்யாது, தற்புகழ்ச்சி செய்வதற்கு தன்னிடம் ஒரு நன்மையுமே இல்லை என்றுதான் அன்புடைய ஒருவன் நினைப்பான். எக்காரணமும் இல்லாமல் நியாயம் தீர்ப்பதற்கு அன்பு ஒருக்காலும் முன் நில்லாது; அன்புடைய ஒருவன் நியாயம் தீர்க்கப்போகுமுன் இருபக்க சாட்சிகளையும் சீர்தூக்கிப் பார்த்தபின்பு தான் நியாயம் தீர்க்க விளைவான். அன்புடைய ஒருவன் தன்னைத் தானும் நியாயம் தீர்க்கமுனையான்-அச்செயலைக் கடவுளிடமே விட்டுவிடுவான். அன்பு இறுமாப்பாயிராது; அன்புடைய ஒருவன் தான் தன்னைப்பற்றி நினைப்பதற்கும் அதிகமாய் நினைக்கமாட்டான்; எப்போதும் பணிவுடையவனாக வாழவே எண்ணுவான். அன்பு அயோக்கியமான எதையும் செய்யாது; அன்புடைய ஒருவன் வேண்டுமென்றே தன் சகோதரனைத் துன்புறுத்தமாட்டான். அன்புடைய ஒருவன், எவற்றிற்கு அஞ்சவேண்டுமோ அவற்றிற்கு அஞ்சுவான்; எவற்றைக் கனப்படுத்த வேண்டுமோ அவற்றைக் கனப்படுத்துவான். அன்பு தன்னலமானவற்றிற்காக முன்நிற்காது; அன்புடையவன் தன் வாழ்வில் பொது நன்மைகளுக்கே- பிறர் நன்மைகளுக்கே முதலிடங் கொடுப்பான். அன்பு சினமடையாது, தீங்கு நினையாது-தீங்கை கண்களால் கண்டாலும் அவற்றைச் செய்யாது. அன்பு அநியாயத்தைக் கண்டு மகிழ்ச்சியடையாது; அன்புடைய ஒருவன் 'உண்மை' எங்கெங்கெல்லாம் காணப்படுகின்றதோ-அங்கெல்லாம் பெருமகிழ்வடைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு எல்லாவற்றையும் தாங்கும்,எல்லாவற்றையும் நம்பும்-தனக்குரிய எல்லாவற்றையும்மாத்திரமல்ல, பிறனுக்குரிய எல்லாவற்றையும் என்பது பொருள். (இந்த 'எல்லாவற்றையும்' என்ற வார்த்தையை நாம் ஆழமாகத் தியானிக்க வேண்டும்.)

இதுவரை நாம் பார்த்தவைகளை முன்வைத்து, 'இரக்கம் காட்டுதல்' என்றால் என்பது நமக்குத் தெளிவாக ஆகியிருக்கும். 'பணிவுடைமை', 'நீதி', 'இரக்கம்' ஆகியவை நம் இம்மைக்கும், மறுமைக்கும் அவசியமானவை என்பதை உணருவோமாக. நமது பாவங்கள் நிமித்தம்,கடவுள் நமது 'பெயர்களை' அவருடைய புத்தகத்தில் இருந்து நீக்காதிருப்பாராக. (யாத் 32:23-33).

*----------------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

## திருக்கட்டளை: அதன் துவக்கம், தன்மை, இலட்சணம், உபயோகம்.
## THE LAW: ITS ORIGINAL NATURE, PROPERTY AND USE

"என்றாலும் நீதிச்சட்டத்தின் தன்மையை நோக்குமிடத்து அது தூய்மையானதே; அவ்வாறே திருக்கட்டளையும் தூய்மையானது, நீதியானது; நலமார்ந்தது" (ரோமர் 7:12).

(குறிப்பு- கிறிஸ்தவ 'அறநிலை' நீதி/பிரமாணம் பற்றி ஜோண் உவெஸ்லி ஆற்றிய நான்கு அருளுரைகளில் இதுவும் ஒன்றாகும். நேர்மையான வாழ்வு, நல் நடத்தை, செயல் நிறைந்த ஆன்மீக வாழ்க்கை ஆகியவை கிறிஸ்தவ வழியில் தவிர்க்கமுடியா நெறிகளாகும், என்பது ஜோண் உவெஸ்லியின் முழு நம்பிக்கை. கடவுளுடைய கிருபையின்வழி நடத்துதல் மாத்திரம் போதுமானது. எனக்கருதும் பலர், இச்சன்மார்க்க நெறிகளில் அவ்வளவு ஆர்வம் காட்டுவதில்லை. மெதடிஸ்த கிறிஸ்தவர்கள் தமது உலக வாழ்விலும், மார்க்க வாழ்விலும் ஒழுக்கமும், கட்டுப்பாடு உடையவர்களுமாய் இருத்தல் வேண்டும் என்பதே இவ்வருளுரையின்முழு நோக்கமுமாகும்.)

அருளுரை

இவ்வருளுரை சொல்ல விரும்புபவை, சிக்கலான இறையியல் கொண்டது, என்பது உண்மையே. மோசேயின் நீதிச்சட்டமோ அல்லது ரோமானிய நீதிச்சட்டமோ, எதுவாய் இருந்தாலும் இன்றைய கிறிஸ்தவ வாழ்வில் அவை அவசியமில்லை. எனச் சிலர் நினைக்கின்றனர். இங்கே பவுல் சொல்லவிரும்புவதை நாம் சற்று ஆழமாகச் சிந்திப்போமானால், அவற்றை நம்மால் தவிர்க்கமுடியாது என்பதை உணர்ந்து கொள்ளுவோம். நாம் இங்கே குறிப்பிடவிரும்புவதில், 'சன்மார்க்க பிரமாணம்' அடங்கியிருப்பதைக் காணலாம். இயேசுக் கிறிஸ்துவோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்டவரும், எல்லாவித நீதிச்சட்டங்களுக்கும் மரித்தவர்கள் ஆகிவிட்டனர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையே. (ரோமர் 7:1-6). ஆனால், நீதிச்சட்டமும் பாவமும் ஒன்றல்ல; பாவம் இன்னது என்பதை அறிவதற்கு நீதிச்சட்டம் நமக்கு உதவுகிறது. 'இச்சியாதே' என்று நீதிச்சட்டம் சொல்லாதிருந்தால், 'இச்சை கொள்ளுதல்' என்றால் என்ன என்பதே நமக்குத் தெரிந்திருக்காது. எனவேதான் நீதிச்சட்டம் (நியாயப் பிரமாணம்) , திருக்கட்டளை (கற்பனை) ஆகியவை பற்றி ஆராய இங்கே விரும்புகிறோம்.

1. துவக்கம்: இங்கே ஒரே கருத்துடையதாய்க் காணப்படும் மூன்று சொற்களை நாம் மனத்திற் கொள்ளுதல் வேண்டும்- அவையாவன; சன்மார்க்க கட்டளை (ஒருவனுடைய பிறப்பிலேயே ஏற்படுவது), நீதிச்சட்டம் (மனிதன் காலத்திற்குக் காலம் ஏற்படுத்திக் கொண்டவை), திருக்கட்டளை/கற்பனை (கடவுளால் கொடுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவை)எனவே ,அவக்கம் என்று பார்க்கும்போது; சன்மார்க்க கட்டளை என்பது ஒருவனிடத்தில் பிறப்பிலேயே ஏற்படுவது அல்லது இயற்கையாகவே காணப்படுவது, என்றாகிறது; நீதிச்சட்டம் அல்லது நியாயப்பிரமாணம் என்பது மனிதனால் ஏற்படுத்தப் படுவது (மோசேயின் நியாயப்பிரமாணம்) என்றாகிறது: திருக்கட்டளை அல்லது கற்பனை என்பது கடவுளால் மனிதனுக்குக் கொடுக்கப்படுவது (பத்துக் கற்பனைகள்) என்றாகிறது. இவற்றில், முதலாவதாகச் சொல்லப்பட்ட சன்மார்க்ககட்டளை, அதாவது மனிதனின் இயற்கையாகவே தோன்றிவிட்ட கட்டளையானது, மனிதன் கடவுளை எதிர்த்த அன்றே அழிந்துவிட்டது. ஆனால், கடவுள் தமது மிகுந்த இரக்கத்தின்படியே அவற்றைத் திரும்பவும் தமது மக்கள் இருதயத்தில் எழுதினார் என்பது திருமறை வாக்காம்-" .....நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்....." (எரேமியா 31:31-38).

2. தன்மை: இந்தக் குறிப்பில், நாம் பார்க்கப்போவது, கடவுளால் நம் இருதயத்தில் எழுதி வைக்கப்படும் திருக்கட்டளையின் (எரேமியா 31:33) தன்மையைப் பற்றியே தவிர, வேறில்லை. இந்தத் திருக்கட்டளை, என்றும் அழியாதிருக்கும் இறைவனின் சாயலைப் பிரதிபலிக்கின்றதாய் இருக்கிறது. இது மனிதனுக்கும் தேவ தூதர்களுக்கும் கடவுளை வெளிப்படுத்துகிறது. நாம் கடவுளைப் பார்க்கமுடியாமல் தடையாயிருக்கின்ற முகத்திரையை இது அகற்றிவிடுகிறது. அவரவர் திரசிப்பு ஆற்றலுக்கு ஏற்ப, இந்தத் திருக்கட்டளை (சன்மார்க்க பிரமாணம்) கடவுளுடைய பிள்ளைகள் யாவருக்கும் வெளிப்படுத்தப்படுகிறது. கடவுளை ஒருவன் முகமுகமாகப் பார்த்தால், அவன் இறந்துவிடுவான் என்று திருமறை கூறுகிறது (யாத் 33:20) ;ஆனால், நாம் கடவுளைக் கண்டபின்பும், மரிக்காமல் இருப்பதற்கு இந்தத் திருக்கட்டளை உதவுகிறது.

இது வாழ்வைக் கொடுக்கிறதே தவிர, வாழ்வை அழிக்கமாட்டாது. இந்தத் திருக்கட்டளையில் தான் கடவுள் தமது சிந்தையையும், தமது திருவுளத்தையும் உலகிற்கு வெளிப்படுத்துகிறார். இது கடவுளுடைய 'நன்மைகளையும்', அவருடைய 'உண்மை'யையும் நமக்குக் காட்டுகின்றது-" .... கடவுளுடைய மாட்சிமை. வீசும் சுடரொளியாகவும், அவருடைய தன்மையின் நேரான அச்சுப்பதிவாகவும் விளங்குகிறது..." (எபி 1:3) கடவுள் யார் யாருடைய கண்களைத் திறந்து விடுகின்றாரோ, அந்தக்கண்கள் யாவும் தெளிவாகப் பார்க்கத்தக்கதாக, இந்தத் திருக்கட்டளை 'அன்பின்' உருவத்தை எடுத்தது. இந்தத் திருக்கட்டளையே என்றுமழியாத கடவுளின் நீதியுமாயிருக்கிறது. இதன் முழு நிறைவையும் அறிவதற்கு மனிதனுடைய அறிவாற்றல் போதாது; சேராபீன்களும், கேராபீன்களும் இத்திருக்கட்டளையைக் கண்டு, வியப்போடு மகிழ்ந்து நிற்கின்றனர். கடவுளுடைய பிள்ளை ஒருவனுக்கும் இத்திருக்கட்டளை (சன்மார்க்க பிரமாணம்) மாட்சியும் மகிழ்ச்சியுமாய் இருக்கிறது: கடவுளால் ஒருவனுடைய உள்ளத்தில் எழுதப்படுகிற திருக்கட்டளையானது, ஊன் உடல் உருவெடுத்த இயேசுவே- இயேசுவின் தன்மையே இத்திருக்கட்டளையின் தன்மையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இலட்சணம்: கடவுளால் நம் இருதயத்தில் எழுதப்படுகின்ற திருக்கட்டளையின் இலட்சணத்திற்கு வரையறை இல்லை. தேவதூதர்களால் கூட போதிய அளவிற்கு விளங்கப்படுத்த இயலாது. இங்கே நாம் குறிப்பாக, நமது அருளுரை வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும், மூன்று வகையான இலட்சணங்களை மாத்திரமே நோக்குவோம்.

(அ) தூய்மையானது- நமது இருதயத்தில் எழுதப்பட்ட திருக்கட்டளை, விண்ணிலிருந்து வரும் கடவுளின் ஞானமாய் இருப்பதால், அது தூய்மையுள்ளதாய் இருக்கிறது (யாக்கோப்பு 3:17). இந்தத் தூய்மை நிலை நிலையானது, வேறு வார்த்தையில் சொல்லப்போனால், இந்தத் தூய்மையே, களங்கமற்றதும், மாசில்லாத தூமான பக்தி (யாக்கோப்பு 1:17). அது தூயவரான கடவுளிடமிருந்து வருவதால், தூய்மையுள்ளதாகத்தானே இருக்கும். அது தூய்மையானதாய் இராவிட்டால், எப்படி அது கடவுள் சாயலின் முழுமையான பிரதிபலிப்பாய் இருக்க முடியும். அது அசுத்தமானதல்ல, அசுத்தமானவற்றோடு சேரக்கூடியதுமல்ல. எந்தவிதமான பாவத்தோடும் அது ஒப்புரவாகமுடியாது- ஒளியும் இருளும் எப்படி ஒன்றாய் இருக்க முடியும். பாவம் கடவுளுடைய விரோதியாயிருப்பதால், அது திருக்கட்டளைக்கும் எதிரியே. திருக்கட்டளையானது, பாவத்திற்குக் காரணியல்ல; ஆனால், அது பாவத்தை வெளிப்படுத்துகிறது (ரோமர் 7:13). மனிதனுடைய இதயமே தீமையானது, கடவுளுடைய திருக்கட்டளையோ தூய்மையானது.

(ஆ) நீதியானது- இந்தத் திருக்கட்டளை அவரவருக்குச் செய்யவேண்டியவற்றை நீதியின்படி செய்கிறது. கடவுளுக்கு எதைச் செய்ய வேண்டும், மனிதருக்கு எதைச் செய்ய வேண்டும் (கடவுளுடைய படைப்புகளுக்கு), நமக்கு எதைச் செய்ய வேண்டும் என்று வழிநடத்துவது நீதியான திருக்கட்டளையே.

அது இயற்கை நியதியானவற்றிற்கும், செயற்கையானவற்றிற்கும் நீதியானதாகவே உள்ளது. பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும் என்ற திருக்கட்டளை நீதியானதே என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். நீதித் திருக்கட்டளை, கொடுங்கோன்மையானதும் சர்வாதிகாரமானதும் ஆனது என நாம் எண்ணுதல் கூடாது. முழு மொத்தமாகப் பார்க்கப் போனால் யாவும் கடவுளுடைய சித்தப்படியே நடக்கின்றன; விண்ணில் செயல்கள் யாவும், மண்ணின் செயல்கள் யாவும் கடவுளின் நீதிப்பிரமாணத்தின்படியே நடக்கின்றன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளோம்.

(எல்லாம் கடவுளுடைய விருப்புப்படியும், கடவுளுடைய நீதியின்படியும் நடக்கின்றன என்று சொல்லும்போது; தீமையும் கடவுளுடைய விருப்பப்படி நடக்கிறதா, அது அவரது நீதியின்படி இருக்கிறதா என்ற வினா எழக்கூடும். இது ஒரு பொதுக்கேள்வி, எல்லாக்காலத்திலும் கேட்கப்படுகின்ற வினா. 'இல்லை' என்பதே நமது பதில். தீமை கடவுளுடைய விருப்புப்படி ஆனதானால், எவ்விதம் அது அவரை எதிர்த்து நிற்கும்? தம்மை வெறுப்பதற்கென்றும், தம்மை அழிப்பதற்கென்றும் கடவுள் தீமையை உருவாக்கி இருப்பாரா? பாவம் கடவுளுடைய படைப்பானால், அது எவ்விதம் படைப்பாளியிடம் கணக்குக் கேட்க முடியும்? .. இவ்விதமான வினாவும் நமக்கு வருவதற்கு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் வேறு, கடவுளுடைய சித்தம் வேறு என நாம் நினைத்தலே காரணமாகும்.)

(இ) (இ) நலமானது- திருக்கட்டளையின் மூன்றாவது இலட்சணம், அது நல்லது என்பதாகும். திருக்கட்டளை தூய்மையானதும் நீதியானதுமாய் இருப்பதால், அது நிச்சயம் நல்லது என்பதும் உண்மையே. அது, தூய்மையிலும், நீதியிலும் இருந்து மாத்திரமல்ல, அன்பிலும் இருந்து ஊற்றெடுக்கிறது. இந்த அன்புதான் தீர்க்கதரிசிகளைக் கொண்டு உரைத்து; இந்த அன்புதான் திருத்துவர் மூலம் நம்மோடு பேசுகிறது; இந்த அன்புதான் நேர்மையான வாழ்க்கையின் பரிசாகிய வெற்றிமாலையை நமக்குக் கொடுக்கிறது (2 தீமோ 4:8); இந்த அன்பின் ஊற்றில் இருந்துவரும் 'நல்ல' திருக்கட்டளைதான் உண்மையானவை எவையோ, நன்மதிப்புள்ளவை எவையோ, நேர்மையானவை எவையோ, .... இனியவை எவையோ... (பிலி 4:8)-அவற்றில் நம் சிந்தனைகளைச் செலுத்தவைக்கிறது. இந்த நன்மையின் ஊற்றாகிய அன்புதான் நம்மை மன்னிக்கிறது, நம்மை வழிநடத்துகிறது, நம்மைப் போசிக்கிறது-கடவுளுடைய மைந்தரையே நமக்காக ஒப்புக்கொடுத்தது (யோவான் 3:16).

4. உபயோகம்: கடைசியாக திருக்கட்டளையின் உபயோகம் பற்றிப் பார்ப்போம். மூன்றுவித உபயோகங்களை மாத்திரம் நாம் இங்கே நோக்குவோம். முதலாவது, கடவுளால் நமது இருதயங்களில் எழுதப்பட்டிருக்கும் திருக்கட்டளையானது, பாவத்தைக் குறித்து உலகையும் நம்மையும் கண்டித்து உணர்த்துகிறது. நமதுஇதயங்களை ஆட்சி செய்யும் தூய ஆவியானவர் இதைச் செய்கின்றாரே என நாம் கூறலாம்-உண்மைதான். சில தடவைகளில் தூய ஆவியானவர் சுயமாகவும், பல தடவைகளில் திருக்கட்டளைகளைக் கொண்டும் தூய ஆவியானவர் உணர்த்துகிறார் என்பது உண்மையே. நமது இதயங்களில் திருக்கட்டளை ஆழமாய் வேரூன்றி இருந்தால், அது கடின இதயத்தையும் உடைத்து விடும் தன்மை பெற்றுவிடும். திருக்கட்டளை கடவுளுடைய வார்த்தையேயெனில், அது இருபக்கமும் கூர்உள்ள வாளைப்போன்று குத்தி ஊடுருவுகிறது (எபி 4:12). ஒரு பாவியானவன் வாழ்ந்திருந்தாலும், அவன் கடவுளுடைய ஆவியானவரின் உயிர் இன்றி வாழ்வதால், கடவுளுக்கு முன்பாகச் செத்தவனே.

இரண்டாவது, கடவுளுடைய திருக்கட்டளை, நம்மைக் கடவுளிடம் கூட்டிவருகிறது. முதலாவது உபயோகிமும்; திருக்கட்டளையை ஒரு கண்டிப்பான ஆசிரியரைப்போன்று நமக்குக் காட்டலாம். ஆனால், அந்தக் கண்டிப்பின்அடித்தளமாக 'அன்பு' இருக்கிறது. என்பதை எம்மால் மறுக்க முடியாது. நாம் கடவுளிடம் வந்தால்தான் மெய்வாழ்வடைவோம். கடவுளிடம் மனிதரைக் கொண்டுவரும் பல எத்தனங்கள் இருந்தாலும், கிறிஸ்துவினால் நமது உள்ளத்தில் எழுதப்பட்டிருக்கும் திருக்கட்டளை செய்யும் அளவுக்கு, வேறு எதுவும் சிறப்படைய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது, கடவுளுடைய திருக்கட்டளையானது, நம்மை வாழும்படி செய்கிறது. நாம் கடவுளுடைய சீவனைப் பெறும்படி, தூய ஆவியானவர் கையாளும் ஒரு முறையாக இது இருக்கிறது. இத்திருக்கட்டளையானது, மெய்வாழ்வாகிய கடவுளை விட்டு நாம் பிரிந்து விடாதபடி தற்காக்கிறது. நாம் கிருபை மேல் கிருபை பெறத் தக்கதாக, கடவுளின் மெய்வாழ்வு நிலை நமக்கு உதவுகிறது. கிறிஸ்து இல்லாமல் ஒரு நிமிடந்தானும் ஒரு விசுவாசியால் வாழமுடியாதது போல, கிறிஸ்துவின் திருக்கட்டளை இன்றியும் ஒரு விசுவாசியால் ஒரு நிமிடந்தானும் வாழமுடியாது.

கிறிஸ்துவினுடைய திருக்கட்டளையை நாம் மிகவும் சுருக்கமாகச் சொல்லப் போனால்; அது 'கடவுள் மேல் அன்பாயிரு' , 'உன் சகோதரன் மேல் அன்பாயிரு' என்பதாகும்.

*-----------*

12

## சாத்தானின் தந்திரங்கள்
## SATAN'S DEVICES

"..."அவனுடைய நயவஞ்சகங்களை நாம் அறியாமலில்லை" (2 கொரி 2:11).

(குறிப்பு- ஜோன் உவெஸ்லி ஆற்றிய அருளுரைகளில் பலவற்றின் வரலாறு காணப்படாததுபோல், இவ்வருளுரை பற்றிய குறிப்பும் தெளிவாய்க் காணப்படவில்லை. இதை ஒரு விளக்கவுரையாகக் கொள்ளாது, கிறிஸ்தவ வாழ்வுக்குரிய அறிவுரையாகக் கொள்ளுதலே நல்லது.)

அருளுரை

ஒரு விசுவாசியானவன் இரட்சிப்படைகிறபொழுது, அந்தஇரட்சிப்பு முற்றுமுழுதான ஒன்றாய் இருக்கமாட்டாது என்பதை நாம் அறிவோம். எனவே, இரட்சிப்பு நிறைவடையும் வரை ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவின் 'கிருபையில்' வளர்ச்சியடையவேண்டும் என நாம் போதிக்கிறோம். கடவுளுடைய கிருபையினால் ஒருவனில் துவக்கிவிடப்படும் கடவுட்செயலை, 'இவ்வுலகின் தேவன்' என்றழைக்கப்படுகிற சாத்தான் குழப்பிவிடவும் அழித்துவிடவும் முன்நிற்கிறான். அவ்விதம் செய்வதற்கு அவன் கையாளும் முறைகள் அநேகம்-ஒரு முறையை மாத்திரம் நாம் இவ்வருளுரையில் காண இருக்கிறோம். சாத்தானுடைய உபாயங்களுக்கு எதிராக நாம் எதிர்த்து நிற்க முடியாது என்பது பலருடைய அனுபவ உண்மை.

கடவுளுடைய மட்டற்ற அன்பில் இருந்து ஊற்றெடுக்கும் கிருபையினாலேயே இரட்சிப்பு உண்டாகிறது என்பதை நாம் அறிவோம். இரட்சிப்படைந்த ஒருவன் கடவுள் வாக்குப் பண்ணியுவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறான். அப்படி அவன் இரட்சிக்கப்பட்ட காலங்களில் பெற்றுக்கொள்ளும் ஈவுகளை 'முதற் கனிகள்' என்றும், இனி வரப்போகின்றவற்றின் 'முன் ருசிப்பு' என்றும் திருமறை அழைக்கிறது-ஏனெனில் நிறைவான கனிகளை இனித்தான் நாம்அறுவடை செய்யவேண்டியிருக்கிறது. 'இனி கிடைக்கப்போகும் விளைச்சலின் முதற்கதிராக ஆவியானவரைப் பெற்ற நாம்" (ரோமர்8:23). நாம் கடவுளை முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு சிந்தையோடும், முழு ஆற்றலோடும் நேசிக்கின்ற நிலை அடைகிறபொழுது இந்த 'முழுமை' நமக்குக் கிடைக்கிறது. நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருக்கக்கூடிய நிலை அடைகிறபொழுது இந்த 'முழுமை' கிடைக்கிறது. நாம் எப்போதும் துதியோடு விண்ணப்பித்துக் கொண்டிருக்கும் நிலை பெறுகிறபொழுது; அன்பின் நிறைவைக் காணும் நிலை அடைகிறபொழுது; நாம் எப்போதுமே ஒளியில் நடக்கிற நிலை அடைகிறபொழுது; நமது வாழ்க்கையில் கடவுளுடைய சித்தமே எப்போதும் நடைபெறுகின்ற நிலை அடையும்போது; நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் யாவற்றையும் கடவுளுடைய மாட்சிமைக்கென்றே செய்யும் நிலை ஏற்படும் போது-நாம் இரட்சிப்பின் முழுமையையும், நிறைவையும் நாம் அடைந்துவிடுவோம்.

இந்த விதமான 'முழுமை' நிலையினை, இலக்கினை நாம் அடைந்துவிடாதபடி சாத்தான் தடைசெய்கிறான், நமது இரட்சிப்பு வளர்ச்சியை அழித்துவிட முன்நிற்கிறான் என்பதே நம் வாதம் (1 கொரி 7:5;2, கொரி 2:11). அவன் அப்படி முயற்சிக்கும் அழிவுப் பிரதிபலிப்புகளை நாம் பின்வருமாறு காணலாம்.

(அ) நமது மனமாற்றம் போதுமானதல்ல என்று சாத்தான் கூறுகிறான். 'நான் ஒரு நீசன், பாவி, அபாத்திரன் 'என்று சொன்னால் மாத்திரம் போதாது என்று அடிக்கடி அவன் நம்மோடு சொல்லுவதால்; நமது மகிழ்ச்சியின் துவக்கமே அழிந்து விடுகிறது. கொடைவள்ளலாகிய கடவுளிடமிருந்து நாம் பெற்றுக் கொண்டவைகளைவிட பெறாதவைகள் அநேகம் எனச் சுட்டிக்காட்டி, நமது 'கிருபை வளர்ச்சியை' அழித்து விடுகிறான்.

(ஆ) சாத்தான் நமது மனச்சமாதானத்தை அழித்து விடுகிறான். நாம்கடவுளைப் பார்ப்பதற்கு அருகதையற்றவர்கள் எனக் கூறுகிறான்; கடவுள் பாவியான எவன்மேலும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டார் என்று நம்மோடு பேசுகிறான். கடவுள் நமக்காக மகிழ்வடைகிறார் என்று நினைப்பது வெறும் மாயை எனக்கூறுகிறான். 'உன்னுடைய இலக்கு பிகத்து ரத்தில் உள்ளது, நீ கடவுளைப் போன்று ஆகாவிட்டால் எப்படி நீ பாவமில்லாது இருக்கலாம்' என்ற சந்தேக விதையை விதைக்கிறான். நாம் முன்பு வாழ்ந்த 'செயல் வாழ்வு' , 'சுயநீதி வாழ்வு' நிலையே நல்லது என்று சொல்லி, அந்நிலைக்குநம்மை அவன் தள்ளிவிடுகிறான். இவற்றால் நமது இரட்சிப்பின் சமாதானம் அழிந்துவிடுகிறது.

(இ) அவன் ஒரே நச்சரித்துக் கொண்டிருப்பான். 'கிறிஸ்துவில் என் அடித்தளம் போடப்பட்டாயிற்று' என்று நாம் உறுதியாகச் சொன்னாலும், அவன் விடான், நம்மில் நீதிமானுக்குரிய கனிகள் இருக்கின்றனவா; கிறிஸ்துவில் காணப்பட்ட சிந்தை நம்மில் இருக்கின்றதா; நாம் உண்மையிலேயே பாவத்திற்கென்று மரித்து மெய்வாழ்வுக்கென்று உயிர்த்துவிட்டோமா (மறுபிறப்படைந்து விட்டோமா); குறிப்பாக நாம் உடல் நோயினால் வருந்தும் போதும், துன்பங்களினால் அவதியுறும் போதும் மேற்சொன்ன விதமான வினாக்களை ஓயாது கேட்டு நச்சரித்துக் கொண்டிருப்பான். அவனுடைய நோக்கம் நிறைவேறுமட்டும் நம்மை விடவே மாட்டான்.

(ஈ) விசுவாசியொருவன் இரட்சிப்பின் பெறுபேறாய் பெறும் இன்னுமொன்று 'தூய்மை' ஆகும்-"கடவுள் நம்மை அசுத்த வாழ்க்கை நடத்துவதற்காக அழைக்கவில்லை, தூய வாழ்க்கை நடத்துவதற்காகவே அழைத்திருக்கிறார்" (1தெ4:7). கவர்ச்சிகரமாகத் தோன்றும், அதே நேரத்தில் கடவுளுக்கு அருவருப்பானவற்றைச் சாத்தான் நமது வாழ்வுப்பாதையிலே கொண்டுவந்து குவிப்பான். விசுவாசியானவன் கவர்ச்சியினால் இழுபட்டு, தான் பெற்றிருக்கும் தூய்மையை இழந்து விடுகிறான்.

(உ) விசுவாசி தனது இரட்சிப்பினால் அடையும் சுயாதீனத்தையும் அழித்துவிடுகிறான்-"அந்தச் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:22); "ஆகவே மைந்தர் உங்களுக்கு விடுதலை அளித்துவிட்டால், நீங்கள் மெய்யாகவே விடுதலை பெற்றவராவீர்கள்" (யோவான் 8:36). கடவுளை அறிவதினால், அவரிடமிருந்து நாம் பெறும் சுயாதீனமே மெய்யான சுயாதீனமாகும். இதிலிருந்துதான் ஏனைய விடுதலைகள் யாவும் பிறக்கின்றன. சாத்தான் மனிதரை எப்பொழுதும் அடிமைகளாக வைத்துக் கொள்ளவே விரும்புவான்; இதற்காக அவன் எதுவும் செய்ய ஆயத்தமாயிருந்து, நாம் பெற்ற விடுதலையைப் போக்கிவிடுவான்.

(ஊ) சாத்தான் நமது உள்ளத்தில் விரக்தியை உருவாக்கி, நம்மைக் கவலைக்குள்ளாக்குவான்; குறிப்பாக அடுத்த நிலைபற்றி நம்மைக் கலங்கச் செய்வான். இயேசுவின் வாக்குத்தத்தத்தை வேரோடு பிடுங்கிவிடவே முயற்சிப்பான். "ஆகையால் என்ன உண்போம், என்ன குடிப்போம், என்ன உடுப்போம் என்று கவலைப்படவேண்டாம்" (மத் 6:31), என்ற வார்த்தைகளில் நாம் நம்பிக்கை வைக்காதபடி உலகத்திற்கு அடுத்தவைகளை நம்முன் குவித்து, நமது பேராசையினால் கவலையை நம் உள்ளத்தில் உருவாக்குவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(எ) கடைசியாக, சாத்தான் நற்செய்தியையே நற்செய்திக்கு எதிராகத் திருப்பி விடுவான். இதற்காகத் திருமறை வாக்கியங்களையே தாராளமாக உபயோகம் செய்வான். சில சந்தர்ப்பங்களில் சொல்லப்பட்ட வார்த்தைகளையும், நடந்த நிகழ்ச்சிகளையும் மேற்கோள் காட்டி, நற்செய்திக்கு எதிராகப் போர் தொடுப்பான். விசேடமாக, புதிய ஏற்பாட்டுப் போதனைகளுக்கு எதிராகக் காணப்படும் பழைய ஏற்பாட்டுச் செயல்களை (யுத்தமார்க்கத்தைச் செயல்களை) தனக்கு ஆதாரமாகப் பயன்படுத்தி, நாம் பெற்ற நற்செய்தியைத் திரித்துவிடுவான். 'கடவுள் அன்பானவர்' என்பதை நாம் அறிந்திருக்க, 'அவர் கோபமானவர்' என்பதற்குத் திருமறையையே ஆதாரம் காட்டுவான்.

இவ்விதம், விசுவாசியொருவனிடம் சாத்தான் செய்யும் நயவஞ்சகங்கள் அநேகம். இவற்றில் நாம் ஒருசிலவற்றையே மேலே குறிப்பிட்டோம். இந்தப் பொல்லாங்கன் எய்யும்அம்புகளை எப்படித் தடைசெய்யலாம் என்பதை நமது இரண்டாவது குறிப்பில் பார்ப்போம்.

(2) நமது இரட்சிப்பு அநுபவம், நமது மனமாற்ற நிலை போதாது என்று அவன் (சாத்தான்) நம்மை ஏமாற்ற முனைகிறபோது, நமது குறைவை நாம் ஒப்புக்கொள்ளுவதினாலேயே அவனுக்குரிய மாறுத்தரத்தைக் கொடுக்கலாம். ஆம், நான் குறைவுள்ளவன்தான், நான் பெலவீனன்தான் (2 கொரி 12:9); எனது இரட்சிப்பு இன்னும் நிறைவடையவில்லை தான் - எனவே தான் எனக்கு இயேசு அநுதினமும் தேவை, அவரே என் பாவங்களை மன்னிப்பவர், அவரே என்னை நிறைவுபடுத்துபவர், அவரே என்னை முழுமையாக் ஆக்குபவர் என்ற பதில்களை நாம் கொடுத்து சாத்தானை வெல்ல வேண்டும்.

(ஆ) நமக்குச் சொந்தமான எவ்வகை நீதித்தன்மையினாலும், நாம் நீதிமான்களாக்கப்படுவதில்லை. நமது நீதி, நாம் கிறிஸ்துவினூடாகக் கடவுளில் வைக்கும் நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது (ரோமர் 5:19; 3:25). கடவுள் தமது கிருபையினால் அதை நமக்கு இலவசமாய்த் தருகிறார். அவருடைய கிருபையினாலேயே நாம் மீட்கப்பட்டோம். கடவுள் இம்மட்டாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16). இவ்விதமாய் நாம் நமது இருதய ஆழத்தில் அறிக்கை செய்தால்; நமது சமாதான உணர்வும், நமது தூய்மையின் உணர்வும் நம்மில் நிலைத்திருக்கும். அவற்றைச் சாத்தானால் அழிக்கவே முடியாது. இந்த உள்ளான உணர்வு உறுதியினால்; நமக்கு நோய் ஏற்பட்டாலும், துன்பம் ஏற்பட்டாலும் நாம் மனக்கலக்கம் அடையோம் - பயப்படமாட்டோம். என்னுடைய நேரத்தின்படி அல்ல, கடவுளுடைய காலத்திலேயே அவர் எனக்கு எல்லாவற்றையும் நிறைவாக்குவார் என்ற விசுவாச உறுதியோடே நாம் பொறுத்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) நாம் பெற்ற விசுவாசம் அழிந்துவிடாதபடி நாம் காக்கவேண்டும். நெருப்பு சாம்பல் பூக்காதபடி, நாம் காக்க வேண்டும். எப்போது நமது விசுவாசத்திற்கு அனல் மீட்டிக்கொண்டிருக்க வேண்டும் (2 தீமோ 1:6). கிறிஸ்துவில் நாம் போட்டு விட்ட அடித்தளம் மிகவும் பலம் வாய்ந்தது, அதை எவருமே அசைக்கமுடியாது. எனவே, சாத்தானின் நச்சரிப்பைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதேயில்லை, அவனால் நம்மை வெல்ல இயலாது. நாம் பெலவீனமடைகிறபொழுது, நமக்காகக் கிறிஸ்து தம் தந்தையாரிடம் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் என்பதை நம் மனதிற்கொள்ள வேண்டும் (எபி 7:23). கிறிஸ்து உயிரோடிருப்பதினால்தான் நாம் உயிரோடிருக்கிறோம் (கலா 2:20). எனது ஆண்டவர் உயிரோடிருக்கிறார் என்பதை நான் அறிவேன் என்று ஒருவன் சொல்லக்கூடுமென்பதை நான் அறிவேன் என்று அன்பிற்காகவும் எப்பொழுதும் தாகமுடையோனாய் உள்ளான் என்பதே பொருள்.

(ஈ) பாவமன்னிப்பு, தூய வாழ்வு, விண்ணகம் ஆகியவை ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாதவை; அவற்றைப் பிரிக்க முடியாதவாறு இணைத்திருப்பவர் கடவுளே. எனவே பாவமன்னிப்புப் பெற்று, மீட்படைந்த ஒருவன் தூய வாழ்வு வாழ்கிறவனாய் இருக்கிறான். அவன் விண்ணகத்தையும் சுதந்தரித்துக் கொள்கிறான். எனவே நாம் தூய்மையை இழந்து விடுவோம் என்று சாத்தான் சொன்னால், அது மெய்யாகாது. நம்மை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருக்கிறபடியால், அவர் தமது தூய ஆவியானவரால் விசுவாசிகளைக் கழுவி விடுவார். நாம் தூய்மையில் முழு வளர்ச்சி இன்னமும் அடையவில்லை என்பது தான் உண்மை நிலையே தவிர, தூயராய் இன்னமும் ஆகவில்லை என்பது உண்மைக்குப் புறம்பானதாகும். எனவே, விசுவாசியொருவன், தான் இதுவரை பெற்றுள்ள அருள் நலங்களுக்காக ஆண்டவரை எப்பொழுதும் துதிப்பவனாகவே இருப்பான்.

(உ) இதேபோன்று, நாம் இன்றும் முற்று முழுதான விடுதலை பெற வில்லையாயினும், இதுவரை அடைந்துள்ள விடுதலை அநுபவத்திற்காகக் கடவுளைத் துதித்தல் வேண்டும். இதுவரை நாம் அடைந்தது, இனிப்பெறப் போகின்றவற்றின் முதற்கனியே. அறுப்புக் காலத்தில்தான் ஒருவன் முழுப்பலனையும் பெறமுடியும். எனவே, அறுப்புக்காலம் வரும்வரை நாம் பொறுமையோடு காத்திருத்தலே முறை. ஆகையால் அக்காலம் வரும்வரை, அதாவது கடவுள் யாவற்றையும்முழு நிறைவுக்குக் கொண்டுவரும் காலம் வரை, நம்மில் இன்னும் காணப்படும் பாவச்சுமையை மனமகிழ்ச்சியோடு சுமப்போமாக. தன் ஒரே மைந்தரென்றும் பாராமல், நமக்காகத் தம்மைந்தரையே தந்த கடவுள், அவரோடுகூட எல்லா நற்பேறுகளையும் நமக்குத்தருவார் என்பது நிச்சயம் அல்லவா? (ரோமர் 8:32). எனவே சாத்தான்காட்டும் மாயையான விடுதலையை நாம் நம்பாதிருப்போமாக.

(ஊ) கடவுள் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராய் இருப்பார். அவர் ஒருக்காலும் ஆசைகாட்டி ஏமாற்றுபவர் அல்ல. எனவே நாம் கவலைப்படுவதினால் என்ன பயன்? நமது உயரத்தைப்பற்றி நாம் கவலைப்படுவதினால், ஒரு அங்குலமாவது நாம் வளர்ந்து விடுவோமா? எனவே, சாத்தான் நம்மைக் கவலைக்குள்ளாக்கும் போது, ஏமாறாதிருப்போமாக. நாளைய தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைகளை நாளைக்கு வைத்துக்கொள்வோம் (மத் 6:34); அந்தந்த நாளுக்கு அதனதன் தொல்லை போதும். நாம் எதற்காகக் கிறிஸ்துவினால் பிடிக்கப்பட்டோமோ, அதுவே நமது இலக்காய் இருக்கட்டும்; அப்பொழுது எல்லா அறிவிற்கும் மேலான சமாதானத்தைக் கடவுள் நமக்குத் தந்தருளுவார்.

(எ) கடைசியாக, நாம் சாத்தானுக்குக் கொடுக்கும் பதில் இதுவாயிருக்கட்டும். நமது நற்செய்தி (சுவிசேஷம்) ஆண்டவராகிய இயேசுவிலேயே தங்கியுள்ளது; நமது சுயநீதியிலோ அல்லது நீதிச்சட்டத்திலோ அல்லது திருக்கட்டளையிலோ அது தங்கியிருக்கவில்லை. அது கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பதிலும், அவருக்கே கீழ்ப்படிதலிலும் தங்கியிருக்கிறது. நமது நற்செய்தி பயப்படுதலில் அல்ல, அன்பிலும் ஒப்படைப்பிலும் தங்கியுள்ளது. எனவே, நாம் கிறிஸ்துவில் எதைப் பெற்றுக்கொண்டோமோ, அதில் உறுதியாய் நிலைத்திருப்போமாக; அப்பொழுது நாம் கிறிஸ்துவை அறிகிற அறிவில் நிச்சயம் வளர்ச்சியடைவோம். எனவே, நாம் இயேசுவையே நோக்கியவண்ணம் நமக்குக் குறிப்பிட்டுள்ள ஓட்டப் பந்தயத்தில் எந்த இடர் வந்தாலும் பொறுமையோடு ஓடுவோமாக (எபி 12:1); பாவிகளால் தமக்கு எவ்வளவோ பெரிய எதிர்ப்பு உண்டானபோதிலும் அசையாது நின்ற ஆண்டவரை நினைத்துக் கொள்வோமாக. அப்படிச் செய்வது நாம் சாத்தானுடைய நயவஞ்சகங்களினால் மனச்சோர்வோ, விசுவாச தளர்ச்சியோ அடையாதிருக்க நமக்கு உதவியாயிருக்கும் (எபி 12:3).

*--------------------*

*------*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி 56
பகு 50

T|317|02|0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org